விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 18 வெள்ளிக்கிழமை (03.07.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 196

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே



# மகிந்தவுக்கு இடமில்லை மறுத்தார் மைத்திரி!

## நேற்றைய கூட்டத்தில் திட்டவட்டம்



(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிடுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இடமளிக்க முடியாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தவுக்கு எதிராக இன்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

தேர்தலில் போட்டியிடக்கூடாது என்றும் வேட்புமனுத்தாக்கல் செய்யக்கூடாது என்றும் வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

சில தொழிற் சங்கங்களும் அரசியல் கட்சிகளும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன. கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

மக்களால் நிராகரிக்கப்பட்ட மகிந்த 24ஆம் பக்கம் பார்க்க....

## அரச வாகனத்துக்கு கட்டணம் ஜனாதிபதி அதிரடி உத்தரவு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருப்பவர்கள், தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரச வாகனங்களை பயன்படுத்தினால் அதற்கான கட்டணங்களை அறவிடுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சுகளின் செயலாளர்களுக்கு பணித்துள்ளார்.

தேர்தல் நடவடிக்கைகளுக்காக அமைச்சர்கள், அரசாங்கத்தின் வாகனத்தை பயன்படுத்தினால் அதற்கான கட்டணங்களை அறவிடுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே யோசனையை முன்வைத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, தற்போதைய 24ஆம் பக்கம் பார்க்க....

## தனிக் கூட்டணியில் மகிந்த போட்டியிடுவார்

### பசில் அறிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனியான ஓர் கூட்டமைப்பில் போட்டியிடுவார் என முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கட்சிக்குள் இருந்து கொண்டு காலைப் பிடித்து இழுப்பது மிகவும் ஆபத்தானது. எனவே நம்பிக்கையானவர்களை இணைத்துக்கொண்டு தேர்தலில் 24ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சுப் பதவிகளுக்கு அதிகாரமுண்டு தேசப்பிரிய

(கொழும்பு)

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும் அமைச்சரவை அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் ராஜாங்க அமைச்சர்கள் பதவிகளுக்கு அதிகாரம் உண்டு என தேர்தல் ஆணையாளர் மகந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னதாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் அமைச்சரவை அமைச்சர்களுக்கு மட்டுமே அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

எனினும், புதிய சட்டங்களின் அடிப்படையில் பிரதி அமைச்சர்கள் மற்றும் 23ஆம் பக்கம் பார்க்க....

## கொலைக் குற்றவாளிகள் மூன்று பேருக்கு மரண தண்டனை

### நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு

(கொழும்பு)

கச்சாய் மற்றும் மந்துவில் பகுதிகளில் இடம்பெற்ற இரு வேறு கொலைச் சம்பவங்களில் ஈடுபட்ட 3 குற்றவாளிகளுக்கு யாழ்.மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

சாவகச்சேரி - கொடிகாமம், கச்சாய் என்ற இடத்தில் செல்லையா பொன்னுராசா என்பவரை கொலை செய்ததாக சிவபாலு கிருஸ்ண குமார், சுந்தரலிங்கம் செந்தில்குமார் ஆகிய இரண்டு எதிரிகளுக்கும் மந்துவில் பகுதியில் இடம் பெற்ற மோதலில் குஞ்சைய என்பவரின் கொலை தொடர்பில் ஏஸ்லிம் என்பவருக்கும் எதிராக சட்டமா அதிபரினால் குற்றஞ் சுமத்தப்பட்டு, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்கிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணையின்போது, அரச சட்டத்தரணி, திருமதி நளினி சுபாகரன் 24ஆம் பக்கம் பார்க்க....

## வீணைச் சின்னத்தில் ஈ.பி.டி.பி போட்டி?

### இறுதி முடிவு விரைவில் என்கிறார் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்றத்துக்கு நடைபெறவுள்ள தேர்தலில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தனித்து போட்டியிட வேண்டும் என்பதே கட்சியின் விருப்பம் என அதன் செயலர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

எனினும் அது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றும் அவர் கூறுகிறார்.

இன்று வெள்ளிக்கிழமை கொழும்பில் கட் 24ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவை தோற்கடிக்க கூட்டணி அமைக்கத் தயார்



### பீல்ட் மார்ஷல் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி தனித்துப் போட்டியிடும் என அறிவித்திருந்த அதன் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத பொன்சேகா, மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அதிகாரத்துக்கு வரக்கூடிய அச்சுறுத்தல் எழுந்தால், அவரைத் தோற்கடிப்பதற்காக கூட்டணி அமைக்கத் தயார் என்று தெரிவித்துள்ளார்.

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் தான் போட்டியிடவுள்ளதாக மகிந்த ராஜ 24ஆம் பக்கம் பார்க்க....

## எந்தச் சவால்களையும் நாட்டுக்காக ஏற்கத் தயார்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் எந்த சவாலையும் வெற்றி கொள்ள போவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்த சவால்களை எதிர்கொள்ளவே தான் ஜனாதிபதி பதவிக்கு தெரிவாகியதாகவும் எந்த சவாலாக இருந்தாலும் தளராமல் அதனை எதிர்கொள்ளும் பலம் தனக்கு இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அரநாயக்க ரிவிசந்த மத்திய மகா வித்தியாலயத்தின் புதிய தகவல் தொழில்நுட்ப ஆய்வு கூடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு பேசும் போதே ஜனாதிபதி இதனை கூறியுள்ளார்.

நாட்டில் உள்ள சகல பாடசாலைகளிலும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பது தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதனை தவிர சமூகத்திற்கு பாரிய அனர்த்தமாக மாறியுள்ள போதைப் 23ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிநிலை வெற்றிடங்கள்

ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

**01. சங்கீத ஆசிரியர்**

**தகைமைகள்**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சங்கீத பாடத்தில் பட்டத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்.
2. பெண்பாலார் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.
3. சம்பளம் மாதம் ரூபாய் 18000/=க்கு குறையாது வழங்கப்படும்.
4. இல்லத்தில் தங்கியிருந்து கல்வி பயிற்றுவித்தல் வேண்டும்.
5. உணவு பராமரிப்பு செலவு இல்லத்தினால் இலவசமாக வழங்கப்படும்.

**குழந்தைகளைப் பராமரிப்பதற்கான பெண் பராமரிப்பாளர்கள் (warden)**

**தகைமைகள்:**

1. க.பொ.த சாதாரண தரத்திற்கு குறையாத கல்வித் தகைமை
2. அரச பதவிகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற அதிபர், ஆசிரியர்கள், ஏனைய அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பராமரிப்புத்துறையில் அனுபவம் மிக்கவர்கள் இப் பதவிக்கு விண்ணப்பித்தல் விரும்பத்தக்கது.
3. வயதெல்லை 35-65
4. விடுதியில் தங்கியிருப்பது அவசியம், உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.
5. விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையராகவும் இல்லக் குழந்தைகளை அன்போடும் பாசத்தோடும் அரவணைத்து சைவ நெறி ஒழுக்கத்திற்கு அமைவாக வழிப்படுத்தும் ஆற்றல், தியாக சிந்தனை, சமூக அர்ப்பணிப்புமிக்க உணர்வோடு இருத்தல் வேண்டும்.

**# சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

**குறிப்பு:**

**#.கடித் உறையின் இடது பக்க மேல் மூலையில் எந்த பதவிக்கான விண்ணப்பம் என்பதை தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

விண்ணப்ப் முடிவுத் திகதி :- 09-07-2015

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:-

**தி.இராசநாயகம், தலைவர்,மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**
**தொலைபேசி இல : 077 0604950, 0214923118**
**மின்னஞ்சல் முகவரி** : rasa46@yahoo.com

(C-1467)

## INVITATION FOR BID
## VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
## NORTHERN PROVINCIAL COUNCIL

### CONSTRUCTION OF MARKET AT MARUTHANARMADAM - STAGE II

1. The Chairman,Pradeshiya Sabha Procurement Committee on behalf of the Valikamam South Pradeshiya Sabha invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
2. Bidding will be conducted through National Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of building construction for grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD).
4. Qualifications requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section V).
5. Interested bidders may obtain further information from **Secretary, Valikamam South Pradeshiya Sabha, Chunnakam (T.No: 0212240017 Fax: 0212240327 )** and inspect the bidding documents at the same place on any working days from 9.00 hrs to 15.00 hrs from 03-07-2015 to 23-07-2015.
6. A complete set of Bidding Documents in English language may be purchase by interested bidders on the submission of a written application to the **Secretary, Valikamam South Pradeshiya Sabha (T.No: 0212240017 Fax: 0212240327 ) from 03-07-2015 until 23-07-2015 from 9.00 hrs to 15.00 hrs working days upon payment of a non – refundable fees of LKR 7,500.00.** The method of payment should be by cash.
7. Bids (original & Duplicate) shall be delivered to the **Chairman, Valikamam South Pradeshiya Sabha, Chunnakam on or before 14.00 Hrs on 24-07-2015** Late Bids will be rejected. Bidders must write Bid ID on left hand upper corner of envelop for each. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre bid conference will be held at the **Office of Valiakamam South Pradeshiya Sabha, Chunnakam. Commencing at 10.00 Hrs on 13-07-2015.**
9. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the Table.

| Bid ID | Description of Work | Contract Period | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|
| | | | | Security Amount (LKR) | Validity |
| NP/14/41/15(1)2/Maru.Market /04/Stage II | Construction of Market at Maruthanarmadam – Stage II | 10 Months | C5 or above (Buildings) | 600,000.00 | Till 18 Dec.2015 |

**T.Piragash,**
**Chairman,**
**Valikamam South Pradeshiya Sabha,**
**Chunnakam.**

(C-1464)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## A/L-2015 தொழில்நுட்பபிரிவு

மாணவர்களுக்கான மாபெரும் விசேட கருத்தரங்கு SCI- Tec, Bio-Tec, Eng-Tec ஆகிய பாடங்களுக்கு அலகு ரீதியான மீட்டலும் எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள்களும் விசேட திறமை வாய்ந்த வளவாளர்களினால் மிக நுணுகி ஆராயப்படும்.

(50 மணித்தியாலத்திற்கு குறையாத நேரத்தில்)

8-7-2015 இல் ஆரம்பமாக இருப்பதால் இடவசதி அச்சடிக்கப்பட்ட குறிப்புகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு 6-7-2015 இற்கு முன் காலை 8.00-2.00 மணிவரை உங்கள் பதிவுகளை D.M.I அலுவலகத்தில் மேற்கொள்ளவும்.

(999) D.M.I - ஆரியகுளம் சந்திக்கு அருகில்



## துயர் பகிர்கின்றோம்



திருமதி
**விஸ்வலிங்கம் பாக்கியம்**

எமது அலுவலக பணியாளர் விஸ்வலிங்கம் விக்னேஸ்வரன் அவர்களது அன்புத் தாயார் திருமதி விஸ்வலிங்கம் -பாக்கியம் அவர்கள் கடந்த 27-06-2015 அன்று இறைபதம் அடைந்த செய்தி எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்துகிறது. அவரின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தவர்களுக்கு எமது அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்**
**பருத்தித்துறை பிரதேச சபை**

(C-1468)

## மரண அறிவித்தல்



அமரர் **செல்லத்துரை நிதாசன் (பாபூஜி)**

ஊரெழு மேற்கு சுன்னாகத்தை நிரந்தர முகவரியாகவும் இல102, அண்ணா வீதி, ஆனந்தபுரம் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை நிதாசன் 01/07/2015 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை (தாடி மாஸ்ரர்) மற்றும் சிவசோதி தம்பதிகளின் அன்பு மகனும், யசோதாவின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும், புருசோத்தமன் (பிரான்ஸ்) அன்புத் தந்தையும், பிரிந்தினி (லண்டன்), ஜெகந்தினி வாசன் (லண்டன்), காலஞ்சென்றவரான புருசோத்தமன் மற்றும் கரன் (ஆசிரியர் கலாசாலை கோப்பாய்-கிளி தர்மபுரம் மத்திய கல்லூரி) ஆகியோரின் சகோதரனும், மிதிலா,மதுசா,மதுரா, ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தில்வேல், தமிழ்வாணி, நீலாம்பரி (கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை) ஆகியோரின் மைத்துனரும் நேசிகா, தபோதரன்,ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03-07-2015) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இல.102,அண்ணா வீதி,
ஆனந்தபுரம், கிளிநொச்சி.

தகவல்
குடும்பத்தினர் (0773643817)

## கண்ணீர் அஞ்சலி



**செல்லத்துரை நிதாசன் (பாபூஜி)**

எமது சக உடற்கல்வித்துறை மாணவன் செ.கரன் அவர்களின் அன்புச் சகோதரன் அமரர் செல்லத்துரை நிதாசன் (பாபூஜி) இறைவனடி சேர்ந்ததையிட்டு அன்னாரினது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

**மாணவர் மன்றமும்**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சமூகமும்**
**கோப்பாய்.**

(1008)

# தமிழ் மக்களை விழிப்புடன் இருக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களை ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து விழிப்படையுமாறுதமிழர் விடுதலைக் கூட்டணி கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக அக்கட்சியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி விடுத்துள்ள ஊடாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்கள் சார்ந்த சகல நடவடிக்கைகளிலும் பிரதிநிதித்துவப்படுத்தும் தார்மீக உரிமை தமிழர் விடுதலைக்கூட்டணிக்கே உணடு. பிரபல சட்ட மாமேதைகளான (இராணி அப்புக்காத்து) தந்தைசெல்வநாயகம், அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் 1942 களில் சோல்பரி ஆணை க்குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற்காக தமிழ்க் காங்கிரஸ் என்ற அமைப்பை உருவாக்கினார்கள். அவ்விரு வரும் பலமிக்க சட்டவல்லுநர்கள் பலருடன் இணைந்து பாராளுமன்றம் புகுந்தனர். துரதிர்ஷ்டவசமாக இவ்விரு தலைவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தின் காரணமாககட்சி இரண்டாக பிளவுபட்டது. தந்தை செல்வா தலைமையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் ஜீ.ஜீ. பொன்னம்பலம் தலைமையில் தமிழ் காங்கிரஸ் கட்சியும் தொடர்ந்து இயங்கிவந்தன.

ஆனால் 1972 ஆம் ஆண்டு புதியகுடியரசுசட்டம் அமுல்படுத்தப்பட்ட வேளையில் இவ்விருதலைவர்களும் தமது பேதங்களை மறந்து ஒன்றாக இணைந்து தமிழர் ஐக்கிய முன்னணி என்ற அமைப்பை உருவாக்கி பின்னர் அது தமிழர் விடுதலைக் கூட்டணி என்று பெயர் மாற்றப்பட்டு மத்திய செயற்குழு உறுப்பினர்களையும் இருசாராரும் ஏகமனதாக தெரிவு செய்துசெயற்பட்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியை வளர்த்து எடுப்பதற்காக தமிழரசு கட்சியை அதன் ஸ்தாபகர் செல்வா முடக்கி வைத்து விட்டு செயற்பட்டார். அதனைமேலும் பலப்படுத்துவதற்காக தனது தலைவர் பதவியை ஜீ.ஜீ. பொன்னம்பலம் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் அன்றைய தலைவர் மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஆகியோருடன் பகிர்ந்து கொண்டார்.

தமிழரசுக் கடசியின் இறுதிக் கூட்டம் 18.12.1974 அன்று தந்தையை கௌரவிப்பதற்காக கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் வெள்ளி விழாவாக கொண்டாடப்பட்டது.

அந் நிகழ்வில் அமரர் தொண்டமானால் தந்தை செல்வாவுக்கு" மூதறிஞா" என்ற கௌரவபட்டம் வழங்கப்பட்டது. அன்று தந்தைக்கு பொன்னாடை அணிவிக்கும் பெருமை எனக்கும் கிடைத்தது.

26.04.1977 இல் தந்தை செல்வா தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகவே உயிர் துறந்தார்.

யாழ்ப்பாணம் முற்ற வெளி மைதானத்தில் அன்னார் தகனம் செய்யப்பட்ட அதே இடத்தில்தான் உதய சூரியன் சின்னம் பொறிக்கப்பட்ட 80 அடி நினைவுத் தூபி நிறுவப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க தமிழர் விடுதலைக் கூட்டணியின் சரித்திரத்தைமாற்றி முழு சமுதாயத்தையும் ஏமாற்றி யாழ்ப்பாணம் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கும் தவறான விளக்கங்களையும் கூறி இருவர் தவறாக வழி நடத்துகின்றனர்.

சம்பந்தனும் சேனாதிராசாவும் ஒருபெரும் தலைவருக்கு எத்தகைய அவமானத்தை உண்டு பண்ணுகின்றோம் என தெரியாமல் செயற்படுகின்றனர்.

ஈழத்து காந்தி மீது மதிப்பும் மரியாதையும் வைத்துள்ள எவரும் இத்தகைய செயற்பாடுகளை பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். வேணடும் என்றே இவ்விருவரும் தம் சுய நலத்திற்காக இவ்வாறு செயற்படுகின்றனர்.



தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் என்ற வகையில் எனது புனிதமான கடமை யாகக் கருதி தமிழரசுக் கட்சியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் கலைத்து விடுமாறு கேட்டுக் கொள்கின்றேன். தந்தை செல்வா மீது விசுவாசமும் மதிப்பும் கொண்ட அனைவருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கதவுகள் என்றும் திறந்தே இருக்கும்.

சேனாதிராசாவால் உருவாக்கப்பட்ட அகில இலஙகை தமிழரசுக் கட்சி கிளிநொச்சியில் பல தடவைகள் சந்தித்து அதுவும் குறிப்பாக 14.10.2003 அன்று விடுதலைப் புலிகளின் உப தலைவர்களில் ஒருவராக செயற்பட்ட ஒருவரின் கட்டளைக்கு அமைய தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் மறைந்து 26 வருடங்களின் பின்னர் மோசடி மூலம் உருவாக்கப்பட்டதாகும்.

த.வி. கூட்டணி 2004 ஆம் ஆண்டு பிளவுபடுவதற்கு எதுவித காரணமும் இருக்கவில்லை. அன்று தொடக்கம் இன்றுவரை ஏறக்குறைய 10 ஆண்டுகள் கடந்துவிட்டன.

எமது பிரச்சினைகள் எதற்கும் எதுவித தீர்வினையும் பெற்றுக் கொடாதுமக்களை ஏமாற்றிவந்துள்ளனர். தடுப்பில் உள்ள இளைஞர்கள் பலர் பலவருடங்களாக சிறையில் வாடுகின்றனர்.

நிதி அமைச்சர் இது சம்பந்தமாக பேசுவதற்கு எவரும் தன்னிடம் தொடர்பு கொள்ளவில்லை. அவ்வாறு வந்த செய்தி உண்மைக்கு புறம்பானது எனக் கூறியுள்ளார்.

பெரும் சிக்கலைத் தரக்கூடிய அறிக்கைகள் முக்கிய பல உறுப்பினர்களால் அடிக்கடி வெளியிடப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் ஆதரவோடு பாராளுமன்ற ஆசனங்களை கைப்பற்றி விட்டு யுத்த குற்றங்களுக்காக புலிகளும் விசாரிக்கப்பட வேண்டும் என்று த.தே.கூட்டமைப்பு கூறுவது கழுத்தறுப்பிற்கு சமமானதாகும்.

ஆகவே தமிழ் அரசியல் கட்சிகள் அத்தனையும் ஒரு கொடியின் கீழ் ஒன்றிணைந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு மாற்றாக ஒரு பொது அமைப்பை தமிழ் மக்களின் நன்மைகருதி உருவாக்க வேண்டிய நிலைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தள்ளப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் இச் செய்தியை தமிழர் விடுதலைக் கூட்டணியின் அழைப்பிதழாக ஏற்று உங்கள் கட்சிகளின் முக்கிய பிரமுகர்கள் உட்பட நாளைமறுதினம்5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இல. 1077, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள த.வி.கூ. தலைமை அலுவ லகத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன். எவரேனும் பங்குபற்ற முடியாத நிலைமை ஏற்படின் 077 789 0171 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும் என அந்த அறிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## நேர்முகப்பரீட்சை பிற்போடப்பட்டுள்து

(யாழ்ப்பாணம்)

இன்று (03.07.2015ம் திகதி வெள்ளிக்கிழமை காலை9 மணிக்கு இல 26, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் முகவரியிலுள்ள வடமாகாண முதலமைச்சரின் அமைச்சு அலுவலகத்தில் நடைபெறவிருந்த வருமானப் பரிசோதகர் தரம்III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப்பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. இந்நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும் என முதலமைச்சரின் அமைச்சின் செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ




## ராசி பலன்

03.07.2015
(ஆனி 18, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
பிரதமை காலை 7.22மணிவரை
துதியை பின்னிரவு 5.42 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 3.08 மணிவரை
இராகுகாலம் 10.57-11.57 மணிவரை
சுபநேரம் 5.57-7.27 மணிவரை
வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | சூரி செவ் புதன் |
| | காலை 9.48ற்கு மகர-சந் | | குரு |
| | | | சுக் |
| சந் | | சனி | ராகு |

**மேடம்** நினைத்த காரியத்தை முடிப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள்,செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், எதிர்பாராத பயணங்களால் நன்மையுண்டு.

**இடபம்** சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள், பிரியமான சிலரோடு ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்.

**மிதுனம்** சில பிரச்சினைகளைக் கண்டு காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வேலைச் சுமை கூடும், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும்.

**கடகம்** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரும் வாய்ப்புண்டு, ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்.

**சிம்மம்** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், உடல் நலம் சீராகும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், ஆர்வத்துடன் தொழிலில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**கன்னி** வியாபாரத்தை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**துலாம்** வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

**விருச்சிகம்** உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன்வருவர், வருமானம் திருப்தி தரும், பாராட்டும் புகழும் கூடும் நாள், சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு

**தனுசு** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, தேகநலனில் தெளிவு பிறக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு.

**மகரம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டம் செல்லும்.

**கும்பம்** இறைவழிபாட்டில் ஆர்வம் கூடும், சிறிய வேலையொன்றில் பலமுறை அலைய நேரிடலாம், சயன சுகக் குறைவான நாள், தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**மீனம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், நண்பர்கள் சந்திப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவாவில் எதிரொலிக்கும் ஈழக்கதறல்கள்!


நடேசனின் மகன்


சுசிலாம்பிகை, குறிஞ்சி

“சிங்கள வெறிபிடித்த இலங்கை அரசின் மீதான பிடி நாளுக்குநாள் இறுகிக் கொண்டே செல்கிறது என்பதை ஜெனவாவில் நடைபெற்ற ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் 29ஆவது கூட்டத் தொடர் நிகழ்வுகள் உணர்த்துகின்றன” என்கிறார். பா.ம.க-வின் செய்தித் தொடரபாளரும் பசுமைத் தாயகம் அமைப்பின் நிர்வாகியுமான வழக்கறிஞர் கே.பாலு.

அந்தக் கூட்டத் தொடரில் பேசியதோடு மட்டுமில்லாமல் ‘மனித உரிமை மீறல்கள்’ என்ற தலைப்பில் இணைக்கூட்டம் ஒன்றையும் பிரித்தானிய தமிழர் பேரவை பங்களிப்போடு நடத்தி முடித்திருக்கிறார் அவர். அவரிடம் பேசியபோது....

**“ஜெனீவாவில் இப்போது நடைபெற்றுள்ள இந்தக் கூட்டம் எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது?”**

“2009 இல் இலங்கையில் போர் முடிந்த நிலையில் எல்லாமே முடிந்துவிட்டது என்றுதான் நினைத்தோம். தமிழ் நாட்டில் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன. ஆனால், இலங்கையில் மட்டும் காட்சிகள் துளிகூட மாறாமல் அப்படியே இருந்தன. ஈழத் தமிழர்கள் வஞ்சிக்கப்பட்டார்கள், ஏமாற்றப்பட்டார்கள், விரட்டப்பட்டார்கள். அப்படிப்பட்ட சூழலில்தான் பசுமைத் தாயகம் அமைப்பானது புலம்பெயர்ந்து வாழக்கூடிய ஈழத் தமிழர்களின் உதவியோடு பாதிக்கப்பட்ட மக்களை ஐ.நா முன் நிறுத்தி, ஈழத்தில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு நீதி விசாரணை வேண்டும் என்பதை உரக்கச் சொல்லியது. இன்று இலங்கைக்குக் கடிவாளம் போடக்கூடிய ஒரே அமைப்பு ஐ.நா மட்டும்தான். வருகிற செப்டம்பர் மாதம் ஐ.நா-வின் மனித உரிமை ஆணையத்தின் 30ஆவது கூட்டத் தொடர் நடைபெற உள்ளது. அதில், இலங்கையில் நடைபெற்ற இன அழிப்பு குறித்த அறிக்கையை ஐ.நா-வின் உண்மை கண்டறியும் குழு தாக்கல் செய்யவிருக்கிறது. அந்த அறிக்கைதான் ராஜபக்ஷவின் ஒட்டுமொத்த தலையெழுத்தையும் மாற்றி அமைக்கப்போகிறது.”

**“இறுதி விசாரணை அறிக்கை வெளிவருவதில் ஏதாவது சிக்கல் இருக்கிறதா?”**

“நிச்சயமாக. இலங்கை அரசு ஒரு மிகப் பெரிய இனப்படுகொலையை நிகழ்த்தியிருக்கிறது. ஈழத் தமிழர்களைக் கொத்து கொத்தாகக் கொன்று குவித்தது மட்டுமில்லாமல் வெள்ளை கொடியேந்தி சரணடைந்த விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களின் நிலை மர்மமாகவே இருக்கிறது. இவை அனைத்துக்கும் எங்களிடம் ஏகப்பட்ட ஆதாரங்கள் உள்ளன. அதனை ஐ.நா-வில் சமர்ப்பித்துவிட்டோம். இலங்கை அரசை போர்க் குற்றவாளியாக அறிவிக்கும் அந்த அறிக்கை வெளிவருவதை இலங்கை விரும்பவிலலை. அதனால், பல சூழ்ச்சிகளைக் கையாண்டு, அறிக்கை வெளிவரவிடாமல் தடை ஏற்படுத்தி வருகின்றனர்.”

**“இணைக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஐ.நா-வின் முக்கிய சாட்சிகள் யார்?”**

“விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய தலைவர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர். நடேசனின் மகன், புலித்தேவனின் மனைவி குறிஞ்சி, மலரவனின் மனைவி சுசிலாம்பிகை, உதயகுமாரின் மனைவி ஆகியோர் இதில் கலந்துகொண்டு இத்தனை ஆண்டுகாலம் தாங்கள் அனுபவித்து வரும் வேதனைகளைக் கண்ணீரோடு பதிவுசெய்தனர். அவர்களுடைய விசும்பல்களைத் தமிழர்கள் நீதிக்கான நல்லெண்ண தூதுவர் லீ ஸ்காட் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்ட நிபுணருமான ஜானினி கிரிஸ்டி பிரிமிலோ ஆகியோர் குறித்துக்கொண்டனர். இவர்களின் சாட்சியம் கல்நெஞ்சர்களையும் கரைக்கும். இந்த நான்கு சாட்சிகளுடன் இன்னும் ஏராளமான சாட்சிகள் ஐ.நா முன் வர தயாராக இருக்கிறார்கள். அவர்களைச் சரியான நேரத்தில் நாங்கள் ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தில் நிறுத்து வோம்.”


செல்வம், பாலு மற்றும் லீ ஸ்காட்

**“ ‘பசுமைத் தாயகம்’ என்பது சுற்றுச் சூழல் அமைப்பு. ஈழத் தமிழர் விவாகாரத்தை இது கையில் எடுத்திருப்பது சந்தர்ப்பவாதம் என்று சிலர் சொல்கிறார்களே?”**

“ஈழத் தமிழர்களுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்கித் தர வேண்டும் என்பதற்காகத்தான் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். சிலர், ஐ.நா-வின் நடவடிக்கைகளில் நம்பிக்கையின்றி எங்களுடைய முயற்சிகளை கொச்சைப்படுத்தி இருக்கிறார்கள். நினைவு தினத்தை அனுசரித்து விடுவதன் மூலம் மட்டுமே இலங்கையில் அமைதி திரும்பிவிடாது. ஐ.நா மன்றத்தின் விசாரணைகளை நம்புங்கள்.”

**“இறுதி விசாரணை அறிக்கைத் தாக்கலுக்குப் பிறகு என்னென்ன மாற்றங்களை இலங்கையில் எதிர்பார்க்கலாம்?”**

“இலங்கையில் நடைபெற்றது ஓர் இனப்படுகொலை. அதை கச்சிதமாக நிறைவேற்றியவர் ராஜபக்ஷ என்று விசாரணை அறிக்கை ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக, வந்தால் இலங்கையில் சிங்களர்களும் தமிழர்களும் ஒன்றாக வாழ முடியாது. தமிழர்கள் வாழ்வதற்கு தனி நாடு வேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தப்படும். மேலும், ராஜபக்ஷ போர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு அவர் என்னென்ன போர் குற்றங்களில் ஈடுபட்டார் என்பதை சர்வதேச நீதிமன்றம் விசாரிக்கும். இதைத்தான் பசுமைத் தாயகமும் பா.ம.க-வும் எதிர்பார்க்கிறது. செப்டம்பர் மாதம் நடைபெற இருக்கும் 30 ஆவது ஐ.நா மனித உரிமைகள் ஆணை யம் கூட்டத்தில் அன்புமணி ராமதாஸ் கலந்துகொள்ள இருக்கிறார். இந்த நடவடி க்கை களை தொடர்ந்து மேற்கொள்வோம்!”

-ஜூனியர் விகடன்-

---

# அதிசய உலகம்

### இறந்த தாத்தாவுடன் செல்ஃபி.... அரபுலகத்தை அதிர வைத்த சிறுவன்...



**Selfie** மோகம் அதிகரித்துள்ள இந்தக் காலக்கட்டத்தில், தங்களைத் தாங்களே படம் எடுத்துப் போடும் சுய ரசனையாக ஆரம்பித்த இது, நாளடைவில் ஒரு ட்ரெண்டாக மாறி நாளாந்த கடமைகளில் ஒன்றாக மாறியிருக்கிறது.

.போகும் வரும் இடங்களில் செல்ஃபி எடுத்த காலம் போய், தங்களுக்குப் பிடித்தவர்கள், பிரபலங்கள், நட்சத்திரங்கள் ஆகியோருடன் எடுத்து வருகின்றனர்.

தற்போது சவுதி அரேபியாவையும், அரபுலகத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் விதத்தில் இறந்துபோன தன்னுடைய தாத்தாவின் சடலத்துடன் செல்ஃபி எடுத்து முகநூலில் பதிவேற்றிள்ளார் பதின்மவயது சிறுவன் ஒருவன்.

சவுதி அரோபியாவின் மதீனாவில் உள்ள வைத்தியசாலையில் இது நடந்திருக்கிறது. ஜோன் ஒசாமா என்ற இந்த சிறுவன் Good Bye Grand-father என்பதை அரபு மொழியில் பதிந்து இந்த செல்ஃபியை தரவேற்றியுள்ளான்.

எனினும் இறந்துபோனவராகக் கருதப்படும் முதியவர் வாய் திறந்து கண்களும் முற்றாக மூடாமல் தென்படுகிறார்.

உடனடியாகவே கண்டனங்கள் எழுந்துள்ளதோடு, இறுக்கமான சட்டங்கள் கொண்ட சவுதியில் இந்த சிறுவனைத் தண்டிக்க கேட்டு கோரிக்கைகளும் கிளம்பியுள்ளன.

இதனைப் பின்பற்றி இன்னும் எத்தனை பேர் இப்படியான சடலங்களுடன் செல்ஃபி எடுக்க கிளம்பப் போகிறார்களோ?

# சமைப்போம் சுவைப்போம்

## பட்டாணி மசாலா



**தே.பொருட்கள்**

சின்ன உருளைக்கிழங்கு - 15
பச்சை பட்டாணி - 1 கப்
வெங்காயம் - 2
வெண்ணைய் - 1 டேபிள்ஸ்பூன்
இஞ்சி பூண்டு விழுது
மிளகாய்தூள் - 1 டீஸ்பூன்
**அரைக்க:** பாதாம் பருப்பு 5,
முந்திரிபருப்பு 5,
பொட்டுக்கடலை - 1 டேபிள்ஸ்பூன்
கசகசா -1 டீஸ்பூன், பட்டை - 1 துண்டு

**செய்முறை:**

சின்ன உருளைக்கிழங்கை வேகவைத்து தோலுரித்துக் கொள்ளவும். வெங்காயத்தை பொடியாக நறுக்கிக்கொள்ளவும். பாதாம்பருப்பு, முந்திரிபருப்பு, கசகசா மூன்றையும் அரை மணி நேரம் ஊறவைக்கவும்.

பட்டையையும் பொட்டுக்கடலையையும் வறுத்து ஊறவைத்த பருப்புகள், கசகசா எல்லாவற்றையும் சேர்த்து விழுது போல் அரைத்துக் கொள்ளவும். பாத்திரத்தை அடுப்பில் வைத்து வெண்ணய் சேர்த்து உருகினவுடன் வெங்காயத்தை பொன்னிறமாக வதக்கவும். பின்னர் பட்டாணி, உருளைக்கிழங்கு சேர்த்து வதக்கவும்.

அரைத்த விழுதை உப்புடன் சேர்த்து சிறிது தண்ணீர் விட்டு கொதிக்கவிடவும். இஞ்சி பூண்டு விழுது, மிளகாய் தூள், சேர்க்கவும். எல்லாம் சேர்ந்து நன்கு கொதித்தவுடன் இறக்கவும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 1008 கலசாபிஷேக விழா

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் உலக நன்மை வேண்டி விஷ்ணு சகஸ்ரநாம பாராயணம் 1008 கலச அபிஷேகம் ஒன்றினை எதிர்வரும் 6ஆம் திகதி நடத்தவுள்ளது. இது இந்தியாவிலிருந்து வருகை தரும் யாக ஆச்சாரியார்களால் நடத்தப்படவுள்ளது. இத்தகைய புண்ணிய கைங்கரியத்தில் பங்குபெறுவது எமது பெரும் பாக்கியமாகும்.

எமது முன்னோர்களது கிரியானுஷ்டங்களால் இவ்வுலகை மங்களகரமாக பரிபாலித்து வந்தனர். ஒவ்வொரு இறைபக்தர் இத்தகைய நல்ல கைங்கரியத்தில் தவறாது தனது பங்களிப்பையும் பங்குபற்றுதலையும் உலக ஷேமத்தின் பொருட்டு தனது கடமைய எண்ணிச் செயற்பட்டு வந்தனர்.

ஒவ்வொரு ஆலயங்களும் தமது கிரியைகள் நிறைவுறும் போது லோஹா சமஸ்தா சுஹினோ பவந்து உலகம் நலமாக இருக்கட்டும் என்று வாழ்த்துவது தவறாது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

ஆனால் அதை இதய சுத்தியுடன் மனமுவந்து வாழ்த்தும் உள்ளுணர்வு எங்களிடமிருந்து அருகி விட்டது. துன்பம் வரும் போது அவரவர் தன் இஷ்டப்படி இரந்து மன்றாடுவது, துயரம் விலகியதும் இறை சிந்தனையை அறவே மறந்து வாழ்வதுமே இன்றைய கஷ்டங்களினது அளவிலாய பெருக்கத்திற்கு காரணம் என்பதை நாம் உணருகிறோமில்லை. பிறரை நேசிப்பது, பிறர் வாழ்வில் மகிழ்ச்சி காண்பது, பிறர் நன்மைக்காக இறை பிரார்த்தனை செய்வது, காலாதிகாலமாக முனிவரும் மகரிஷிகளும் உலகிற்கு காட்டிய நன்னெறிகள்.

அந்த நன்னெறியில் நாம் வாழ நம்மை இணைத்துக் கொண்டு பங்களித்து மகிழ இத்தகைய சந்தர்ப்பங்கள் அவ்வப்போது இறையருளால் ஏற்படுத்தப்படுவது உண்டு. அத்தகையதோர் நல்ல வாய்ப்பே இந்த 1008 கலசாபிஷேகமாகும்.

அதில் எமது பங்களிப்பு என்ன? அதனை எவ்வாறு செய்து நாம் உலக நன்மைக்கு உந்துகோலாக முடியும் என்பதை ஒவ்வொரு தனிமனிதனும் சிந்தித்து செயற்படக்கடமைப்பட்டுள்ளான்.

அபிஷேகத்திற்கு பணத்தைக் கட்டிப் பற்றுச்சீட்டுப் போட்டுவிட்டு வாழாவிருப்பது எமது பங்களிப்பாக ஆகமுடியாது. எல்லா ஆலயங்களும் இத்தகைய விஷேட கிரியைகளின் போது பூ,பழம், இளநீர் அபிஷேகத் திரவியங்கள், பால் என்பவற்றை தாராளமாகத் தந்துதவலாம் என்று அறிவிப்பது மரபு.

ஆனால் நாம் இதைப் பெரிதாக பொருட்படுத்துவதில்லை. வெறுமனே பணத்தை பற்றுச்சீட்டிட்டு விட்டு நமது பிரார்த்தனை முடிந்தது என எண்ணி மகிழ்கிறோம்.

இதயசுத்தியுடன் மனம் நெகிழ்ந்து ஒரு சிறு அளவிலான பால், பூக்கள் இயலுமான அபிஷேகத் திரவியங்கள் இவற்றை நாமாகச் சேர்த்து அர்ப்பணமாக ஆலயத்தில் கையளித்து மனம் நிறைவுறும் போதே அப்பிரார்த்தனை வலுப்பெறுகிறது, உள்ளம் இணைகிறது, தெய்வ அன்பு பரிணமிக்கிறது.

இராமர் அணைகட்டியபோது சிறு அணில் தனது பங்களிப்பை அளித்து மகிழ்ந்த கதையை நினைவு கூருங்கள். எமக்குள்ள இயல்புக்கேற்ப இதய அன்புடன் தூய்மையாக மனம் நெகிழ்ந்து மனம் நோகாது அளிக்கும் காணிக்கைகளையே இறைவன் மனம் விரும்பி ஏற்றுக் கொள்வார். அங்கு தான் அந்தப் புனித கிரியைகள் தெய்வான்பு நிறைந்து உடனடி நன்மைகளை குவித்து நிற்கமுடியும்.

ஆகவே இதைக் கருத்திற் கொண்டு இந்த உலக நன்மை அவாவிய தெய்வ கைங்கரியத்தில் நாமும் ஒரு சிறு அணிலாவோம். எம் கையால் சேர்த்து எமது சிறு உழைப்பால் வாங்கிய புனிதப் பொருட்களை எம்கையால் பறித்தெடுத்த புஷ்பங்களை, துளசி இலைகளை வாரி வழங்குவோம்.

தேவஸ்தான வேண்டுதலை ஏற்று நாமும் இப்புனித கைங்கரியத்தால் இவ்வுலக சாந்தியை உலக நன்மை அவாவும் அடியவர் வரிசையில் ஒன்றிணைய முன்னிற்போம். பங்களிப்புச் செய்து மனநிறைவு பெறுவோம்.எங்கள் தூய அன்பு இதயம் இந்த 1008 கலச அபிஷேகத்தை மகாசக்தி வாய்ந்ததாக மகிமைப்படுத்த முன்னிற்போம்.

கு.சண்முகநாதன்
கொக்குவில்


**டயானா பிளாஸ்டிக் மீள் சுழற்சி**

கழிவு பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்
வாளிவேசன்-1Kg-50/=
கதிரை-1Kg-80/=
கான்-1Kg-35/=
(336)

**தொடர்புகளுக்கு:-0212228680, 0775925088**
**108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**
சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள்


## பொதுத்தேர்தலில் இணைந்து போட்டியிட சரத் பொன்சேகாவுடன் ஐ.தே.கட்சி பேச்சு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் சரத் பொன்சேகாவின் கட்சியுடன் இணைந்து போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சி கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது.

இதன்படி ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம,சரத் பொன் சேகாவை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

ஏற்கனவே தேர்தலில் தனித்து போட்டியிடுவதென்று சரத் பொன்சேகாவின் கட்சி தீர்மானித்துள்ளது.

எனினும் ஊழல் மிக்க மகிந்த ராஜபக்ஷவினால் ஆட்சிக்கு வரமுடியும் என்ற நிலை ஏற்பட்டால், ஏனைய கட்சிகளுடன் இணைந்து போட்டியிடப்போவதாக சரத் பொன்சேகா அறிவித்துள்ளார். (இ-7)


**அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில்**
**இன்று பதின்மூன்றாம் திருவிழா**



**பந்த வினை கழைய கந்தனே வந்திடுவான்**

இணுவைத் திருவூரில் எழுந்த நல் ஆலயத்தில்
குமரன் குடிகொண்டான் கோபுரமும் வாசலிலே
பேரருட் திறன் விளங்கும் பெருங்கோயில் வாழிடமாய்
பெருகி வரும் அடியார்கள் குறைகளையே தீர்த்திடவே
பச்சை மயில் மீதேறி பாங்கிருவர் மருங்கிருக்க
பன்னிருகை வேலவனும் பவனி வர வீதியிலே
கண்டா மணியோசை காற்றினிலே எழுந்து வர
கந்தா கந்தா என்றால் எம் கடுவினைகள் கருகிவிடும்
கந்தன் திருப்புகழை சிந்தனை செய்பவரின்
பந்தவினை கழைய கந்தனே வந்திடுவான்
பெருகி வரும் பெரு நிதியில் உருவான ஆயைத்தில்
அணி அணியாய் மாடத்து சிற்பமுடை கோபுரமும்
ஆயைத்தின் அருள் கூறும் பரிவார மூர்த்திகளும்
மூவைராய் நொச்சியம் பதியானும் அமர்ந்திருந்தார்.

**13 ஆம் திருவிழா உபயகாரர்**

(சி-1389)


### கண்டியில் அசாத்சாலி

தேசிய ஐக்கிய முன்னணியின்தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான அசாத் சாலி, எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்த நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமக்கு கண்டி மாவட்டத்தில் போட்டியிட வாய்ப்பு வழங்குமாறு அவர் கோரியுள்ளார்.

ஆனால் அதற்கு பிரதமரோ அவரை ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கிழக்கில் போட்டியிடுமாறு கடுந்தொனியில் கூறியுள்ளார்.பிரதமரின் இக்கருத்தினால் அசாத் சாலி, மனவருத்தமடைந்ததுடன் பெரும் ஏமாற்றமும் அடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-7)


**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 22<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: A/L கனடா PR<br>தொ.இ: B/879 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 12 சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: A/L லண்டன்<br>தொ.இ: G/1552 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்; ரோகினி<br>கி.பா: 18<br>உயரம்: 5’11"<br>தகைமை/தொழில்: O/L பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/882 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 40 செவ் 4 இல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்த்தக்கது<br>தொ.இ: G/1553 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 42 செவ் 2 இல்<br>உயரம்: 6’<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ அரச தொழில்<br>தொ.இ: B/883 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 16 1/2 செவ் 7 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்: HNDA/ NGO<br>தொ.இ: G/1560 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 16 செவ் 8 இல்<br>உயரம்: 6’<br>தகைமை/தொழில்: லண்டன்<br>தொ.இ: B/887 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 26 செவ் 4 இல்<br>உயரம்: 152cm<br>தகைமை/தொழில்: BBA, MSC லண்டன் NOT PR<br>தொ.இ: G/1561 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( [illegible] செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழிற்கு கடத்தப்படவிருந்த 150 கிலோ கஞ்சா பறிமுதல்

## விசேட அதிரடிப்படை அதிரடி

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்.வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கடத்தப்படவிருந்த 150 கிலோகிராம் கஞ்சாவை விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.**

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இவ் அதிரடி நடவடிக்கையின் போது 4 பேர் கஞ்சா கடத்தல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் கடல் வழியாக நேற்று அதிகாலை 2.30 மணியளவில் 150 கிலோ கஞ்சா போதைப்பொருள் சிறு சிறு மூடைகளாக கட்டப்பட்டு கடத்தப்படுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இக்கஞ்சா கடத்தல் தொடர்பிலான தகவல் வடமராட்சி இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்றதும் உடனடியாக இராணுவத்தினர் விசேட அதிரடிப்படையினருக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.



இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த விசேட அதிரடிப்படையினர் யாழிற்கு கடத்தப்படவிருந்த நிலையில் இருந்த கஞ்சாவை கைப்பற்றியுள்ளனர்.

கடத்தப்படவிருந்த கஞ்சா போதைப்பொருள் விசேட அதிரடிப்படையினர் வசம் தற்போது உள்ள நிலையில் விசாரணையின் பின்னர் சந்தேக நபர்களை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் குறித்த கஞ்சா இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டதா? இக்கடத்தலின் முக்கியஸ்தர்கள் யார் என்ற கோணங்களில் விசாரணை மேற்கொள்ளப்பட்டுவருவதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். (இ-4)




## மரபு, காலம், நிலைமாற்றம்

இலங்கை ஆவணக் காப்பகம் ஒழுங்கமைத்துள்ள நிகழ்ச்சித் தொடரின் 20 ஆவது உரை நிகழ்வு 'மரபு, காலம், நிலை மாற்றம்' எனும் தலைப்பில் கோயிற் சிற்பியான சின்னத்தம்பி "அமரசிங்கம் ஆச்சாரியரது பயில்வு தொடர்பாகக் கலை வரலாற்றாசிரியரான பா.அகிலனது உரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 10 மணிவரை 199, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சமகாலக் கலை கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தில் இடம்பெறவுள்ளது. (இ)

## பிறந்தநாள் விழாவும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

சைவ வித்தியா விருத்திச் சங்க இந்துபோர்ட் சு.இராசரத்தினத்தின் 131 ஆவது பிறந்தநாள் விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை பி.ப.3 மணிக்கு நடைபெறவுள்ளது.

சைவ வித்தியா விருத்திச் சங்கதலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். இந்தியத்துணைத்தூதுவர் ஆ.நடராஜன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ். மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் கே.சுசீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

## தொழில் தேடுபவர்களுக்கான பதிவு

உடுவில் பிரதேச பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் வாழும் வேலையற்றோரின் விபரங்களை பதிவு செய்யும் நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி மேற்கொள்ளப்படவுள்ளது.

உடுவில் பிரதேச செயலக பிரிவின் கீழ் வாழும் தொழில் வாய்ப் பற்று தொழில் தேடிக் கொண்டிருப்போரின் சரியான தொகையைக் கண்டறிந்து அவர்களது சுயவிபரங்களை பெற்று அவர்களுக்கு பொருத்தமான தொழில் வாய்ப் பினைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் உடுவில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இணுவில் பொதுநூலகம், ஏழாலை முத்தமிழ் மன்றம், உடுவில் பிரதேச செயலகம் ஆகிய 3 நிலையங்களில் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை வேலையற்றோருக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் தங்களுக்கு அருகாமையிலுள்ள மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு நிலையத்திற்குச் சென்று பதிவுகளை மேற்கொண்டு தொழில்வாய்ப்பிற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என பிரதேச செயலாளர் எம்.நந்தகோபாலன் அறிவித்துள்ளார். (இ)

## கசிப்புக் காய்ச்சியவர் தலைதெறிக்க ஓட்டம்!

(கரணவாய்)

பொலிஸாரின் பார்வையிலிருந்து தப்புவதற்காக மூன்று வெவ்வேறு வீடுகளில் வீட்டுக்குள் நெருப்பு மூட்டி கள்ளச்சாராயம் மற்றும் கசிப்பு காய்ச்சிய போது எதிர்பாராத விதமாக பொலிஸார் சென்றதனால் ஒரு வீட்டிலிருந்த நபர் தலைதெறிக்க தப்பியோடியுள்ளார்.

மற்றைய இரு வீடுகளிலும் இருந்த பெண்ணொருவரும் ஆண்ணொருவரும் பொலிஸாரினால்மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை கரவெட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. நெல்லியடிப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்படி பகுதிக்கு பொலிஸார் சென்றிருந்தனர்.

வீட்டுக்கதவைப் பூட்டிவிட்டு உள்ளே நெருப்பு மூட்டி கோடா காய்ச்சிய போது திடீரென பொலிஸார் சென்றதால் கோடாவை தூக்கி வீசி யெறிந்து விட்டு அவர் தலை தெறிக்க தப்பியோடியுள்ளார்.

மற்றைய வீடுகளிலிருந்து 1 போத்தல் கசிப்பு மற்றும் கசிப்பு காய்ச்சும் உபகரணங்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை தப்பியோடிய நபரைக் கைது செய்வதற்கு பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-3-60)

## சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுவிக்கக்கோரி துண்டுப்பிரசுரம்

பாரபட்சத்தினால் நீண்ட காலம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி அவர்களது பெற்றோர் துண்டுப்பிரசுரங்களினை யாழில் விநியோகித்துள்ளனர்.

இதன் முதற்கட்டமாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் இணைந்து நேற்று காலை யாழ்.பல்கலைக்கழகத்தில் இத்துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துள்ளனர்.

இத்துண்டுபிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நீண்ட நெடுந்துயர் சுமந்த தமிழர் எம் வாழ்வில் நமக்காய் பாடுபட்டு இதுவரை மீட்சி கிட்டாது மீளத்துடிக்கும் சிறைவாசம் அனுபவிக்கும் எம்பிள்ளைகளின் விடுதலைக்காக உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் ஆதரவையும் வேண்டி நிற்கின்றோம்.

சுமார் 20 வருடகாலம் தொடக்கம் இதுவரை தண்டனை அனுபவித்தும் வழக்கு விசாரணைகள் முடிவின்றியும் நீதித்துறையின் பாரபட்சத்தினாலும் பிள்ளைகளையும் தாய் தந்தையரையும் சிறையில் தவிக்க விட்டு நாம் இங்கு வலியினை சுமந்து வேதனையுடன் வாழ்கின்றோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் திருநெல்வேலி மற்றும் யாழ்.நகரிலும் இத் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

## சங்காபிஷேக விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரி ஸ்ரீ சிவஞான வைரவப் பெருமான் திருக்கோவில் மணவாளக் கோல சங்காபிஷேக விஞ்ஞாபனம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

மு.ப.11 மணிக்கு விசேட பூசை நடைபெற்று வைரவப் பெருமான் வெளிவீதி உலா வருவார். (இ-3)



ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைப்பதி சிறி இராஜ மகாமாரி அம்மன் ஆலய சப்பறத் திருவிழா அன்று இடம்பெற்ற எனையாழும் [illegible] போது பாடல்களை எழுதிய கவிப்புலவர் வேலணையூர் சுரேஸ், [illegible] சபை சி.செந்தூரனால் தங்கவிருது வழங்கி கௌரவிக்கப்படுவதைப் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆலய கூட்டம்

புங்குடுதீவு கதிர்காம ஆலயக்கூட்டம் நாளை மறுதினம் முற்பகல் 10 மணிக்கு கதிர்காம ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

திருவிழா ஆரம்பமாகின்றபடியால் திருவிழா உபயகாரர்கள் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அன்போடு அழைக்கின்றோம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மாற்றுத் திறனாளிகளுக்கு


# கருணை உதவி புரியும்

## யாழ்.மண்ணின் மைந்தன்

# கணேஷ்வரன் வேலாயுதம்








**நாடு தழுவிய ரீதியில் இன, மொழி மத, பிரதேச வேறுபாடுகளுக்கப்பால் வலது குறைந்த சிறார்களின் மேம்பாட்டுக்காக மகா உன்னத சேவையாற்றுபவர்கள்தான் கணேஷ்வரன் வேலாயுதம்**




மாற்றுத் திறனாளிகளுடைய பெற்றோர்கள் படும் அவஸ் தையையும் சோகக் கதையையும் அவலத்தையும் அவர்கள் வடிக் கும் கண்ணீரையும் நன்கு அறிந்தவர்தான் கணேஷவரன் வேலாயுதம். அவருக்கு லண்டனில் சிவன் என்ற வலது குறைந்த 19 வயதுடைய மகன் இருக்கிறார். அவருக்கு கண் தெரியாது. வாய் பேச முடியாது. நடக்க முடியாது. மாற்றுத் திறனாளிகளுடைய வேதனையை தன் மகன் மூலமாக நன்கு அறிந்த மனிதர் இவர்.

கொடூர யுத்தத்தின் காரணமாக இடம் பெயர்ந்து சென்று லண்டனில் வாழ்ந்த ஒருவர். தன்னுடைய மகன் சிவன் என்ற பெயரில் இலங்கை முழுவதும் 13 வலது குறைந்தோர் நிலையங்கள் நிறுவி பாரியளவிலான மனிதாபிமான சேவைகள் ஆற்றி வருகிறார்.

யாழ்ப்பாணம்,பருத்தித்துறை, புதுக்குடியிருப்பு ,சுன்னாகம் கண்ணகி முகாம், குருநகர், கிளிநொச்சி, நெல்லியடி, கண் டி, பன்விலை, மட்டக்களப்பு, கேகாலை, மாத்தளை, திரு கோணமலை ஆகிய பிரதேசங்களில் திறக்கப்பட்டுள்ளன. இங்கே அனைத்து சிகிச்சைகளும் இவரது சொந்த நிதியின் மூலம் இலவசமாகவே நடைபெறுகின்றன. 14 ஆவது கிளை பொலனறுவை மாவட்டத்தில் வெகுவிரைவில் திறக்கப்படவுள்ளது. இந்த உன்னத சேவையின் மூலம் கணேஷ்வரன் வேலாயுதத்தின் பெயர் வரலாற்றில் முக்கிய இடத்தைப்பெறும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.





**சிவன் வலது குறைந்தோர் நிலையம், பிரதான அலுவலகம். தொ.பே. 077 511 0039**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகளை விடுவிக்க இராணுவம் இணக்கம்

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பதற்கு இராணுவத்தினர் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் அவற்றை விடுவித்து மீள்குடியேறுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**

மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதனுடனான சந்திப்பொன்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துக் கூறுகையிலேயே மாவட்டச் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 181 குடும்பங்களும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 27 குடும்பங்களும் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 342 குடும்பங்களும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 257 குடும்பங்களுமென 807 குடும்பங்கள் மீள்குடியேற வேண்டியுள்ளன.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றுவதில் ஏற்பட்ட தாமதத்தினால் மீள்குடியேற்றம் செய்ய முடியாது காணப்படுகின்றது. இராணுவம், கடற்படையினர், பொலிஸார் ஆகியோரின் பயன்பாட்டிலும் காணிகள் இருக் கின்றன.

இராணுவத்தினரின் பயன்பாட்டில் உள்ள காணிகளை விடுவிப்பதற்கு இராணுவத்தினர் இணக்கம் தெரிவித்திருக்கின்றனர்.

பிரதேச செயலாளர்கள், காணி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அவற்றை சென்று பார்வையிடுவதற்கும் இணக்கம் தெரிவித்திருக்கின்றனர். அவற்றை விடுவித்து மக்களை மீள்குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வெடிபொருள் அகற்றுவதில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பாக மீள்குடியேற்ற அமைச்சர் விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு, கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பிராந்திய முகாமையாளருக்கு அறிவுறுத்தலை வழங்கி மிகவிரைவாக இவற்றை ஒரு கால அட்டவணை தயாரித்து பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்ற ஆலோசனையும் வழங்கியுள்ளார். இதனை மாவட்டச் செயலகமும் இணைந்து செயற்படுத்துவ தற்கு தயாராக உள்ளது என சுந்த ரம் அருமைநாயகம் மேலும் தெரிவித்தார். (இ-7)

## விபத்தில் இருவர் படுகாயம்

வவுனியா ஓமந்தை பாடசாலைக்கு அருகில் நேற்று அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் அதில் பயணம் செய்த இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

தென்பகுதிக்கு கடலுணவுப் பொருட்களை விநியோகித்து விட்டு திரும்பிக்கொண்டிருந்த மகேந்திரா கூலர் வாகனமே பாலத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் சாரதி படுகாயமடைந்ததுடன் மற்றைய நபர் சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

முல்லைத்தீவைச் சேர்ந்ததாகக் கூறப்படும் இருவரும் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பயணத்தின் போது பாதுகாப்புப் பட்டியை அணிந்திருந்ததால் இருவரும் அதி ர் ஷ்டவசமாக உயிர்தப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3-60)

## கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைதானார்

வவுனியா பேருந்து நிலையத்தில் வைத்து ஒரு தொகை கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுமார் 4 கிலோகிராம் எடை கொண்ட குறித்த கேரளா கஞ்சா, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு கடத்தப்படவிருந்த நிலையில் பொலிஸாரினால் மீட்கப் பட்டுள்ளது. போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட நபர் கொழும்பைச் சேர்ந்த ஒருவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட குறித்த நபர், வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார். (இ-250)




## மன்னார் மருதமடு அன்னையின் ஆடித்திருவிழாவில் மக்கள் திரள்வு

மன்னார் மருதமடு அன்னையின் ஆடித்திருவிழா நேற்று வியாழக்கிழமை மன்னார் மறை மாவட்டத்தின் புனித ஸ்தலமான மடுத் திருப்பதியில் நடைபெற்றது.

மூன்று மறைமாவட்ட ஆயர்களுடன் நூற்றுக்கு மேற்பட்ட அருட்பணியாளர்களுடனும் பல ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் இந்தத் திருவிழா மடுவில் நடைபெற்றது.

யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, சிலாபம் ஆயர் வலன் மென்டீஸ் ஆண்டகை, அநுராதபுரம் ஆயர் நோபட் அந்திராடி ஆண்டகை ஆகியோர் உள்ளிட்ட நூற்றுக்கு மேற்பட்ட குருக்களும் இணைந்து இந்தத் திருவிழா கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். கடந்த 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய இந்தத் திருவிழாவின் இறுதி நாளாகிய நேற்று வியாழக்கிழமை காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி தமிழ், சிங்களம், இலத்தீன் ஆகிய மொழிகளில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து மடு அன்னையின் திருச்சுரூப திருப்பவனி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. இத்திருப்பலியில் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வருகைதந்து வழிபாடுகளில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-7)

## அதிபரை இடமாற்ற வேண்டாமென மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர்அ.பங்கயச்செல்வனை இடமாற்றம் செய்யவேண்டாமென அப்பாடசாலைமாணவர்களால் நேற்றுக்காலை பாடசாலை கேற்மூடப்பட்டு கண்டனஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

வட்மாகாண கல்வி அமைச்சினால் இந்த இடமாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்படி கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு நேற்றையதினம் கட மையைப் பொறுப் பேற்பதற்கு ஆயத்தமானார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்களால் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதால் பாடசாலை யின் கற்றல்நடவடிக்கைகள் முடங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. (இ-3-254)

## தமிழர்களை அரசாங்கம் தொடர்ந்து ஏமாற்றுகிறது

தமிழ் மக்களை தொடர்ந்தும் அரசாங்கம் ஏமாற்றி வருகின்றது என வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட மீள்குடியேற்றம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், புதுக்குடியிருப்பு, கேப்பாபிலவு ஆகிய பகுதிகளில் இராணுவம் ஆக்கிரமித்திருக்கின்ற நிலங்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டுள்ளது. அதில் எந்த விதமான மாற்றங்களும் தெரியவில்லை.

அதில் முடிவு ஒன்றும் எடுக்கப்படவில்லை. எமது மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படுகின்ற சூழல் காணப்படுகின்றது என்றார்.

கடந்தகால அரசாங்கம் எங்களை அழுத்தி அச்சுறுத்தி எங்களை அழிக்க நினைத்தது. மாற்றம் ஒன்று ஏற்பட்டதன் பின்னர் நாங்கள் இவற்றை வென்றெடுக்கலாம் என்று நினைத்தோம். நினைத்து வருகின்றோம் என்று மேலும் தெரிவித்தார். (இ-7)



முல்லைக்கவி (தை) கள் கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் ஒட்டுசுட்டான் ம.வி. பழைய மாணவர்சங்க பிரித்தானியக் கிளையின் அனுசரணையுடன் இடம்பெற்ற போது...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக்கடல்நீரேரி மீன்பிடியியலில் அவதானிக்கப்பட்ட சில பிரச்சினைகள்


இலங்கை ஒரு கடலால் சூழப்பட்ட சிறிய தீவாக இருப்பினும் இது இயற்கை வளத்தின் அருங்கொடையான நாடாகும். இதன் நிலப்பரப்பை விட கடல் பிரதேசமானது மூன்று மடங்காகும். இதனால் கடல் மூலமாக வற்றாத வளமாகிய மீனினங்களையும் அதனுடன் தொடர்புடைய வளங்களையும் தொடர்ச்சியாக பெற்றுக் கொண்டிருக்கின்றது. இங்கு 14 மாவட்டங்கள் கரையோரத்தை எல்லையாகக் கொண்டுள்ளன. இதில் 60% ற்கு மேற்பட்ட கடல் எல்லையைக் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்து கொண்டுள்ளன.

எமது யாழ் குடாநாட்டை பொறுத்தவரை பொருளாதார நடவடிக்கைகளில் விவசாயத்திற்கு அடுத்த இடத்தினை மீன்பிடி வகிக்கின்றது. யாழ்ப்பாணக் கடல் நீரேரியானது 421km² பரப்பையும், 4m ஐ விடக் குறைவான ஆழத்தையும் கொண்டது. கடந்த வருடம் ஜூன் மாதம் முதல் 2015 பெப்ரவரி வரை நடைபெற்ற ஆராய்ச்சியின் போது பொன்னாலை தொடக்கம் கிளாலி வரையான 15 மீன் இறங்குதுறைகளில் (பொன்னாலை, அராலித்துறை, காக்கைதீவு, நாவாந்துறை, பண்ணை, மண்டைதீவு வேலணை, குருநகர், பாசையூர், கொழும்புத்துறை, மணியம்தோட்டம், கோயிலாக் கண்டி, கைதடி, கச்சாய், கிளாலி) மீனினப்பரம்பல் மற்றும் அவர்களிடம் காணப்பட்ட பிரச்சினைகள் என்பன அடையாளம் காணப்பட்டன.

இதன்போது சிறகு வலை மூலமாகப் பிடிக்கப்படும் 105 மினினங்கள் அடையாளம் காணப்பட்டன. இங்கு அதிகளவு பிடிக் கப்படும் மீன் இனங்களாவன திரளி, ஒட்டி, ஓரா, முரல், செங் கண்ணி, கீளி, காரல், மணலை, பாலை, பாரை என்பன காணப்பட்டன. இங்கு மீனவர்கள் பிரதானமாக மடி வலை, வீச்சுவலை, சிறகு வலை, சிறிய வலையமைப்பிலான கூடுகள் என்பவற்றையும், படகுகள், வள்ளங்கள், இயந்திரப்படகுகள் என்பவற்றையும் பயன்படுத்துகின்றனர். மீன்பிடியின் அளவானது மீனவர்கள் பயன்படுத்தும் வலைகளின் அமைப்பு, படகுகளின் அளவு, மீனவர்களின். எண்ணிக்கை, ஆழ் கடல் மீன்பிடி, மீன்பிடிக்கும் கால அளவு என்பவற்றில் தங்கியுள்ளது.

இந்த 15 மீன்பிடிக் கிராமங்களில் பாசையூரில் அதிகளவு மீன்பிடி மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கு அடுத்த நிலையில் குருநகர், காக்கைதீவு, என்பன காணப்படுகின்றன. இதற்கு பிரதானமாக மீனவர்களின் எண்ணிக்கை, தொழில்நுணுக்கம், நேரஅளவு என்பன இங்கு அதிகமாகக் காணப்படுகின்றதோடு அத்துடன் மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பி வாழ்கின்ற வாழ்வாதார முறையும் காரணமாக உள்ளது.

அதேவேளை மிகக் குறைவான மீன் எண்ணிக்கை காணப்பட்ட இடங்களாக அராலித்துறை, பொன்னாலை என்பன காணப்பட்டன. இதற்கான காரணங்களாக இப்பகுதிகளில் பயன்படுத்தும் மீன்பிடி வலை, மீன்பிடிக்கும் நேரஅளவு மற்றும் இவர்களின் குறைந்த மீன்பிடியியல் முயற்சி என்பவற்றைத் தொடர்புபடுத்த முடியும. ஏனெனில் இப்பகுதியிலுள்ளவர்கள் பல்வேறு தொழில் முயற்சிகளை மேற்கொள்வதனால் மீன்பிடியில் முக்கிய கவனம் செலுத்துவதில்லை.



உரு1: மேம்பாலம்

### அவதானிக்கப்பட்ட சில பிரச்சினைகள்

மீன்பெறுகையின் தொடர்ச்சியான தன்மையைப் பேணுவதற்கு பயன்படுத்தப்படும் வலையானது மிக முக்கியமான காரணியாகத் திகழ்கின்றது. உதாரணமாக மடி வலையைக் கருதும் போது இது மிகச்சிறிய கண்ணளவுடைய வலையாகும். அத்துடன் இவ் வலையானது கரையோரத்தை அண்டிய கண்ட மேடைப் பகுதிகளிலேயே பாவிக்கப்படுகின்றது. இதன்மூலம் மிகச் சிறிய மீனினங்கள் பிடிக்கப்படுகின்றன. அதாவது இம் மீனினங்கள் வளர்ந்து இனப்பெருக்கம் செய்து அடுத்த சந்ததியை உருவாக்க முன்னரே அழிக்கப்படுகின்றது. அத்துடன் இவை சந்தைப் பெறுமதி அற்றவை. எனவே இவற்றின் பெரும பகுதி கடற்கரையோர சூழலிலேயே கொட்டப்படுகின்றன. இதனால் இப்பகுதியானது துர்நாற்றம் வீசுவதுடன் மாசடைந்தும் காணப்படுகின்றது. இவ்வாறான பிரச்சினையானது யாழ்.கடல்நீரேரிப் பகுதியில் பொன்னாலை, அராலித்துறை மற்றும் பண்ணைக் கடற்கரையோரங்களில் காணக்கூடியதாக உள்ளது.

இம் மடிவலையானது கண்ட மேடை மற்றும் கடற்கரையோரப் பகுதிகளில் பாவிக்கப்படுவதனால் மீன்பிடியானது தற்பொழுது பாரிய ஆபத்தை எதிர்நோக்குகின்றது. ஏனெனில் இவ் இடங்களாவன போசணைப் பதார்த்தைச் செறிவாகக கொண்டுள்ளதுடன் இங்கு மிகச் சிறிய மீனினங்கள், இனப் பெருக்க வாழிடங்கள் மற்றும் முட்டையிடும் இடங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளன. இவை மடி வலையினால் குழப்பப்படுகின்றது. எனவே மடி வலையை பாவிக்கும் மீனவர்கள் இதனை கவனத்தில் கொள்வதால் பாரிய அழிவில் இருந்து மீனின பரம்பலை காப்பாற்ற முடியும். எமக்கு நன்மை பயக்கும் மீனின வளத்தை நாமே நம் செய்கைகளால் அழித்து வருவதே வேதனைக்குரிய விடயமாகும்.

அடுத்த முக்கிய பிரச்சினையாக கண்டல் தாவர அழிப்பினை கூறலாம். இயற்கையாக எமது யாழ் கடல் நீரேரியில் அமைந்துள்ள மாபெரும் சொத்து இக் கண்டல் தாவரங்களாகும். இவற்றின் பயன்களைத் தெரியாமலேயே அழித்து வருகின்றோம் என்பதே எமது ஆதங்கமாகும். முற்காலத்தில் பாதுகாப்பு காரணத்திற்காக வடபகுதி கண்டல்கள் அழிக்கப்பட்டன. ஆனால் தற்போது வீதி அபிவிருத்தி, விறகுத்தேவை, குப்பைகளைக் கொட்டுதல் என்பவற்றினால் அழித்து வருகின்றோம்.

மீனினப் பரம்பலிற்கு கண்டல் தாவரம் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இத் தாவரத்தின் சருகுகள் அதன் கீழே விழுந்து அழுகல் அடைவதனால் இப் பகுதிகளில் அதிகளவான போசணைப்பதார்த்தம் காணப்படுகின்றது. இவற்றின் வேர்கள், தண்டுகள் என்பன மீன்களின இனப்பெருக்கம், முட்டை யிடல் என்பவற்றிற்கு சிறந்த வாழிடத்தையும், போசணைப்பதார்த்தமானது மீன் குஞ்சுகளின் வளர்ச்சிக்கு வேண்டிய போசணையையும் வழங்குகின்றது. இதனால் மீன்களின் வளர்ச்சிக்கும் அவற்றின் பரம்பலுக்கும் கண்டலானது மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது. எமது யாழ்ப்பாணக்கடல் நீரேரியில் மண்டைதீவு பகுதிகளில் கண்டல்களை அதிகமாக காணக் கூடியதாக உள்ளது. கண்டல்களுள்ள சதுப்பு நிலங்கள் ஓடுள்ள மீனினங்களின் வாழிடமாகக் காணப்படுகின்றது. இதற்குச் சான்றாக அதிகளவான இறால், நண்டு போன்ற ஓடு கொண்ட மீனினப்பரம்பல் மண்டைதீவில் அவதானிக்கப்பட்டது.

அடுத்த மிக முக்கிய பிரச்சினையாக கடலினை மறித்து வீதி அமைத்தல் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. கடலினை மறித்து வீதியமைக்கும் போது கடல்நீரின் தரையமைப்பானது இருவேறு துண்டுகளாக்கப்படுகின்றன. அத்துடன் நீரோட்டத்தின் வேகமும் மட்டுப் படுகின்றது. இயற்கையாக ஒரே நிலையில் பேணப்பட்ட உப்புச் செறிவானது வீதி அமைத்ததன் காரணமாக ஒவ்வொரு பக்கத்திற்கொன்றாக வேறுபாடடைந்து காணப்படும். இதனால் ஓர்பகுதி இன்னும் சில காலங்களில் மிகக்கூடிய உப்புத் தன்மையுடைய இடமாக மாறும் வாய்ப்புள்ளது. உதாரணமாக பண்ணைப் பகுதியில் புனரமைக்கப்படும் பாலப்பகுதியானது நீரோட்டத்தின் பெரும் பகுதியைத் தடுக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இது வாழ்வாதாரத்தைப் பாதிக்கின்ற ஓர் பாரிய பிரச்சினையாகும். இவ்வாறு நீர்ப்பரப்புத் துண்டாடப்படும்போது பாதிக்கப்படப் போவது மண்டைதீவுப் பகுதியே. உப்புச் செறிவு அதிகரிக்கும்போது அவற்றைத் தாங்கமுடியால் உயிரினங்கள் இறக்க நேரிடும். இவற்றுள் கண்டல் தாவரங்களும் அடங்கும் என்பது வேதனையானதாகும்.

கடலினை மறித்து வீதியை அமைக்கும் போது கடல் சார்ந்த உயிரினங்களையும், அதனைச் சார்ந்துள்ள தாவர சூழற்தொகுதிகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு வீதி அமைக்கும் போது கடல் நீரோட்டமானது பாதிக்கப்படுகின்றது. இதனால் மீனினப்பரம்பலிற்கு தேவையான போசணைப் பதார்த்தமானது தடுக்கப்படுகின்றது. நீரோட்டமானது மீனினப்பரம்பலிற்கும், ஒட்சிசன் மற்றும் போசணைப் பதார்த்தங்களின் நகர்விற்கும், இனப்பெருக்க இடமாற்றங்களிற்கும் செல்வாக்கு செலுத்துகின்றது. நீரோட்டங்களைத் தடுக்கும்போது மீன் வளத்தைத் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்ளல் என்பது சவாலாகின்றது. இதற்குச் சான்றாக தற்போது நாவாந்துறை காணப்படுகின்றது. இவ்வாறான வீதியமைத்தலினால் ஏற்படும் பாரிய விளைவிற்கு நேரடிச் சான்றாக நாவாந்துறை மீனவர்கள் காணப்படுகின்றனர். முந்தைய காலங்களில் அதிகளவு மீன்கள் பிடிக்கப்பட்ட இப்பகுதியானது தற்பொழுது மீன்வளத்தில் பின்தங்கிய ஓர்பகுதியாக மாறியுள்ளது. தற்போது இவர்கள் காக்கைதீவுப் பகுதியிலிருந்தே மீன்களைப் பெற்றுச் சந்தைப்படுத்துகின்றார்கள்.

### சில பரிந்துரைகள்

நீர்பரப்புக்களை ஊடறுத்து வீதிகள், பாலங்கள் என்பவற்றை அமைக்கும் சந்தர்ப்பங்களில் மேம்பாலங்களாக அமைப்பதே சிறந்த தீர்வாகும். இதன்மூலம் நீரோட்டங்களின் பாதையில் குழப்பத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம் (உரு 1.). இது எமது எதிர்கால மீன் வளத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் சிறந்த நடைமுறையாகும்.

கண்டல் தாவரங்கள் சார்பான அறிவை மீனவர்களிற்கு வழங்குவதன் மூலம் இதனைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும். தென்பகுதியில் மக்கள் இதனை செயற்கையான முறையில் வளர்த்து வருகின்றனர். உதாரணமாக புத்தளததில் கண்டல்களை நட்டு மீன் வளத்தைப் பெருக்கியிருக்கிறார்கள்.

மீன்களின் இனம்பெருக்க காலம், முட்டையிடும் காலம் என்பவற்றை ஆராய்ச்சிகளின் மூலம் அவதானித்து பயனாளிகளையும் தொழில் சார் நிறுவனங்களுக்கும் தெரியப்படுத்தல் வேணடும். இதன் மூலம் எதிர்கால மீன்வளம்சார் பிரச்சினையை கணிசமான அளவு குறைக்க முடியும். உதாரணமாக இந்தியாவில் மீன் முட்டையிடும் காலங்களில் மீன்பிடி தடை செய்வதுடன் இதற்கு மாற்றீடாக மீனவர்களுக்கு மாத வருமானம் கொடுக்கப்படுகின்றது.

இறுதியாக மீனினப்பரம்பலை நாம் ஊக்குவிக்காவிடினும் அவற்றின் வாழிடங்களை குழப்பாமல் விட்டாலே எமது சந்ததிவழியாக தலைமுறைகள் பல பயன்பட இது வழிவகுக்கும். இப்பிரச்சினை சம்பந்தமாக மீனவர்களுக்கு தெளிவான அறிவு வழங்கப்படும் .அதே வேளை சூழல் முகாமைத்துவ அதிகாரிகள் நிலைமைகளைப் புரிந்து கொண்டு செயலாற்றும் பட்சத்தில் வருங்காலத்தில் சிறந்த பயனைப் பெறலாம். ஏனெனில் எமது நாட்டில் பொருளாதார விருத்தியை ஏற்படுத்துவதிலும், புரத உணவுத்தேவையை நிறைவு செய்வதிலும் எமது கடல்வளம் முக்கிய பங்கினை வகிக்கின்றது. மீன்வளமானது இலவசமான வற்றாத வளமாகும். இதனை பாதுகாப்பது எமது ஒவ்வொருவரினதும் முக்கிய கடமையாகும்.

இவ் ஆராய்ச்சியானது (Mangrove For the Future) MFF / 127 என்ற நிதி அனுசரணையுடன் நடைபெற்றது. அதற்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலாநிதி அபிராமி சிவரூபன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
விலங்கியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்
சோபிகா விக்னேஸ்வரன்,
செயன்முறைக் காட்டுநர், விலங்கியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1181

## மீன் ராஜாவும் நானாபோஷோவும்



நானாபோஷோவின் பாட்டி பெயர் நோக்கோமி. மிகவும் வயதானவள். அவள் தலையில் ஒரு முடிகூட நரைக்கவில்லை. ஆனால், சமீபகாலமாக எண்ணெய் தடவாததால் சில முடிகள் உதிர்ந்துவிட்டன. அதற்காக மிகவும் வருந்தினாள்.

ஒருநாள் நானாபோஷோவிடம் சொன்னாள். குட்டிப் பேரனே, எண்ணெய் தடவாமல் என் தலைமுடிகள் உதிர்கின்றன. உன் தாத்தா இருந்தபோது வாங்கித் தந்த எண்ணெய் தீர்ந்துவிட்டது. நீதான் எனக்கு எண்ணெய் கொண்டு வந்து தரவேண்டும் என்றாள்.

பாட்டி, அந்த எண்ணெய் எங்கே கிடைக்கும்? என்று கேட்டான் நானாபோஷோ.

வடக்குத் திசையில் ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அந்த ஏரியில் ஒரு மீன் ராஜா இருக்கிறது. அந்த மீன் ராஜாவின் பெயர் மெஷீனா மக்வாயி. உலகத்தில் உள்ள எல்லா மீன்களுக்கும் ராஜா. நீ அந்த ராஜா மீனைப் பிடித்து இங்கே கொண்டு வந்தால், நமக்கு நிறைய எண்ணெய் கிடைக்கும் என்றாள் பாட்டி.

வெற்றியுடன் வருவதற்கு நானாபோஷோவை ஆசீர்வதித்தாள் பாட்டி. மீன் பிடிக்கத் தூண்டிலும் படகும் வேண்டும். நானாபோஷோ ஒரு மரத்தை வெட்டி படகு செய்தான். ஓக் மரக்கிளையால் துடுப்பு செய்தான். பாட்டி, கயிறும் தூண்டிலும் கொடுத்தாள். நானாபோஷோ நதி வழியே வடக்குத் திசையில் படகைச் செலுத்தினான். கடைசியில் ஒருபெரிய ஏரியை அடைந்தான். ஏரியின் நடுவில் படகை நிறுத்தினான். தூண்டில் முள்ளில் இரையைக் குத்திவைத்து, ஏரியில் எறிந்தபடியே பாடினான்... மெஷீனா மக்வாயி மீன் ராஜாவே, தூண்டில் முள் வருவதைப் பார்க்கவில்லையா? முள்ளின் முனையில் இருக் கும் இரையைக் கவனிக்கவில்லையா? உடனே வந்து இரையை விழுங்கு என்று பாடினான்.

மீன்களின் ராஜாவான மெஷீனா மக்வாயி, ஏரியின் அடியில் படுத்தபடி பாட்டைக் கேட்டது. தன்னை அழைத்துப் பாடுவது யார் என்று அறிய, மந்திரி மீனை ஏரியின் மேற் பகுதிக்கு அனுப்பியது. மந்திரி மீனைப் பார்த்த நானாபோஷோ, உன் ராஜாவுக்குத் தைரியம் இருந்தால், தூண்டில் முள் ளைக் கடிக்கச் சொல் பார்ப் போம் என்றான். மந்திரி மீன் கீழே சென்று ராஜாவிடம் செய்தியைச் சொன்னது. அதைக் கேட்டுக் கடுங்கோபம் கொண்டது மீன் ராஜா. வாலைச் சுழற்றி தண்ணீரில் அடித்தது. ஏரியே கொந்தளித்தது. ஆவேசமாக உருண்டு புரண்டவாறு மேலே வந்தது. வந்த வேகத்தில் நானாபோஷோவின் படகு ஆடித் தத்தளித்தது. குகை போன்ற வாயைத் திறந்தவாறு, மீன் ராஜா ஆவேசமாகப் பாய்ந்து வந்து, நானாபோஷோவையும் படகையும் விழுங்கிவிட்டது. அடுத்த நொடி, மெஷீனா மக்வாயி வயிற்றுக்குள் கிடந்தான் நானாபோஷோ. எங்கும் இருட்டு. எதையும் பார்க்க முடியவில்லை.

எங்கோ ஓர் ஓசை கேட்டது... டொம் டமார்! டொம் டமார்! டொம் டமார்! மீன் ராஜாவின் இதயத்துடிப்புதான் அது என்று நானாபோஷோவுக்குப் புரிந்தது. ஓசை கேட்ட இடத்தில் துடுப்பால் ஓங்கி அடித்தான். மீன் ராஜா செத்துவிட்டது.

அப்போது கர்கர்... கர்கர் என்று ஏதோ சுரண்டுகிற சத்தம். எப்படியோ ஓர் அணில், மீன் ராஜாவின் வயிற்றுக்குள் வந்துவிட்டது. அது வெளியே செல்வதற்காக சுரண்டிச் சுரண்டி, ஒரு வழியை உருவாக்கப் பார்த்தது.

நானாபோஷோ அப்போது வெளியில் இருந்து வரும் வேறொரு ஓசையையும் கேட்டான். டக் டக் டக் டக்.... அவன் கூர்ந்து கவனித்தான். வெளியிலிருந்து ஒரு கடல் காகம், மீன் ராஜாவைக் கொத்தியது.

அணில் உள்ளே சுரண்டியும், கடல் காகம் வெளியே கொத்தியும் ஏற்படுத்திய துளை வழியே, நானாபோஷோ வெளியே வந்தான். அணிலுக்கும் காகத்துக்கும் நன்றி சொன்னான்.

அவர்கள் நெருங்கிய நண்பர்கள் ஆனார்கள். இறந்து போன மீன் ராஜாவை, ஒரு பெரிய மரப்படகில் ஏற்றிக் கட்டினார்கள். ஏரியிலிருந்து நதிக்கு வந்து நதியிலிருந்து வீட்டை நோக்கிப் படகைச் செலுத்தினார்கள். நானாபோஷோ மகிழ்ச்சியாகப் பாடினான்.

ஐலசா... ஐலசா...
மெஷீனா மக்வாயிக்கு ஐலசா...!
நோக்கோமி பாட்டி எண்ணெய் தடவட்டும்
அணிலுக்கும் காகத்திற்கும் ஐலசா..!

மூவரும் வீட்டை அடைந்தார்கள். நோக்கோமி பாட்டி, மீன் ராஜாவின் உடலை வெட்டித் துண்டுகள் ஆக்கினாள். ஒரு பாத்திரத்தில் வேகவைத்து, எண்ணெய்யாக மாற்றினாள். கிடைத்த எண்ணெய்யை ஆயிரம் புட்டிகளில் ஊற்றினாள். தினமும் அதைத் தலையில் தடவிக் கொண்ட பாட்டி, ஊரில் இருப்பவர்களுக்கும் கொடுத்தாள். அவர்கள், அந்த எண்ணெய்யைத் தலையில் தடவிக் கொண்டார்கள். பிறகு, அந்த ஊரில் யாருடைய தலை முடியும் உதிரவே இல்லை!

## 07.2015 03 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 324 - ஏட்றியனோப்பில் நகரில் இடம்பெற்ற சமரில் ரோமப் பேரரசன் முதலாம் கொன்ஸ்டன்டீன் லிசீனியசை வென்றான்.
- 987 - ஹியூ காப்பெட் என்பவன் பிரான்சின் மன்னன ஆனான். இவனது வம்சத்தினர் 1792 இல் பிரெஞ்சுப் புரட்சி இடம்பெறும் வரை பிரான்ஸை ஆண்டனர்.
- 1250 - பிரான்சின் ஒன்பதாம் லூயி எகிப்தில் ஏழாவது சிலுவைப் போரில் ஈடுபட்டிருந்தபோது பாய்பர்களால் பிடிபட்டான்.
- 1608 - கியூபெக் நகரம் உருவாக்கப்பட்டது.
- 1754 · ஏழாண்டுப் போர்: ஜோர்ஜ் வாஷிங்டனின் படைகள் நெசசிட்டி கோட்டையை பிரெஞ்சுப் படைகளிடம் இழந்தனர்.
- 1775 - அமெரிக்கப் புரட்சிப் போர்: ஜோர்ஜ் வாஷிங்டன் மசாசுசெட்சில் இராணுவத்துக்குத் தலைமை வகித்தார்.
- 1778 - புருசியா ஆஸ்திரியாவின் மேல் படையெடுத்தது.
- 1844 - ஐஸ்லாந்தில் கடைசிச் சோடி பெரிய ஓக் பறவைகள் கொல்லப்பட்டன.
- 1848 - அமெரிக்கக் கன்னித் தீவுகளில் பீட்டர் வொனஸ்கொல்ட்டன் என்பவரால் அடிமைகள் விடுவிக்கப்பட்டனர்.
- 1867 - தமிழ்நாடு விழுப்புரம் வளவனூர் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது.
- 1866 - புருசியாவின் வெற்றியுடன் ஆஸ்திரிய-புருசியப் போர் முடிவுக்கு வந்தது.
- 1872 - யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
- 1890 - ஐடஹோ ஐக்கிய அமெரிக்காவின் 43 ஆவது மாநிலமாக இணைந்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: பெலரஸ்சின் தலைநகர் மின்ஸ்க் சோவியத் படையினரால் நாசி ஜேர்மனியிடம் இருந்து விடுவிக்கப்பட்டது.
- 1962 - பிரான்சுக்கு எதிரான அல்ஜீரிய விடுதலைப் போர் நிறைவு பெற்றது.
- 1969 - சோவியத்தின் என்1 என்ற ஏவுகணை ஏவுதளத்திலேயே வெடித்துச் சிதறியது.
- 2006 - பூமியில் இருந்து 432,308 கி.மீ தூரத்தில் 2004 X-14 என்ற சிறுகோள் பறந்தது அவதானிக்கப்பட்டது.

பிறப்புகள்

- 1883 - பிரான்ஸ் காஃப்கா, எழுத்தாளர் (இ. 1924)
- 1924 - எஸ். ஆர். நாதன், சிங்கப்பூர் ஜனாதிபதி
- 1942 - அடூர் கோபாலகிருஷ்ணன், கேரளத் திரைப் பட இயக்குநர்
- 1962 - டாம் க்ரூஸ், அமெரிக்க நடிகர்
- 1980 - ஹர்பஜன் சிங், இந்தியக் கிரிக்கெட் வீரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீகம் 230

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## பொறாமையிலிருந்து விடுதலை!

அந்தச் சம்பவத்திற்கு பிறகு, அவசரகாலம் முடிந்துவிட்ட பின்னர், அவராலேயே அந்தக் கல்லைக் கதவிலிருந்து அப்புறப்படுத்த முடியவில்லை!

இரண்டாவது நிலை சக்தி, பயத்தினாலும் பேராசையினாலும் திறந்து கொள்கிறது. உதாரணத்திற்கு; ஒரு முக்கியமான கூட்டமிருப்பின் நீங்கள் களைப்படைவீர்களா? மாட்டீர்கள்! நீங்கள் துடிப்புடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். கூட்டத்தில் கலந்துகொள்ளும் ஆசை அல்லது பேராசை உங்களைச் சக்தியூட்டப்பட்ட நிலையில் வைத்திருக்கும்.

விஷுக்தி சக்கரம், இந்த மூன்று அடுக்கு சக்திகளையும் திறப்பதற்கு ஒரு வாயிலாக இருக்கிறது. ஆனால் அதை நீங்கள் அறியவில்லை. ஏனெனில் நீங்கள் இந்த அடுக்குகளை வெகு காலமாகப் பயனுள்ள வகையில் உபயோகப்படுத்தியதே இல்லை.

அது இவ்வாறு இருக்கிறது... எல்லாத்துறைமுகங்களிலும், படகுகளை நிறுத்தி வைப்பதற்கென்றே, படகுத்துறை என்று அழைக்கப்படும் ஒரு இடம் இருக்கும். கடலில் செல்லாமல் வெகு காலம் படகுத் துறையிலேயே நிறுத்தி வைக்கப்படும் படகுகள் அவை தண்ணீரைச் சார்ந்தவை என்பதையே மறந்துவிடும் என்று ஒர் பொதுவான வழக்கு இருக்கிறது.

அதே போன்று, நீங்கள் வெகு காலமாக மூன்றாவது அடுக்குச் சக்தியையே உபயோகப்படுத்தாததனால், நீங்கள் அதைச் சேர்ந்தவர் அல்லது அது உங்களைச் சேர்ந்தது என்பதையே மறந்து



விடுகிறீர்கள். தியானத்தால் இந்த மூன்றாவது அடுக்குச் சக்தியைத் திறக்க முடியும்.

இந்தச் சக்கரத்தை நீங்கள் தூய்மையான நிலையில் வைத்திருந்தால், வெளியுகத்தில் மிக உயரத்திற்கும், உள்ளுலகில் மிக ஆழத்திற்கும் செல்ல முடியும். தாழ்வான சுயமதிப்பீடு அல்லது பொறாமையினால் இந்தச் சக்கரம் அடைபடுகிறது. தாழ்வான சுயமதிப்பீடு என்பது பொறாமையின் ஒரு சாத்வீகமான வெளிப்பாடு. அவ்வளவே! செயல்படும் தன்மையில் பொறாமையாகவும் செயலற்ற தன்மையில் தாழ்வான சுயமதிப்பீடாகவும் வெளிப்படுகிறது. இரண்டுமே ஒப்பிடுதலின் விளைவுதான். தாழ்வான சுயமதிப்பீட்டில், நீங்கள் சரியல்ல என்ற உணர்வில் விலகிக்கொள்கிறீர்கள் பொறாமையில், அதைத் தாங்கிக் கொள்ள இயலாமல், எதிரிச் செயல் புரிய ஆரம்பித்து விடுகிறீர்கள்; அதுதான் வித்தியாசம்.

ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ளுங்கள்... உங்களைப் பற்றிய சுய மதிப்பீடு எதுவாக இருப்பினும் அது உங்களைக் கடவுளை விட குறைவானதாகக் காட்டினால் அது தாழ்வான சுய மதிப்பீடு. ஏனெனில் நீங்களே கடவுள்தான். அதனால்தான் வேறு யாருடனும் ஒப்பிடுவதற்கு இடமேயில்லை என்று நான் சொல்கிறேன்.

உங்களுக்குள் மறைந்திருக்கும் எல்லையற்ற ஆற்றலை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், நீங்கள் இந்தச் சக்கரத்தில் மறைந்துள்ள இரண்டாவது மற்றும் மூன்றாவது அடுக்கு சக்திகளை உணர வேண்டும். உண்மையில் இந்தச் சக்கரமே நமது சக்தியின் இருப்பிடம். அதில் கவனத்தை செலுத்தும் பொழுது, அதிலிருந்து சக்தி பரவுவதை உணர முடியும்.

இமயமலையில், நான் அலைந்து திரிந்து கொண்டிருந்த காலத்தில், நடந்து சென்றே பல மயில்களைக் கடந்துவிடுவேன். விஷுக்தி சக்கரத்தில் கவனத்தை வைத்து, மெதுவாக நடக்க ஆரம்பிப்பேன். கொஞ்சம் கொஞ்சமாக வேகத்தைக் கூட்டி, கவனத்தை சக்கரத்திலேயே வைத்து முயற்சியின்றியே நடந்து கொண்டிருப்பேன். ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு என் உடல் தானாகவே முன்னும் பின்னும் அசைந்து கொண்டு ஒரே சீரான வேகத்தில் செல்லத் தொடங்கும்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# கருவாச்சி காவியம்

வைரமுத்து-177



...அழகுசிங்கத்துக்கு இவ குடுத்த காசைக் கடன்னு சொல்லித் தன் அண்ணன் பேர்ல வீட்டை எழுதி வாங்குனவளா இல்லையா? காடுகரைகள வெல பேசிட்டா. இப்ப வீடுகளையும் விக்கப்பாக் குறா.

கரையான்புத்துக்குள்ள புகுந்த கருநாகம் அதைக் காட்டெலிக்கு வித்துட்டுப் போற கதையாகிப் போச்சசு; அதுக்குத் தோதா அது ஆம்பளைக அதிகாரம் செத்துப் போன வீடாகிப் போச்சு.

தொங்கி தொட்டிலாகிப் போன கயித்துக் கட்டில்ல தானும் ஒரு கயிறாக் கெடக்காரு சடையத்தேவரு. மூச்சு வந்து வந்து போறத வச்சு உசிரோட இருக்காருன்னு ஒரு ஊகம் பண்ணிக்கிரலாம்.

என்னைக்கு சாவி வாங்குனாளே அன்னைக்கே சடையத்தேவன் பொழப்புக்குப் பூட்டும் போட்டுப்புட்டா திம்சு. கெடாய்க்குத் தண்ணி வைக்குறதுல இருக்கிற ஆசை கெழவனுக்கு கஞ்சி வைக்கிறதுல இல்ல அவளுக்கு. சும்மா சொல்லக் கூடாது...நானாக் கொல்ல மாட்டேன்- தானாச்சாகட்டும்ன்னு விட்டுட்டா பெரிய மனசுக்காரி.

கெழவன் கத இதுன்னா கட்டையன் கதையே வேற. ஊராளுக அவனப்பாத்து ஒரு வருசத்துக்க மேல இருக்கும். நடமாட்டம் நின்னு போச்சு. வீட்டுக்குள்ளகூடக் கதவச் சாத்திக்கிர்றானாம்; படுத்தே கெடக்கானாம். நேக்கா மாதிரி இருந்த பய



தார்க்குச்சியா ஒடுங்கிப் போனானம். அன்னந்தண்ணி மட்டும் உள்ள போகுதாம். அராயத்த நிறுத்துனா வெட வெட வெட்ன்னு வெரல் நடுங்குதாம். பச்சை மொளகாயக் கடிச்சாலும் பச்ச மண்ண திங்குற மாதிரி இருக்காம்; நாக்கு இருக்க நரம்பு செத்தப் போச்சாம்; ஒண்ணுக்கு ரெண்டுக்கு போறதுக்குக் கூட உள்ளே வசதி பண்ணிக் கொடுத் துட்டாளாம் திம்சு.

"இது என்னப்பா இது கொடுமையா இருக்கு. வீட்டுக்குள்ளேயே வெளிக்குப் போற வீட்ல லச்சுமி இருக்குமா லச்சுமி?" மூக்கப் புடிச்சுக்கிட்டே பேசுறாக அம்பலக் கல்லுல ஆளுக.

"புருசனையும் கெழவனையும் தூக்கி நெஞ்சுல சொமக்குறாளே... புண்ணியவதி நல்லா இருக்கணும்."

இப்படியும் பேசிக்கிறாக பாவம் வினயமில்லாத பொம் பளைக.

'மன்னன் என்னைக்கு சாகிறது; திண்ண எப்ப காலியாகுறது? பொறுமையில்ல; ஆரம்பிச்சுட்டா ஏவாரத்த அவ.

பின்னத் தேவன்பட்டி அருவா மூக்கன் அந்தச் சாராங்காத்துல பெரிய ஆளு; கட்டப் பஞ்சாயத்தக்காரியக்காரன். ஆள் தாட்டியாத்துலயே துட்டுச் சம்பாரிச்ச ஆளு. அஞ்சு ஆம்பளப்பய; ரெண்டு பொம்பளப்புள்ள அந்த ஆளுக்கு.

அடிக்கடி அடிதடி வந்திரும் அண்ணந்தம்பிகளுக்குள்ள. ஊருக்கு ஒரு பயலாக் குடிவச்சாத்தான் இவனுங்க உசுர காப்பாத்த முடியும்ன்னு முடிவு பண்ணிட்டான் அருவா மூக்கன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...


# குழாய்க்கிணறுகளும் குழப்பங்களும்

அவசரமான உலகம் இது. குறைந்த நேரத்தில் அதிகளவிலான பலன்களை பெறுவதே நவீன மனிதர்களின் நோக்கம். அதற்கு துணைபோகும் அதி நவீன தொழில் நுட்பங்கள். அவை எம் தேவைகளை குறுகிய நேரத்தில் வினைத் திறனுடன் பூர்த்தி செய்யினும் அவை மறைமுகமாக எம்மால் மீளமுடியாத பாரிய பக்க விளைவுகளை ஏற்படுத்தி நிற்பது யாரும் மறுக்கமுடியாத வெளிப்படை உண்மை. இதன் வெளிப்பாடுகளே இன்றைய பாரிய பூமி அனாத்தங்கள்,வெப்பமாகும் பூமி, மாற்ற முடியாத உயிர்க்கொல்லி நோய்கள் போன்றனவாகும்.

நீண்ட யுத்த அழிவுகளில் இருந்து மெல்ல மீண்டுவரும் எம் குடாநாடும் இந்த நவீன தொழில் நுட்ப தொற்றலுக்கு ஆளாகாமல் தபபவில்லை. நிலமட்ட வீடுகள் இன்று வானைத் தொடும் கோபுரங்களாக, மாடிகளாக, ஒரு வீடு இருந்த வளவினுள் 2 - 3 வீடுகள் அமைக்கபபடுகின்றன. இதுவரை சினிமா வழி பார்த்த நவீன நகரம் (Modern City) இன்றுஎம்கண்முன்னே உருவாகி வருகின்றது. புல பரப்பளவில் கட்டப்படும் வீடுகளும் கட்டடங்களும் இன்று சில குழி அளவிலான நிலங்களி லேயே கட்டப்படுகின்றது. இவற்றை தாங்கும் சக்தி எம் நிலத்திற்கு உள்ளதா என்ற கேள்வி இன்றும் கேள்விக்குறியாவே உள்ளது. இதற்கான தொழில்நுட்பம் மட்டும் ஏன் இன்னும் குடாநாட்டிற்கு வரவில்லையோ தெரியவில்லை. இல்லை மறைமுகமாக கொண்டு வரப்படாமல் தடுக்கப்பட்டு இருக்கின்றதோ தெரியவில்லை.

இந்த இட நெருக்கடியால் நிலத்தடி நீர் வளத்தையே ஓர் நீர் மூலமாக நம்பி இருக்கும் எம் குடாநாடு தான் நீர் பெறும் வழி முறைகளையும் மாற்றியமைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இதன் வெளிப்பாடே இன்று அதிகளவில் குடாநாட்டில் தோண்டப்படும் குழாய்க்கிணறுகள். ஆம், கையால் துளையிடுபவர்களாலும், பாரிய இயந்திரங்கள் மூலம் துளையிடுபவர்களாலும் எம் குடாநாடு அம்மணமாக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றது என்பதே உண்மை. இதனைக் கட்டுப்படுத்தும் நடைமுறைகள் பெயரளவில் மட்டுமே திணைக்களங்க ளில் உள்ள நிலையில், நாளுக்கு நாள் அதிகளவான துளைகள் எம் பூமி தாயின் மேல் போடப்பட்டுக்கொண்டுதான் உள்ளது.




உண்மையில் வெட்டுக்கிணற்றை விட மிக விரைவாக அமைக்கக் கூடிய, குறுகிய இடத் தேவை கொண்ட குறைந்த செலவில் அமைக்கப் படக்கூடியவையே குழாய்க்கிணறுகள். இவை எம் வெற்றுக்கண்ணால் காணமுடியாதளவு எமக்கு ஏற்படுத்தும் பாரிய தீங்குகளை எம் மக்கள் அறிந்து கொள்வது மிக அவசியம்.

பின்வரும் இரு படங்கள் எம் குடாநாட்டின் நிலக்கீழ் நீர்ப்படைகள் எவ்வாறு அமைந்துள்ளன என் பதை பல ஆய்வின் பின் காணப் பட்ட தோற்றப்பாடாகும்.

பாறைகளின் இடையே பல படைகளாக காணப்படினும் இவை நீரியல் அழுத்தம் காரணமாக எம் நிலக்கீழ் நீர்ப்படையானது மேற் காட்டப்பட்டவாறு ஓர் வில்லை போன்றே உவர்நீரின் மேல் மிதந்த வண்ணம் காணப்படுகின்றது.

சாதாரண கிணறுகள் அமைக்கப்படும் பொழுது அவற்றில் நீர் எடுக்கும் அளவும் குறைவாகக் காணப்படுவதுடன் எடுக்கப்பட்ட நீர் மீள் நிரம்பல் அடைய வேண்டிய நேரம் கிடைக்கின்றது. ஆனால் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும் பொழுது அவை நீர்த்தாங்கு படைகளில் பாரிய நீர்த்தளம்பலை ஏற்படுத்துகின்றன. அத்துடன் கனரக இயந்திரங்களைக் கொண்டு குழாய்க் கிணறுகள் அமைக்கப் படும் பொழுது நிலத்திற்குக் கீழான தரையமைப்பில் பாரிய மாற்றங்கள், வெடிப்புக்கள் ஏற்படுகின்றன. இதனால் நிலத்தடி ஓட்டம் தடைப்படுகின்ற தோடல்லாமல் திசைமாறுகின்றது. இதனால் தொலைவில் உள்ள மலக்குழிக ளோ கழிவுகளோ எம் நிலக்கீழ் நீரை தொற்றடையச் செய்ய அதிக வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

இத்துடன் இவ்வாறு இயந்திரங்கள் கொண்டு அமைக்கப்ப டும குழாய்க்கிணறுகள் அதிகளவு ஆழமாகவும் அதிக நீர்தளளும் சகதி கொண்டவையாகவும் காணப்படுகின்றது. இதனால் அவை அதிகளவு நீரை எடுப்பதற்கு தூண்டுகின்றன. இதனால் மேற் காட்டப்பட்ட படத்தில் உள்ளவாறு உவர் நீரானது வேகமாக "மேல் எழும்பல்" "உட்புகுதல்" மூலம் எம் நன்னீர் படைகளை மாசாக்கத் தொடங்கிவிட்டன.

இதேபோன்று நன்னீர்க் கிணறுகளினுள் நீர் கொள் சக்தியை அதிகரிக்க எண்ணி ஆழமாக குழாய்க் கிணறுகளை அமைத்தலின் மூலம் மக்கள் நீரின் தரத்தில் பாரிய மாற்றங்களை அனுபவம் மூலம் நன்கு அறிந்திருப்பார்கள். அதே போல குழாய்க் கிணறுகள் மூலம் தொடங்கப்பட்ட நீர் விநியோகத் திட்டங்கள் ஆரம்பத் தில் நன்னீரை வழங்கிய போதும் இன்று அவை மாற்றமடைந்து நீரை விநியோகிப்பது நாம் எடுத்துரைத்த விடயங்களுகது சான்று பகரும் உண்மைகளாகும்.

காலத்தின் தேவைக்காக குழாய்க்கிணறுகள் அமைக்கலாம். ஆயினும் அதற்குரிய தொழில் நுட்ப ஆலோசனைகளை பெற்று மேற்கொள்ளல் வேண்டும். ஆயினும் எம்மக்களுக்கு இத் தொழில் நுட்பம் கைக்கெட்டாத ஒன்றாகவே காணப்படுகின்றது. நிலத்தடி நீரை நாம் உரியமுறையில் பெற்றுக் கொள்ள நீர்ப் புவியியல் ஆலோசனை (Hydro Geological Survey) எனும் நுட்பம் மிக அவசியம். ஆயினும் உரிய தரப்பினரால் இதற்கான கட்டணங்கள் 30,000 ரூபா தொடக்கம் 40,000 ரூபா வரை அறவிடப் படுகின்றது.

அம்மணமாக்கப்பட்டுக் கொண டிருக்கும் குடாநாட்டை காக்க உங்கள் பங்களிப்பு என்ன? உரிய திணைக்களங்கள எம்மக்களுக்கு உரிய முறையில் பங்களிப்பை செய்யுமா? இன்றேல் எப்பயிரும் விளையும் எம்வளப் பூமி பாலைவனமாவது நிச்சயம்.எம்மக்கள் மீண்டும் ஓர் பாரிய இடப் பெயர்வை நீருக்காக எதிர் கொள்ள வேண் டிய நிலையும் ஏற்படலாம். இதற்கான தீர்வு தான் யார் கையில்?

**யாழ்ப்பாணத்தான்**

## வாரத்திற்கு ஒரு புதிர்! 138

மனிதனுக்கு அடுத்தபடியாக மரபணுத் தொகுப்பு (GENOME) முழுமையாக அறியப்பட்டுள்ள முள்ளந்தண்டுளி உயிரினம் எது?

**புதிர் 138 இற்கான விடைகளை 13.07.2015 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

**கு.குணாளன்**
**ஆசிரியர், பிரிவு A**
**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,**
**விரிவுரையாளர் (தகுதிகாண்)**
**மீன்பிடி விஞ்ஞானத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்**

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**புதிர் 137 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கே. இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை

**புதிர் 137 க்கான கேள்வியும் விடையும்:**

உலக சமுத்திர தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

ஜூன் 8

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 138

சரியான விடை:-..........
முழுப்பெயர்:-..........
முகவரி:-..........
தொ.பே. இல:..........
கையொப்பம்:..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணசபையின் ஊடாக நல்லாட்சியை ஏற்படுத்தியுள்ளோம்

## முதல்வர் பெருமிதம்

(கொழும்பு)

**நல்லாட்சிக்கு முன்னுதா ரணமாக கிழக்கு மாகாண சபையில் நல்லாட்சியை ஏற்படுத்தியுள்ளதாக அம்மாகாண முதலமைச்சர் செய் னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு முஸ்லிம் வர்த்தகர்கள் நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் சமூக நல்லிணக்கத்துக்கான இன நல்லுறவு இப்தார் நிகழ்வு, மட்டக்களப்பு பாடுமீன் விடுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை நடைபெற்றது. இங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்த பின்னர் கிழக்கு மாகாணசபையிலும் நாம் நல்லாட்சியை ஏற்படுத்தியுள்ளோம். இந்த நல்லாட்சி தொடர்ந்தால், கிழக்கு மாகாணத்தில் வேலையற்றுள்ள சுமார் மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகளின் பிரச்சினையை தீர்த்துவைக்கும் ஆட்சியாக இந்த மாகாணசபையின் ஆட்சி இருக்கும்" என்றார்.

"எங்களுக்குள் இருக்கின்ற பிளவுகளை மறந்து கிழக்கு மாகாணத்தை கட்டியெழுப்பவேண்டும். ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்த நாம் அனைவரும் பாடுபடவேண்டும்" எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எ.எஸ். எம்.சார்ள்ஸ், மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் எம். உதயகுமார், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ-7)

# போயாதினத்தில் மது விற்ற குற்றச்சாட்டில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கைது!

போயா தினமான நேற்று முன்தினம் மதுபான விற்பனையில் ஈடுபட்ட அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் தங்கல்ல பொலிஸாரினால்கைதுசெய்யப்பட்டுள்ளார.

போயா தினத்தில் அங்குனுகொலபெலஸ்ஸ நகரத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் மதுபான விற்பனையில் ஈடுபடுவதாக கிடைத்த தகவலை அடுத்து பொலிஸாரினால் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து ஹோட்டலை சோதனையிட்டபோது மேலும் ஒரு தொகை மதுபானம் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட முன்னாள் பிரதேச சபையின் உறுப்பினரை அங்குனுகொலபெலஸ்ஸ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 50 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 280 | 260 | 300 |
| தக்காளி | 100 | 100 | 100 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 80 | 60 | 40 | 50 |
| கோவா | 100 | 120 | 120 | 100 | 80 |
| கரட் | 100 | 180 | 280 | 160-240 | 150 |
| பூசணி | 30 | 40 | 30 | 40 | 40 |
| புடோல் | 50 | 80 | 60 | 60 | 80 |
| வாழைக்காய் | 100 | 60 | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 150 | 160 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 120 | 120 | 100 |
| பாகற்காய் | 100 | 180 | 120 | 160 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 100 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 140 | 100 | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 50 | 80 | 100 |
| லீக்ஸ் | 120 | 150 | 300 | 200 | 100 |
| பீற்றூட் | 100 | 80 | 160 | 100 | 80 |
| கறிமிளகாய் | 100 | 200 | 160 | 160 | 130 |
| முருங்கைக்காய் | 120 | 250 | 240 | 300 | 300 |
| போஞ்சி | 150 | 200 | 240 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 | — | — | 40 |
| கீரை - 1 பிடி | 40 | 20 | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 120 | 80 | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40-50 | 60 | 60 |
| இராசவள்ளி | 150 | 140 | 160 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 300 | 250 | 240 | — | 200 |
| முள்ளங்கி | 40 | 50 | 100 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 20 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 15 | 10 | 20 |

# பெருங்கடல் எல்லைப் பகுதி இந்தியாவிற்கு சொந்தமா?

## சீனா கேள்வி

இந்திய பெருங்கடல் பகுதியில் உள்ள எல்லை பகுதி இந்தியாவிற்கு சொந்தமானது என்றால் மற்ற நாடுகளின் கப்பல்கள் அனுமதி அளிப்பது ஏன்? என்று இந்திய அரசுக்கு சீன கடற்படையின் மூத்த கப்டன் ஜாவோயீ கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து சீன கடற்படையின் மூத்த கப்டன் ஜாவோயீ இந்திய பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளதாவது,

இந்திய பெருங்கடல் பகுதியிலுள்ள எல்லை பகுதி இந்தியா சொந்தம் கொண்டாடுவதை நிறுத்தி கொள்ள வேண்டும். கடல் எல்லை பகுதி என்பது அனைவருக்கும் சமம். இதனை இந்தியா சொந்தம் கொண்டாட முடியாது. இந்திய கடல் பகுதியில் உள்ள கடைக்கோடி பகுதி இந்தியாவிற்கு சொந்தம் என்றால் அதற்குள் ரஷ்யா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா நாட்டுக்கு சொந்தமான கடற்படைகள் செல்ல அனுமதித்தது ஏன்? இதனை இந்தியா விளக்க முடியாதது ஏனென்று கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 420

அனுசா அனு





கம்சா மோகனதாஸ்




ஸ்ரீனு ஸ்ரீனுஜா





பிரவின் தாஸ்




சுஜித் கெவின்




சிவம் சக்தி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தில்தான் கைவிட்டோம்; கையெழுத்தாவது போடமாட்டோமா? இதுதான் தமிழனின் தலையெழுத்தா?






தமிழர்களின் போராட்டங்கள் என்பது வாயாலும், சமூகவலைத் தளங்களில் போடப்படும் பதிவுகளோடும்தான் நின்று விடுகின்றதா என்கின்ற கேள்வி இப்பொழுது எழுந்திருக்கின்றது.

அன்பான தமிழ் மக்களே எங்களிடம் சிறந்த பேச்சுத்திறனும், அபூர்வமான நடிப்புத்திறனும் உண்டு அதனால் தான் நாம் எமது இனத்தினை இழந்து, கனவை சிதைத்து நிற்கின்றோம்.

இல்லையாயின் எங்கள் இதயத்தின் இலட்சியமான விடுதலைப் போராட்டத்தை இழந்து இன்று அரசியல் அநாதைகளாக நின்றிருக்க மாட்டோம்.

வெளியிலிருந்து பேசுவதும் விமர்சனம் செய்வதும், எள்ளி நகையாடி மற்றவர்களின் முயற்சியை தடுத்து நிறுத்துவதிலும் நாங்கள் கில்லாடிகள்.

விடுதலைப் போராட்டத்தையும், விடுதலைப்புலிகளையும் இன்று விமர்சிப்பவர்களின் கருத்துக்களை எல்லாம் தொகுத்து பார்க்குமிடத்து புலிகளை விட இவர்கள்தான் களத்தில் நின்று போராடியவர்கள் போன்றதான பேச்சாகவே இருக்கும்.

ஆனால் இவர்களிடத்தில் சென்று தமிழ் இனத்தின் விடுதலைக்காக என்ன செய்தீர்கள் என்று கேட்டால் இவர்களின் பதில் மௌனமாகவே இருக்கும்.

விடுதலைப் புலிகளின் ஆயுதம் மௌனிப்பிற்கு பின்னர் இதுவரை தமிழ் இனத்தின் அரசியல் ரீதியான ஆக்கபூர்வமான போராட்டம் எதுவென கேட்டால் அதற்கும் கூட எங்களிடம் சரியான விடையில்லை.

இந்நிலையிலேயே இலங்கையில் நிகழந்தது இனவழிப்புதான். இதனை சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் எனக் கோரி 1 மில்லியன் அதாவது 10 லட்சம் கையெழுத்து சேர்க்கும் பணிகள் அண்மையான நாட்களாக இடம்பெற்று வருகின்றன.

உலகின் மூத்தகுடி என்று சொல்லிக் கொண்டும், தமிழன் இல்லாத நாடு இல்லை எனறு பெருமை பேசிக்கொண்டும் இருக்கும் நாம், ஒரு மாங்கனித்தீவில் நந்திக்கடலில் வைத்து தன்னுடைய உறவுகள் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்டபோதும், அவர்கள் குய்யோ முறையோ என்று கதறி அழுத வேளையிலும், கால்வேறு கை வேறாக பிய்த்து எறியப்பட்டும், எங்கள் சகோதரிகளின் கற்பை சூறையாடிய வேளையிலும் எங்களால் என்ன செய்ய முடியும், என்று வெளியில் நின்று கதறி அழுத வேளையிலும், ஐயகோ! என் இனம் கருவருக்கப்படுகின்றதே ஆண்டவா இதை தடுக்க யாருமே இல்லையா என்று ஈழத்தில் வருந்திக் கொண்டு இருக்கையிலே, உலக நடுநிலையாளர்கள் எங்களின் கண்ணீர் கண்டு, ஏன் எங்களின் உதிரங்கள் மண்ணை நனைக்கும் போது கூட தடுத்து நிறுத்தவே நினைக்கவில்லை.

அந்த வேளை நாங்கள் நொந்த வேளை தமிழகத்தில் நடந்த உலகமகா நாடகத்தின் முதன்மை நாடகத்தை கலைஞர் அரங்கேற்றுகையில் அதைக்கண்டு உடலில் எஞ்சியிருந்த ஈழத்தவனின் உயிரும் உடலை விட்டு பிரிந்தது. அப்பொழுது நாங்கள் கலைஞர் கருணாநிதியை திட்டித்தீர்க்காத வார்த்தைகள் இல்லை.

ஆனால் நாங்கள், அதாவது இன்றைய சமூகவலைத்தள புரட்சியாளர்கள், எந்த நேரமும் இணையத்தளத்தோடு உட்கார்ந்து ஒய்யாரமாக தமிழினப் புரட்சி செய்து கொண்டிருக்கின்றோம்.

இன்றைய தமிழனத்தின் பிள்ளைகள் எல்லோரிடத்திலும், இணைய வசதியோடு கூடிய கைபேசிகள் தாராளமாகவே உண்டு.

எமக்கு இப்பொழுது இணையமில்லையாயின் உடலின் அணுக்கள் எவையும் அசையாத நிலையிலிருக்கின்றோம்.

ஆனால் எங்களால் எங்கள் இனத்திற்காக ஒரு கையொப்பத்தினை இடமுடியாத நிலையிலிருக்கின்றோம்.

வெட்கித்தலை குனிய வேண்டிய ஒரு நிலை இது. விட்டால் இதற்கும் பிரபாகரனையும், புலிகளையும் அழைப்போம் போல் இருக்கின்றது.

ஏனெனில் இதுவரைக்கும் நாங்கள் எங்கள் இனத்திற்காக போராட அவர்களை தானே அழைத்துக்கொண்டிருக்கின்றோம். நாங்களாக வீதிக்கு இறங்கினோமா? சுய மான போராட்டத்தை முன்னெடுத்தோமா? ஏனைய இனத்தவர்களையும் போராட்டதில் இணைத்துக்கொண்டோமா என்றால் இல்லை.

காலங்கள் எப்பொழுதும் ஒரே மாதிரியிருப்பதில்லை. இப்பொழுது இலங்கையில் மேற்குலகம் விரும்பும், அல்லது மேற்குலகின் பேச்சை கேட்கும் அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

இனி போர்க்குற்ற விசாரணை, சர்வதேச நீதிமன்ற விசாரணைகள் என்றெல்லாம் பேசி நடவடிக்கை எடுக்கப்போனால் சர்வதேசம் அதாவது அமெரிக்கா உருவாக்கிய ஆட்சி கவிழ்ந்து வீழ்ந்துவிடும் என்கின்ற கருத்தை இன்றைய ஆட்சியாளர்கள் முன்வைக்க அதனால் அமெரிக்கா அதை ஏற்க, குற்றவாளிகள் தப்பித்து நலவாழ்வு வாழ்வார்கள். விடுதலைக்காக போராடியவர்களும், அதற்காக தங்கள் குடும்பங்களை அர்ப்பணித்தவர்களினதும் வாழ்க்கை என்னவாயிற்று என்று நாங்கள் சிந்திக்கத் தலைப்படுவது காலத்தின் கட்டாயம்.

எங்களது பிள்ளைகளும், அந்த பிள்ளைகளின் பிள்ளைகளும் என தமிழனத்தின் அடுத்தடுத்த தலைமுறை நிம்மதி பெருமூச்சு விட்டு உலகில் ஏனைய இனங்களும் அனுபவிக்கின்ற சுதந்திரக்காற்றை எங்கள் பிள்ளைகளும் அனுபவிக்க வேண்டும் என்று தானே இவர்கள் களம் கண்டார்கள், அவர்களின் தியாகம் எங்களுக்கானது.

ஒரு போராளியின் மனநிலையில் நின்று சிந்திப்போம் தமிழர்களே. அவனுக்கும் குடும்பம் இருந்தது. அவனுக்கும் அம்மா அப்பா, அழகான அக்கா, குட்டி தம்பி தங்கைகள் இருந்திருப்பார்கள். அவர்களோடு சேர்ந்து இவர்கள் வீட்டிலிருந்திருக்கலாம். நமக்கேன் தேவையில்லா வேலை என்று அவர்களும் புத்தகப் பையோடு பள்ளிக்கு போயிருக்கலாம்.

அந்த கனவுகளையும், வீட்டின் நினைவுகளையும் ஓரமாய் ஒதுக்கி வைத்துவிட்டு களத்திலிருந்து அம்மாவிற்கு கடிதம் எழுதி தன் உளத்தின் நினைவுகளை அப்படியே மண்ணுக்குள் புதைத்துவிட்டு மண்ணிற்காக போராடினார்கள் எனது அண்ணனும், மாமனும், சித்தப்பனும், பெரியப்பனும்.

அவர்களின் உடல்கள் எங்கே புதைக்கப்பட்டுள்ளது என்றுகூட இன்றுவரை தெரியாது.

அவர்கள் எப்படிக் கொல்லப்பட்டார்கள் என்றும் எங்களுக்கு தெரியாது. எல்லோருமே சேர்ந்து அழித்துவிட்டு அவர் இவரை கை காட்ட, மற்றவர்கள் நாங்கள் இல்லை, இதோ ஆதாரங்கள் என்று பிறரை விழிக்க இப்படியே தமிழனின் இனவழிப்பும்கூட வியாபாரமாக்கப்பட்டு இன்னும் கொஞ்ச நாளில் அது மலிந்து சலிப்புக்குரிய விடையமாக மாறப்போகின்றது.

ஆனால் நாங்கள். ம்ம். மனவேதனை தாங்கிக்கொள்ள முடியவில்லை. உலகத்தின் எல்லாப்பரப்பிலும் வாழுகின்றோம். புலத்திலிருக்கும் எங்கள் தொகையும் அதிகம். இணையமற்ற வாழ்க்கை இல்லை என்றாகிவிட்டது. நகமும் தசையும் போல இணையமும் வாழ்வும் என்றாகிய நமது வாழ்வியலில் ஒரு கையெழுத்தை இடவில்லை நாம். இதுவரைக்கும் 2லட்சம் கையெழுத்துக்கள்தான் பதிவாகியிருக்கின்றன. ஆனால் தமிழர்களின் மொத்த தொகை 13 கோடி. வெட்கமாக இல்லையா? அன்பான உறவுகளே. சிந்தியுங்கள். எமது இனத்தை அழித்துவிட்டார்கள், சிதைத்துவிட்டார்கள் என்று இணையத்தில் கூப்பாடு போடாதீர்கள் அதில் எங்களுக்கு விளையப்போவது ஒன்றுமில்லை.

உங்கள் சொந்த பந்தங்கள் அத்தனை பேருக்கும் தெரியப்படுத்துங்கள் இந்த http://www.tgte-icc.org/ இணையத்தில் சென்று உங்களின் கையெழுத்துக்களையும் பதிவு செய்யுங்கள் என்று.

13 கோடி தமிழர்களில் 10 லட்சம் கையெழுத்து வாங்க முடியாத நம்மால் தமிழீழம் வாங்கி தனி நாடு அமைக்க முடியுமா என்பதையும் உணர்ந்து கொள்ளுங்கள்.

2008 ஆம் ஆண்டு தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் உரையை சரியாக கேளுங்கள். அவர் விடுதலைப்புலிகளும் தலைவரும் தமிழினத்தின் விடுதலைப் போராட்டதை எமது அடுத்த சந்ததியிடமும், உலகத்தமிழினத்திடமும் ஒப்படைத்துவிட்டு சென்றுள்ளமை புரியும்.

எங்கள் இனத்திற்கு நடந்தது இனவழிப்பு. விசாரணை செய் என்று ஆணித்தரமாய் சொல்ல வேண்டாமா? உங்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றோம். வாக்களியுங்கள்.

அவர்களின் வாக்கு உங்கள் காதுகளில் இருந்து அகன்று விட்டதா? தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம், அந்த தாகம் தனியவிடாமல் பார்க்க வேண்டும். அதற்காக தானே மடிந்தும் போனார்கள் குடும்பம் குடும்பங்களாக, இன்னமும் யோசிக்காதீர்கள். உங்களிடம் கையெழுத்துப் பிச்சை கேட்கின்றோம். 2009 இல் நாங்களும் சேர்ந்துதான் அவர்களை கைவிட்டோம். கையெழுத்து போட்டேனும் அவர்களின் கனவிற்கு கைகொடுப்போம். ஆதரவு கொர்டுங்கள்.

கருவறுத்தவர்களுக்கு தண்டனை கொடுக்க உலகம் தயார் இல்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஏனெனில் தமிழர்களின் இழப்பு ஒன்றும் அவர்களின் அரசியலில் தாக்கம் செலுத்தாது. அவர்களின் அரசியலில் தாக்கங்கள், ஏக்கங்கள் வரும்பொழுது மட்டும் இனவழிப்பு பதாகை மேல் எழும்.

எங்கள் இனத்தின் அழிப்பிற்கு நீதி கிடைக்க வேண்டும் அதற்கு ஆதரவு தாருங்கள் என்று கெஞ்சி கேட்ட முதல் இனமாக தமிழ் இனம்தான் வரலாற்றில் பதியப்பட்டுள்ளது என்பதை இவ்விடத்தில் பதிவு செய்துகொள்கின்றோம்.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிந்தவுக்கு வேட்புமனு இல்லை

# ஜனாதிபதியின் தீர்மானத்தில் மாற்றமில்லை



**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு வேட்பு மனு வழங்குவதில்லை என்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானத்தில் மாற்றமில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளர் எஸ்.பி. நாவின்ன தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட அனுமதிக்குமாறு மகிந்த ராஜபக்ஷ இதுவரையில் சுதந்திரக் கட்சித் தலைமையகத்திற்கு உத்தியோகபூர்வமாக எவ்வித கோரிக்கையையும் முன்வைக்கவில்லை.

எனவே ஒவ்வொரு இடத்தில் வெளியிடும் கருத்துக்களில் எவ்வித அடிப்படையிலும் கிடையாது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த போட்டியிட்டால் மற்றுமொரு முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்துள்ளார்.

இதனால் மகிந்த ராஜபக்ஷவிற்கு வேட்பு மனு வழங்குவதில் சிக்கல் நிலைமை உருவாகியுள்ளதாக எஸ்.பி. நாவின்ன தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு தொலைபேசி ஊடாக அளித்த நேர்காணலில் அவர் இதனைக் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகிந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் ஸ்தம்பிதம்

## ரஜீவ விஜேசிங்க தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காலத்தில் வடக்கு மற்றும் தெற்கில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் ஸ்தம்பிதமடைந்துள்ளதாக லிபரல் கட்சியின் தலைவர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவின் கொள்கைப் பிரகடனத்தை தயாரிக்க நானும் பங்களிப்பு வழங்கினேன்.

கொள்கை பிரகடனத்தின் ஆங்கில மொழியாக்கம் என்னுடையது.

கொள்கைப் பிரகடனத்தில் ஓர் வாக்குறுதி தவிர ஏனையவை நிறைவேற்றப்படவில்லை. ரணில் விக்கிரமசிங்கவுடன் இந்தப் பயணத்தை தொடர முடியாது.

மகிந்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதனால்தான் அவரை விட்டு வெளியேறினோம்.

மனித வளங்கள் அபிவிருத்தி அடையாத போதிலும் மகிந்த ஆட்சிக் காலத்தில் பௌதீக வளங்களில் பாரியளவு அபிவிருத்தி ஏற்பட்டது.

அது வடக்கிலும் தெற்கிலும் சம அளவில் இடம்பெற்றது. தற்போது இந்த அபிவிருத்தி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்திப் பணிகள் மீளவும் தொடரப்பட வேண்டுமாயின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய ஜனாதிபதியும் இணைந்து செயற்பட வேண்டும்.

நான் அதனையே பிரார்த்தனை செய்கின்றேன் என ரஜீவ விஜேசிங்க சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகிந்தவினது வருகை ஐ.தே.கவுக்கு நன்மை

## பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் மீள் பிரவேசம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நன்மை ஏற்படும் வகையில் அமைந்துள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த போட்டியிடுவது ஐக்கிய தேசியக் கட்சியை பாதிக்காது.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார்.

தேர்தலின் பின்னர் மகிந்த அரசியல் ரீதியாக குப்பைத் தொட்டியில் வீசி எறியப்படுவார்.

மக்களினால் நிராகரிக்கப்பட்ட கும்பல் ஒன்றுடன் மகிந்த தேர்தலில் போட்டியிடுவதனால், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை உயர்வடையும்.

ஊழல், மோசடிகள் மற்றும் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய வேட்பாளர்களை மக்கள் நிராகரிப்பார்கள்.

மீண்டும் மகிந்த தேர்தலில் போட்டியிடுவது தார்மீக ரீதியானதல்ல.

உச்ச நீதிமன்ற நீதியரசர் ஒருவர் ஓய்வு பெற்றுக்கொண்டதன் பின்னர் மீண்டும் மாவட்ட நீதிமன்றில் கடமையாற்றுவதனைப் போன்ற முயற்சி ஒன்றில் மகிந்த ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளதாக கபீர் ஹாசிம் சிங்கள பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## நட்பின் இலக்கணம்

ஒருவர் முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டு ஒரு மாதிரியாக வந்தார். என்ன விடயம் என்று விசாரித்தேன்?

எனது நண்பன் ஒருவனுடன் கருத்து வேறுபாடு... இனி மேல் நமக்குள் எந்த சம்பந்தமும் வேண்டாம் என்று நட்பை முறித்துக் கொண்டு வந்துவிட்டேன் என்றார்.

நண்பர்கள் என்று இருந்தால் கருத்து வேறுபாடு வரத்தான் செய்யும் என்றேன்.

கருத்து வேறுபாடு வராமல் இருப்பதற்கு ஏதாவது வழி உண்டா? என்று கேட்டார்.

அதைப்பற்றி நிபுணர்கள் சில யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள் என்றேன்.

**முதல் விடயம் என்ன தெரியுமா?**

உங்கள் நண்பருக்கு ஒரு செய்தி சொல்ல வேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை நீங்களே நேரடியாகச் சொல்லுங்கள். அல்லது உங்கள் கைப்பட கடிதம் எழுதுங்கள்.

அதாவது நேரடித் தொடர்பு முக்கியம். அதை விட்டு விட்டு இன்னொருவர் மூலமாக நண்பர்களுக்கு செய்தி அனுப்பினால் நீங்கள் சொல்லும் செய்தி அப்படியே போய்ச் சேராது. அது எதிர்மறையாவதற்கு கூட வாய்ப்பு உண்டு. கூட்டிக் குறைத்து சொல்லி விடுவார்கள். அது குழப்பத்தில் கொண்டு வந்து விடும்.

**இரண்டாவது யோசனை:** நீங்கள் ஒரு நல்ல காரியத்தைச் செய்யும் போது உங்கள் நண்பரையும் சேர்த்துக் கொள்ளுங்கள். அவருக்கும் அதில் ஓர் ஈடுபாட்டை உருவாக்குங்கள்.

**மூன்றாவது யோசனை:** நம் பக்கத்தில் இருக்கும் நண்பர் மகிழ்ச்சியடைவது மாதிரி ஏதாவது செய்ய வேண்டும். சின்னச் சின்ன செயல்களாக இருந்தாலும் பரவாயில்லை. அவர் நமக்கு எதுவும் செய்யவில்லையே, நாம் எதற்கு செய்ய வேண்டும் என்று நினைக்கக்கூடாது.

**நான்காவது யோசனை:** உங்களுக்கு ஒரு பிரச்சினையா? அல்லது உங்கள் நண்பருக்கு ஒரு பிரச்சினையா? எதுவாக இருந்தாலும் இரண்டு பேரும் சேர்ந்து உட்கார்ந்து ஆலோசனை செய்யுங்கள்.

நமது யோசனையும் கேட்கப்பட்டதே என்ற நினைப்பு அவருக்கு ஒரு மனநிறைவைக் கொடுக்கும்.

**ஐந்தாவது யோசனை:** உங்கள் நண்பர் ஏதோ ஒரு காரியத்தைச் செய்கிறார். நீங்கள் உடனே தவறு என்று தீர்ப்புச் சொல்லாதீர்கள். அவர் அதைச் செய்வதற்கான நியாயங்கள் எவ்வளவோ இருக்கும். அதைப் புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

**ஆறாவது யோசனை:** உங்கள் நண்பர் என்ன சொன்னாலும் அதைப் பொறுமையாக கேளுங்கள். அவர் சொல்வதைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர் சொல்ல விரும்புவதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அவர் சொல்ல முடியாமல் தவிப்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். இப்படி மூன்று விதமாகவும் அவ ரைப் புரிந்து கொண்டு அதற்குத் தகுந்தாற் போல் செயற்பட வேண்டும்.

**ஏழாவது யோசனை:** உங்கள் நண்பர் உங்களிடம் வந்து ஏதோ ஒரு கருத்தைச் சொல்கிறார். அது உங்களுக்குப் பிடிக்கவில்லை. அதற்காக உடனே நீ சொல்வது சரியில்லை.... நான் ஒத்துக் கொள்ள மாட்டேன் என்றெல்லாம் மறுத்துக் கூறாதீர்கள். அவர் சொல்வதையும் கேட்க வேண்டும். பொறுமையாக சிந்திக்க வேண்டும். அதன்பின்னர் பதில் சொல்ல வேண்டும்.

இப்படியெல்லாம் நடந்து கொண்டால் நண் பர்களுக்குள் கருத்து வேறுபாடு வராதாம். வல்லுநர்கள் தொகுத்துச் சொல்லியிருக்கும் யோசனைகள் இவை.

எனக்குத்தெரிந்த சில நண்பர்கள் உண்டு. அவர்களுக்குள்ளேயும் கருத்து வேறுபாடுகள் வராமல் இருப்பதற்கு சில நுட்பங்களைக் கையாள்வது உண்டு.

ஒருவர் சொன்னார் அந்த டாக்டர் சின்ன வயதிலிருந்து என்னோடு பழகியவர். நாங்கள் இருவரும் இணை பிரியாத நண்பர்கள். இருந்தாலும் கூட எனக்கு உடம்பு சரியில்லை என்றால் நான் அவரிடம் வைத்தியம் பார்க்க மாட்டேன் என்றார்.

ஏன் அப்படி? என்று கேட்டேன்.

எங்கள் நட்பு கெடக்கூடாது இல்லையா....அதனால் தான்! என்றார் அந்த நண்பர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குருப் பெயர்ச்சி பலன்கள்



**இராசியை நோக்கி வருகிறது!**
**நாளும் வெற்றி குவிகிறது!**
**பிறருக்கு கைகொடுத்து**
**உதவுவதில் முன்னிலை வகிக்கும்**
**சிம்ம இராசி நேயர்களே!**

பொது வாழ்வில் புகழ்கொடி நாட்டும் உங்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி எண்ணற்ற நற்பலன்களை வழங்கப் போகின்றது. உங்கள் ராசியைத் தேடி வந்திருக்கும் குருபகவான் பஞ்சம அஷ்டமாதிபதியாக விளங்குகிறார். பஞ்சமாதிபதி ராசியில் சஞ்சரிக்கும் பொழுது நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறையவே நடைபெறும். உங்களுக்கு ஆனி மாதம் 20 இறகு மேல் தேனான வாழ்க்கை அமையப் போகின்றது. அயல்நாடு வரை உங்கள் புகழ் பரவும். ஆதரவுக் கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். அஷ்டமாதிபதியாகவும் குரு விளங்குவதால் ஆரோக்கியத்தில் மட்டும் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

**கொள்கைப் பிடிப்போடு**
**செயறபடுவீர்கள்!**

உங்கள் கொள்கைகளை யாருக்காகவும், எதற்காகவும் நீங்கள் விட்டுக் கொடுக்க மாட்டீர்கள். பிறரது கட்டுப்பாட்டில் இருப்பது உங்களுக்குப் பிடிக்காது. தெய்வ நம்பிக்கையை அடிப்படையாக வைத்து நீங்கள் செய்யும் செயல்கள் ஒவ்வொன்றும் வெற்றி பெறும் என்பதை அனுபவத்தில் அறிந்து வைத்திருப்பீர்கள். இப்படிப்பட்ட குணாதிசயங்களைப் பெற்ற உங்களுக்கு தேடிவந்த குரு கோடி கோடியாய் நன்மைகளைக் கொடுப்பாரா என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

ராசியில் அடியெடுத்து வைக்கும் பொழுது, வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

தொழில் ஏற்பட்ட தொல்லைகள் அகலும். அலைச்சல் அதிகரிக்கும். ஆனாலும் அதற்கேற்ற விதத்தில் ஆதாயம் கிடைக்கும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். வழக்குகளில் வெற்றி கிட்டும். தீட்டிய திட்டங்கள் எல்லாம் வெற்றி பெறும். திசை எட்டிலும் உங்கள் புகழ் பரவும்.

உங்கள் ராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியாக குரு விளங்குகிறார். எனவே, அவரோடு ஜனவரி 2016 இல் ராகுவும் வந்து இணையப் போகின்றார். அர்த்தாஷ்டமச் சனியின் பார்வையும் குருவின் மீது பதியப் போகின்றது.

எனவே வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படாமலிருக்க, சர்ப்ப சாந்தி பரிகாரங்களை யோக பலம் பெற்றநாளில், அனுகூல ஸ்தலங்களில் செய்து கொள்வது நல்லது. அதுமட்டுமல்லாமல் இறைவனுக்கு வீரம் வந்த அட்டவீர ஸ்தலங்களுக்கும், இரணியனை சம்ஹாரம் செய்து பின்னால் நரசிம்ம மூர்த்தி இளைப்பாறிய ஸ்தலங்களுக்கும் சென்று வழிபட்டு வருவது நல்லது.

மகம் நட்சத்திரக் காலில் குரு சஞ்சரிக்கும் பொழுது, மகம், உத்ரம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு தடைகள் அகலவும், தன்னிகரில்லா வாழ்வு அமையவும், வைரவர் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**குரு பார்வை கொடுக்கும் யோகங்கள்!**

இதுவரை விரய ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் இப்பொழுது உங்களது ஜென்ம ராசியில் சஞ்சரிக்கப் போகின்றார். அங்கிருந்து கொண்டு 5, 7, 9 ஆகிய ஸ்தானங்களைப் பார்க்கப் போகின்றார். 'குரு பார்க்கக் கோடி நன்மை' என்பது முன்னோர் வாக்கு. எனவே அதன் பார்வை பதியும் இடங்களெல்லாம் புனிதமடையும்.

புத்திர ஸ்தானம், பாக்ய ஸ்தானம், பூர்வ, புண்ணிய ஸ்தானம், களத்திர ஸ்தானம், பிதுர்ரார்ஜித ஸ்தானம், பயண ஸ்தானம்




**அல்லல்கள் விலகி ஓடும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது பூர்வ புண்ணியத்தின் பலன் முழுமையாக கிடைக்கும் நேரமிது. மக்கள் செல்வாக்கும், மகத்தான பதவியும் கிடைக்கும். தேக்க நிலை அகன்று ஆக்க நிலை உருவாகும். சொத்துக்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். இனிய தம்பதியர்களுக்கு எதிர்பார்த்தபடியே புத்திரப்பேறு கிடைக்கும். குழந்தைகளால் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

சப்தம ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் கல்யாணக் கனவுகள் நனவாகும். அயல் நாட்டு முயற்சியில் வெற்றி கிட்டும். பிரிந்த தம்பதியர் இணையும் வாய்ப்பும், பிரச்சினைகளிலிருந்து விடுபடும் சூழ்நிலையும் உருவாகலாம். பிணக்குகள் அகலவும், பிரியங்கள் கூடவும் குருவை கொண்டைக் கடலை மாலை சூட்டி வழிபாடு செய்யுங்கள்.

9 ஆம் இடத்தை குரு பார்ப்பதால் பொன், பொருட்கள் சேரும். பூமி யோகம் கிட்டும். தந்தை வழி ஆதரவு கூடும். தக்கவிதத்தில் சகோதரர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பங்காளிப் பகை மாறும். புதிய இடம் வாங்கி வீடு கட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.


**கேது சாரத்தில்**
**குரு சஞ்சரிக்கும் பொழுது!**

பயணங்கள் அதிகரிக்கும். பக்க பலமாக இருப்பவர்களில் ஒருசிலர் விலகலாம். புதிய முயற்சிகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்படலாம். விரயங்கள் கூடும். வெளிநாட்டில் சென்று பணிபுரிய வேண்டுமென்ற சூழ்நிலை உருவாகலாம். அசையா சொத்துக்களால் பிரச்சினைகள் அதிகரிக்கும்.

குடும்பத்தில் உள்ளவர்களிடம் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்ப்பதன் மூல்மும், கோபத்தைக் குறைத்துக்கொண்டு செயறபடுவதன் மூலமும் எண்ணங்களை எளிதில் பூர்த்தி செய்து கொள்ள இயலும்.

**சுக்ர சாரத்தில் குரு**
**சஞ்சரிக்கும் பொழுது!**

இக்காலம் ஒரு பொற்காலம் என்றே சொல்ல வேண்டும். எடுத்த செயல்களில் எளிதில் வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். இடம், பூமி சேர்க்கை ஏற்படும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. மணி விழா, மண விழா போன்றவைகள் நடைபெற்று மகிழ்ச்சியை வழங்



உயரும். வெற்றிக்கொடி பறக்க வாழ்க்கை நடத்துவீர்கள்.

**அக்கறை செலுத்த வேண்டிய**
**வக்ர காலம்!**

குருவின் வக்ர காலத்தில் பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் தோன்றி மறையும். பூர்வீக சொத்துக்களில் முறையான பங்கு கிடைக்கவில்லையே என்று கவலைப் படுவீர்கள். பத்திரப் பதிவில் தாமதங்கள் ஏற்படும்.

வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதன் மூலம் விரயங்களை சுப விரயங்களாக மாற்றிக் கொள்ள முன்வரலாம். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். இக்காலத்தில் பொன்னவன் குருவை வழிபடுவது நல்லது.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

வெள்ளி தோறும் வைரவர் வழிபாட்டை மேற்கொண்டு வளர்ச்சியை கூட்டிக் கொள்ளுங்கள்.

**ஜோதிடக் கலைமணி**
**சிவல்புரி சிங்காரம்**

**சிம்ம ராசியில் பிறந்த**
**பெண்களுக்கு!**

இந்தக் குருப்பெயர்ச்சி இனிய பலன்களை உங்களுக்கு வழங்கப் போகிறது. ஜென்ம குருவின் ஆதிக்கத்தால் தேசம் போற்றும் வாழ்க்கையும், திடீர் திருப்பங்களும் ஏற்படலாம். குருவின் பார்வை பலத்தால் குடும்ப ஒற்றுமை கூடும். சேமிப்பு உயரும். கணவன்–மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்வி முயற்சியும் கை கூடும். கல்யாண முயற்சியிலும் வெற்றி கிடைக்கும்.

ஜென்ம குரு என்பதால் ஆரோக்கியத் தொல்லை உருவாகி மறையும். பொது நலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பொறுப்புகள் கூடும். அரசியல் செல்வாக்கு மேலோங்கும். எதிர்ப்புகள் மறையும். நினைத்ததைச் சாதிக்கும் வல்லமை குரு பார்வையால் உங்களுக்கு உண்டு. அசையா சொத்துக்கள் உங்கள் பெயரில் வாங்க குடும்ப உறுப்பினர்கள் சம்மதிப்பர். ராகு–கேது பெயர்ச்சிக்குப் பின்னால் குருவோடு ராகு இணைவதால் குரு வழிபாடும், சர்ப்ப ப்ரீதியும் செய்துகொள்வது நல்லது. வைரவர் வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும். பவுர்ணமி கிரி வலம் வருவதன் மூலம் பலன்களை அதிகமாகப் பெற இயலும்.

**(நாளை கன்னி)**

## இராசியை நோக்கி வருகிறது!
## நாளும் வெற்றி குவியப்போகிறது!

ஜென்மத்தில் குருதான் வந்தால்
சிறப்பான பார்வையாலே,
பொன்னான மாற்றம் சேரும்!
புதியதோர் வழிபிறக்கும்!
கண்ணான தொழிலில் வந்த
கவலைகள் பறந்து ஓடும்!
எந்நாளும் குருவைப் பார்த்தால்
எடுத்த செயல் வெற்றியாகும்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது பஞ்சமாதிபதியாக விளங்கும் குரு உங்கள் போன்ற இடங்களில் எலலாம் குரு பார்வை பதிவதால் அந்த ஆதிபத்யங்களில் இருந்த தடைகள் அகலும். தக்க விதத்தில் வாய்ப்புகள் வந்து சேரும்.

பஞ்சம ஸ்தானம் தன்னை
பாங்காக குருவும் பார்த்தால்
நெஞ்சினில் நினைத்த தெல்லாம்
நிறைவேறும்! வெற்றிகிட்டும்!
ஒன்பதை குருதான் பார்க்க
உன்னத வாழ்க்கை வாய்க்கும்!
அஞ்சிடும் பகையும் மாறும்!

கும். தொழில் வியாபாரத்தில் கூட்டாளிகள் கூடுதல் லாபத்தைக் கொண்டு சேர்ப்பர்.


**சூரிய சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**

அரசியல் செல்வாக்கு மேலோங்கும். அதிகாரத்துவ யோகம் செயறபடும். விரயங்களும், வீண் செலவுகளும் குறையும். வீடு வாங்கும் எண்ணம் கைகூடும். அரை குறையாக நின்ற பணி தொடரும். தொழி லில் புதிய கூட்டாளிகள் வந்திணைவர். பிரபல்ய யோகம் வந்து சேரும். வங்கிச் சேமிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூலை 20ம் திகதி கியூபாவில் அமெரிக்க தூதரகம் திறப்பு

## ஒபாமா அறிவிப்பு



உலகின் பரம எதிரி நாடுகளாக அமெரிக்காவும் கியூபாவும் கருதப் பட்டு வந்தது. அதற்கேற்ப அரை நூற்றாண்டுக்கும் அதிகமாக இரு நாடுகளும் பகைமை பாராட்டி வந்தன. இந்நிலையில் இருநாடுக ளுக்குமிடையே மீண்டும் நட்பு றவை ஏற்படுத்தும் விதமாக பனா மாவில் நடைபெற்ற உச்சி மாநாட் டின் போது இருநாட்டு தலைவர்க ளும் சந்தித்து பேசினர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இச் சந்திப்பில், கியூபா மீது விதிக்கப்பட் டுள்ள பொருளாதார தடைகளை நீக்குவது தொடர்பாகவும், பயங்கர வாதிகளுக்கு ஆதரவளிக்கும் நாடு கள் என அமெரிக்கா வைததுள்ள பட்டியலில் இருந்து கியூபாவை நீக் குவது தொடர்பாகவும் முக்கிய பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

இப்பேச்சுவார்த்தையின் எதிரொ லியாக இரு நாட்டு தலைநகரங்க ளான ஹவானா மற்றும் வோஷி ங்டனில் தூதரகங்களை திறப்பது தொடர்பான முக்கிய அறிவிப்பை அமெரிக்காவின் ஜனாதிபதி ஒபாமா நேற்று முன்தினம் வெளியிட்டார். வெள்ளை மாளிகையில் உள்ள ரோஜா பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய ஒபாமா, ஜூலை 20 ஆம் திகதி கியூபா தலைநகர் ஹவானா வில் அமெரிக்க தூதரகம் திறக்கப்ப டும் என்றார்.

தனது ஜனாதிபதி பதவிக்காலம் 2016 ஆம் ஆண்டுடன் நிறைவு பெறும் நிலையில், கியூபாவுடன் ஒபாமா மேற்கொண்டுள்ள வரலா ற்று சிறப்புமிக்க ஒப்பந்தம், ஜனநா யக கட்சியின்சார்பில்போட்டியிடும்வேட் பாளருக்கு சாதகமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

# அல்-கொய்தாவின் தலைவன் லாகூரில் சுட்டுப் படுகொலை



பாகிஸ்தான் நாட்டில் செயற்பட்டு வரும் அல்கொய்தா தீவிரவாத இயக்கத்தின் தலைவர் லாகூர் அருகே சுட்டுக்கொல்லப்பட்டுள் ளான். இந்த அதிரடி தாக்குதலில் மேலும் 3 தீவிரவாதிகள் பலியான தாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

### தேடுதல் வேட்டை

அல்கொய்தா தீவிரவாத இயக் கத்தினர் பல்வேறு நாடுகளில் பது ங்கி வாழ்ந்து தங்கள் தீவிரவாத செயலை அரங்கேற்றி வருகின் றனர். அந்த வகையில் அந்த இயக் கத்தினர் லாகூர் நகரில் உள்ள உளவுப்படை அலுவலகத்தின் மீது தாக்குதல் நடத்தப்போவதாகவும், முக்கிய அரசியல்வாதிகளை கொல்லப்போவதாகவும் பாகிஸ் தான் தீவிரவாத தடுப்பு பிரிவு கொமாண்டோ படையினருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து கொமாண்டோபடை யினர் லாகூர் பகுதியில் கடந்த 29 ஆம் திகதி தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர். லாகூர் அருகே உள்ள சேகுபுரா மாவட்டத்தில் அல்கொ ய்தா இயக்கத்தினர், கட்டுமான பணி நடந்து வரும் ஒரு வீட்டில் தங்கி இருந்தது தெரியவந்தது. உடனே அவர்களை கொமாண்டோ படையினர் சுற்றிவளைத்து சுட்டனர்.

### 4 பேர் சாவு

இதில் 3 தீவிரவாதிகள் கொல் லப்பட்டனர். ஒரு தீவிரவாதி வெடி குண்டை வெடிக்கச்செய்து தற்கொலை செய்து கொண்டார். மேலும் 2 தீவி ரவாதிகள் படுகாயத்துடன் பிடி பட்டனர். கொல்லப்பட்ட தீவிரவாதி களில் ஒருவர் பாகிஸ்தானுக்கான அலகொய்தா இயக்கத்தின் தலைவன் அப்தாலி என தெரியவந்தது.

பிடிபட்ட தீவிரவாதிகளிடம் நட த்திய விசாரணையில் வஜிரிஸ்தா னில் தாங்கள் தீவிரவாத பயிற்சி பெற்றதாகவும், அங்கிருந்து பழ ங்கள் ஏற்றி வரப்பட்ட கண்டெய் னரில் ஆயுதங்களை கடத்தி வந்த் தாகவும் தெரிவித்தனர். இதைய டுத்து தீவிரவாதிகள் தங்கி இருந்த இடத்தில் இருந்து ஆயுதங்கள், பாகிஸ்தானின் முக்கிய வரை படங்கள் உள்ளிட்டவை கைப்பற் றப்பட்டுள்ளன. (இ-7)

# இராணுவத் தாக்குதலில் 100 தீவிரவாதிகள் பலி!

## 17 படை வீரர்களும் உயிரிழப்பு

(கெய்ரோ) ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கும் எகி ப்து இராணுவத்திற்குமிடையே நடந்த மோதலில் 17 இராணுவ வீரர்களும 100 தீவிரவாதிகளும் உயிரிழந்துள்ளனர்.



எகிப்து நாட்டின் வடகிழக்கு பகுதியான வடக்கு சினாயில் உள்ள பல இராணுவ சோதனை சாவடி களை குறிவைத்து ஒரே நேரத்தில் தீவிரவாதிகள் தற்கொலைப்படை மற்றும் பயங்கர ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்கு தலில் 60 இராணுவ வீரர்கள் கொல் லப்பட்டதாக கூறப்பட்டது. ஆனால இராணுவம் பலியானவர்கள் தொடர் பாக புதிய தகவல்களை தெரிவித் துள்ளது.

இது தொடர்பாக இராணுவ செய்தி தொடர்பாளர் கூறியதாவது, இராணுவம் மற்றும் பொலிஸார் தீவிரவாதிகள் மீது கடும் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் போர் விமானங்களும் பயன்படுத்தப் பட்டன. ஒரு நாள் முழுவதும் நட ந்த சண்டையின் முடிவில் 100 தீவிர வாதிகள் பலியானதாக தெரிவித் துள்ளார்.

மேலும் இராணுவத்தரப்பில் 13 அதிகாரிகள் உட்பட 17 பேர் பலி யானதாகவும், தற்போதைய சூழ் நிலை முழுக்கட்டுப்பாட்டில் கொணடு வரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரி வித்தார்.

கடந்த 2013 இல் எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி முகம்மது மோர்சி பதவியில் இருந்து வெளி யேறியதற்கு பிறகு அங்கு பொலிஸ் மற்றும் இராணுவ வீரர்களை குறி வைத்து தாக்குதல் நடத்தப்படுவது அதிகரித்துள்ளது.

இதுவரை 600 இற்கும் மேற்பட்ட பாதுகாப்பு படை வீரர்கள் பலியா கியுள்ளனர். (இ-7)

# மதுபான விடுதியில் துப்பாக்கிச் சூடு!

## 6 பேர் பலி

பிரேசிலின் சா போலோ நக ரின் புறநகர் பகுதியில் உள்ள மதுபான விடுதியில் நேற்று முன் தினம் மர்ம நபர் நடத்திய துப்பா க்கிச் சூட்டில் 6 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பொருளாதாரத்தில் பின் தங்கிய மாவட்டமான சா லூயிஸ் மாவட் டத்தில் உள்ள மதுபான விடுதி ஒன்றில் இச் சோக சம்பவம் நடை பெற்றுள்ளது. நேற்று காலை துப் பாக்கியுடன் மதுபான விடுதிக்குள் நுழைந்த மர்ம நபர் ஒருவர், அங்கிருந்தவர்கள் மீது கண் மூடித் தனமாக சுடத்தொடங்கினார். இதில் 3 பேர் சம்பவ இடத்திலேயே இரத்த வெள்ளத்தில் உயிரிழந்தனர்.

மதுபான விடுதிக்கு வெளியே தப்பி செல்ல முயன்றவர்கள் மீதும் மர்ம நபர் தாக்குதல் நடத்தினர். இதில் 3 பேர் பலியாகினர். இத் தாக்குதலில் ஒருவர் படுகாயம டைந்தார். இதையடுத்து அங்கு விரைந்து வந்த பொலிஸார், துப் பாக்கிச் சூடு குறித்தும், இச்சம்ப வத்தில் ஈடுபட்ட நபர் குறித்தும் தீவிர விசாரணையில் இறங்கி யுள்ளனர். (இ-7)



# கப்பல் கவிழ்ந்ததில் 36பேர் உயிரிழப்பு!



பிலிப்பைன்சில் 173 பயணிக ளுடன் சென்ற படகு கடலில் கவிழ் ந்ததில் 36 பேர் பலியானார்கள். மேலும் அதில் பயணம் செய்த 118 பேர் உயிருடன் மீட்கப்பட்ட நிலை யில், 19 பேரை காணவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டின் லெய்டே மாகா ணத்திற்குட்பட்ட ஓர்மோக் நகரில் இருந்து செபுவுக்கு கிழக்கே உள்ள காமோட்டெஸ் தீவுக்கு அக்கப்பல் சென்று கொண்டிருந்தது. இந்நிலை யில் கடலில் வீசிய சூறாவளி காற்றில், திடீரென 27 மீற்றர் நீளம் கொண்ட அப்படகு கடலில் மூழ் கியது. இதையடுத்து அங்கு விரை ந்த கடலோர காவற்படை வீரர்கள் கடலில் விழுந்து உயிருக்கு போராடி யவர்களையும், சடலங்களையும் மீட்டதாக அதன் லெப்டினன்ட்டான கிறிஸ்டோபர் கேனட் கூறினார். இச்சம்பவத்தில் படகில் வந்த 19 பேரை காணவில்லை என்றும், அவர்களை தேடும் பணி தீவிரப்ப டுத்தப்பட்டுள்ளதுடன் உயிருடன் மீட்கப்பட்ட அனைவரும், ஓர்மோ க்கை சுற்றியுள்ள வைத்தியசா லைகளில் சிகிச்சைக் காக அனு மதிக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர் களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப் பட்டு வருகிறது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த தரப்பால் 40 ஆசனங்களைக்கூட தேர்தலில் பெற்றுக்கொள்ள முடியாதாம்

## ஜோன் அமரதுங்க தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பிற்கு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 40 ஆசனங்களைக் கூட பெற்றுக் கொள்ள முடியாது என அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.


மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடுவது ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகத்தன்மையையே ஏற்படுத்தும்.

மகிந்த ராஜபக்ஷவை பின்தள்ளி வெற்றியீட்ட அரசியல் பொறிமுறைமை உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள், எதிர்வரும் தேர்தல் பிரசாரத்தின் போது மகிந்த தரப்பிற்கு பாதகமாகவே அமையும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் மகிந்த பெற்றுக்கொண்ட 58 இலட்ச வாக்குகளை இம்முறை பொதுத் தேர்தலில் பெற்றுக் கொள்ள முடியாது.

பொதுத் தேர்தலின் போது 120 ஆசனங்களைப் பெற்றுக்கொள்வது ஐக்கிய தேசியக் கட்சியின் உத்தேசமாக அமைந்துள்ளது என ஜோன் அமரதுங்க சிங்கள ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார். (இ-7)



# அன்னப் பறவையில் ஐ.தே.கட்சி கவனம்

ஐக்கிய தேசியக் கட்சி அன்னப் பறவை சின்னத்தில் போட்டியிடுவது குறித்து கவனம் செலுத்தி வருகின்றது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சி வேறு சில அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களை இணைத்து அன்னப்பறவை சின்னத்தில் போட்டியிடுவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

இதற்கான ஆரம்ப கட்டப் பேச்சு வார்த்தைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது குறித்து மிக முக்கியமான கூட்டமொன்று எதிர்வரும் இரண்டு நாட்களில் நடைபெறவுள்ளது.

தமிழ் - முஸ்லிம் கட்சிகளை இணைத்துக் கொண்டு கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது பொது வேட்பாளராக போட்டியிட்ட ஜனாதிபதி மைத்திரபாலவிற்கு ஆதரவளித்த தரப்புக்களை மீள ஒன்றிணைக்க முயற்சிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும், இதுவரையில் அன்னப்பறவை சின்னத்தில் போட்டியிடுவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி உத்தியோகபூர்வமாக எதனையும் அறிவிக்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் வியூகத்தின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சி அடுத்த கட்ட முன்நகர்வை மேற்கொள்ளும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, அன்னப்பறவை சின்னத்தில் கட்சிகளை ஒன்றிணைத்து அதற்கு தலைமை தாங்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவும் விருப்பம் வெளியிட்டுள்ளதாக உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

## மீண்டும் சுயாட்சி அதிகாரங்களை கோருகிறார்

# சம்பந்தன்மீது குற்றச்சாட்டு!

(கொழும்பு)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் மீண்டும் சுயாட்சி அதிகாரங்களை கோரி நிற்பதாக சிங்கள ஊடகமொன்று குற்றம் சுமத்தியுள்ளது.**

தமிழ் மக்களுக்கு சுயாட்சி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென அண்மையில் சம்பந்தன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.



திருகோணமலை தமிழ் அபிவிருத்தி மையத்தினால் திருமலையில் நடத்திய நிகழ்வு ஒன்றில், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாக, சுயாட்சி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டியது அவசியமானது என சம்பந்தன் கூறியதாக சிங்கள ஊடகம் சுட்டிக் காட்டியுள்ளது.

சம்பந்தனின் இந்தக் கருத்தைத் தொடர்ந்து உலகத் தமிழர் பேரவையும் சுயாட்சி அதிகாரங்கள் குறித்து கோரிக்கை விடுத்துள்ளதாக அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

லண்டனில் வைத்து இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளது.

தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இவ்வாறான ஓர் செய்தியை சிங்கள ஊடகம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும் இந்த செய்தி குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரையில் உத்தியோகபூர்வமாக எவ்வித பதில்களையும் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்னும் 500 ஆண்டுகள் கடந்தாலும் கூட மகிந்த போன்ற தலைவர் உருவாகமாட்டார்

## குமார வெல்கம கூறுகிறார்

இன்னும் 500 ஆண்டுகள் கடந்தாலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போன்றதொரு தலைவர் உருவாகமாட்டார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் மக்கள், முன்னாள ஜனாதிபதி மகிந்த மீது அளவு கடந்த நேசம் கொண்டுள்ளனர்.

இவ்வளவு மக்களினால் நேசிக்கப்படும் ஓர் தலைவர் இலங்கையில் மட்டுமன்றி உலகிலேயே இல்லை.

இன்னும் 500 ஆண்டுகள் கடந்தாலும் மகிந்த போன்றதொரு தலைவர் உருவாகமாட்டார். இவர வேறு யாருமல்ல துட்டகைமுனு இளவரசரேயாகும்.

இந்த நாட்டு மக்கள் மகிந்தவை போன்றே என்னையும் நேசிக்கின்றனர்.

மகிந்தவிற்கு அடுத்தபடியாக நாட்டு மக்களினால் நேசிக்கப்படுபவர் இந்த குமார வெல்கமவாகும் என அவர் பதுரலிய பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகிந்த புதிய கூட்டணி அமைத்து போட்டியிடுவது குறித்து கவனம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புதிய கூட்டணி ஒன்றில் தேர்தலில் போட்டியிடுவது குறித்து கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆகியவற்றில் போட்டியிடாது புதிய கூட்டணி ஒன்றில் போட்டியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனு தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவாளர்ளையும் தற்போதைய ஜனாதிபதியின் ஆதரவாளர்களையும் இணைக்கும் முயற்சி தோல்வியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[illegible] னையும் போட்டியிடச் செய்வதனால் ஜனாதிபதி தரப்பின் நிபந்தனையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென மகிந்த தரப்பிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உள்ளிட்ட சிலருக்கு வேட்பு மனு வழங்கப்படாது எனவும் அந்த நிபந்தனைக்கு இணங்கினால் வேட்பு மனு வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி தரப்பு அறிவித்துள்ளது.

எனினும், இந்த நிபந்தனையை மகிந்த தரப்பு ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளது.

இதனால் மகிந்த தரப்பு தனியான வேட்பு மனு தயாரிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த புதிய கூட்டணியில் போட்டியிட 80 வாய்ப்புக்கள் உண்டு எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# மகிந்தவுக்கு இடம் இல்லை

## மைத்திரி உறுதி என்கிறார் ராஜித

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் மகிந்த ராஜபக்ஷ பொதுத்தேர்தலில் போட்டியிட ஜனாதிபதி இணங்கப்போவதில்லை என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதில் ஜனாதிபதி உறுதியுடன் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, மகிந்த ராஜபக்ஷவுக்கு வேட்புமனு அனுமதி வழங்கினால் அந்தக்கூட்டமைப்பில் உள்ள மகிந்த எதிர்த் தரப்பு, எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து ஆராய்ந்து வருகிறது என்றும் ராஜித தெரிவித்துள்ளார். (இ-7)

# நீதியரசருக்கு எதிராக வழக்கு!

(கொழும்பு)

தமது வீட்டில் பணிசெய்த பெண்ணை கைத்துப்பாக்கியின் மூலம் அச்சுறுத்தி தாக்கினார் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள உயர்நீதிமன்ற நீதியரசர் சரத் டி ஆப்ரு கைது செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த தாக்குதில் சம்பவம் தொடர்பில் கல்கிஸை பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்யவுள்ளனர்

இதனைடுத்து கட்டளைக்கு அமைய நடவடிக்கைகள் அமையவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே இந்த தாக்குதல் சம்பவம் குறித்து நீதியரசரிடம் வாக்குமூலத்தை பொலிஸார் கோரியபோதும் அதற்கு அவர் இணங்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.


இதனையடுத்து இந்த விடயத்தை பொலிஸ்மா அதிபர், குற்றவியல் பொலிஸ் திணைக்களத்திடம் கையளித்தார்.

தாக்குதலுக்கு உள்ளான பெண் தற்போது சிகிச்சைக்காக [illegible] போவில வைத்தியசாலை[illegible] அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகிலேயே முதன் முறையாக

# போக்குவரத்து நெரிசலை தவிர்க்க கொல்கத்தாவில் ரோப் கார் வசதி



மேற்குவங்க மாநிலம் கொல் கத்தாவில் போக்குவரத்து நெரி சலுக்கு தீர்வுகாணும் வகையில், உலகிலேயே முதன் முறையாக ரோப் கார் வசதி அறிமுகப்படுத்தப்பட வுள்ளன.

மாநில அரசும் கன்வேயர் அண்ட் ரோப்வே சர்வீசஸ் என்ற தனியார் நிறுவனமும் இணைந்து இந்த திட்டத்தை செயற்படுத்த திட்டமிட்டுள்ளன. சீல்டாவிலிருந்து பிபிடி பாக் வரையிலும், ஹவுரா விலிருந்து புதிய தலைமைச் செயலகம் அமைந்துள்ள நபன்னா வரையிலும் என 2 வழித்தடங் களில் இந்த பாதை அமைக்க திட்ட மிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து, கன்வேயர் அண்ட் ரோப்வே சர்வீசஸ் நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் சேகர் சக்ர வர்த்தி கூறியதாவது,

சுற்றுச்சூழல் சீர்கெடாமலும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க் கும் வகையிலும் புதுமையான போக்குவரத்து வசதியை ஏற்படுத்த வேண்டும் என்பது எங்கள் கனவு திட்டம். அந்த வகையில் உல கிலேயே முதன்முறையாக, கொல் கத்தாவில் ரோப் கார் வசதியை அறி முகப்படுத்த உள்ளோம்.

மாநில நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் மற்றும் கொல் கத்தா பெருநகர மேம்பாட்டு ஆணை யத்தின் தலைவர் பிர்ஹத் ஹகிம் ஆகியோருடன் இதுகுறித்து பேச்சு வார்த்தை நடத்தி உள்ளோம். இது தொடர்பான திட்ட அறிக்கையை கட்டமைப்பு நிறுவனம் ஒன்று தயாரித்து வருகிறது. அவை தயார் ஆனதும் டென்டர் கோரப்படும்.

இந்த ரோப் கார் சேவை மின் சாரத்தில் செயற்படும். ஒவ்வொரு 750 மீற்றர் இடைவெளியிலும் நிறுத்தூங்கள் அமைக்கப்படும். மணிக்கு 12.5 கி.மீ வேகத்தில் செல் லும் இந்தக் கார்கள் மூலம் ஒரு மணி நேரத்தில் 2,000 பேர் பய ணிக்கலாம். இவ்வாறு அவர் தெரி வித்தார்.

அந்த நிறுவனத்தின் இயக்குநர் ரச்சனா முகர்ஜி கூறும்போது, நெரி சல் மிகுந்த இடங்களான சீல்டா, கல்லூரி சாலை, பூங்கா சாலை ஆகிய இடங்களில் விரிவான ஆய்வு நடத்தி முழுதிட்ட அறிக் கையை மாநில அரசிடம் ஒப்படைத் துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஆந்திர வங்கியில் தீ விபத்து 30 இலட்சம் ரூபாய் கருகியது



ஆந்திர மாநிலம், குண்டூர் மாவட்டத்தில் கடந்த 30ஆம் திகதி வங்கியில் ஏற்பட்ட தீ விபத்தில் 30 இலட்சம் ரூபாய மதிப்பிலான பணத் தாள்கள் கருகின.

குண்டூர் மாவட்டம், சிலகலூரு பேட்டை போஸ் வீதியில் ஆந்திரா வங்கிக் கிளையுள்ளது.

இங்கு கடந்த 30ஆம் திகதி மதியம் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. இதைக் கண்டு வங்கியில் இருந்த வாடிக்கையாளர்கள் அலறியடித்து ஓட்டம் பிடித்தனர்.

உடனே இதுகுறித்து தீயணைப்பு மற்றும் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

அங்கு விரைந்து வந்த தீ யணைப்புத் துறையினர் சுமார் 2 மணிநேரம்போராடி தீயை அணைத் தனர்.

பின்னர் வங்கியின் துணை பொது மேலாளர் கிரீஷ் குமார் செய்தியாளர்களிடம் கூறும் போது, வங்கியின் ஸ்டோர் ரூமில் மின் கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட் டுள்ளது.

இதில் சில ஆவணங்கள், 30 இலட்சம் ரூபாய வரை பணத் தாள்கள் எரிந்துள்ளன. ஆனால், லொக்கரில் இருந்த நகைகளும், விவசாயிகள் அடகு வைத்துள்ள பட்டா பாஸ் புத்தகங்களும் பத்திர மாக உள்ளன.

சம்பந்தப்பட்ட விவசாயிகள், வாடிக்கையாளர்கள் வங்கிக்கு வந்து தங்களின் ஆவணங்கள் மற்றும் நகைகளை சரி பார்த்துக் கொள்ள லாம். யாரும் அச்ச மடையத்தேவை யில்லை என மேலும் தெரிவித் தார. (இ-7)

# மேற்கு வங்காளத்தில் கனமழை; நிலச்சரிவில் சிக்கி 38 பேர் பலி!

(சிலிகுரி)

மேற்கு வங்காளத்தில் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 38 பேர் உயிரிழந்தனர். அங்கு மீட்பு பணிகளில் துணை இராணுவப்படைகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

**சேறும் சகதியும் மூடின**

மேற்கு வங்காளத்தில் பரவ லாக கனமழை பெய்து வருகிறது. அங்கு இமயமலை அடிவாரத்தில் அமைந்துள்ள டார்ஜிலிங் மாவட் டத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவில் பலத்த மழை கொட்டியது. இதனால் மாவட்டத்தின் பல பகுதி களில் நிலச்சரிவு ஏற்பட்டது.

குறிப்பாக சிலிகுரிக்கு அருகே உள்ள மிரிக் மற்றும் குர்சியாங் உள்ளிட்ட பகுதிகளில் கடும் நிலச் சரிவு ஏற்பட்டு, அருகில் இருந்த வீடுகளை சேறும் சகதியும் மூடிக் கொண்டன. மேலும் பெரிய பெரிய பாறைகளும் உருண்டு வந்து வீடுகள் மீது விழுந்து நொறுக்கின.

இதனால் வீடுகள் மற்றும் கட் டடங்கள் அனைத்தும் தரைமட்ட மாகின. இதனால் வீடுகளில் தூங் கிக்கொண்டு இருந்தவர்கள் உயி ரோடு மண்ணில் புதைந்தனர். இந்த கோர சம்பவத்தில் சிக்கி பல்வேறு பகுதிகளில் வசித்து வந்த மொத்தம் 38 பேர் உயிரிழந்தனர்.

இது குறித்து தகவல் அறிந்த தும் மாவட்ட நிர்வாகம் மீட்புப்பணி களை முடுக்கி விட்டது. அதன்படி மாவட்டபொலிஸாருடன் இணைந்து துணை இராணுவத்தினர் மீட்புப் பணிகளை தொடங்கினர். இதன் பயனாக உயிரிழந்த 38 பேரின் உடல்களும் மீட்கப்பட்டன.

**உயிரிழப்பு அதிகரிக்கும்**

இந்த நிலையில் கடும் நிலச் சரிவு ஏற்பட்ட அந்த பகுதிகளில் வசித்து வந்த மேலும் 6 பேர் மாயமாகி இருப்பது தெரியவந்து உள்ளது.

இதைத்தொடர்ந்து அவர்களை தேடும் பணிகள் முடுக்கி விடப்பட்டு உள்ளன. அங்கு மீட்பு பணிகளுக் காக பேரிடர் மீட்புக்குழுவினரும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

மாவட்டம் முழுவதும் பரவலாக நிலச்சரிவு ஏற்பட்டு உள்ளதால், பல்வேறு இடங்களில் வீதிகளில் துண்டிக்கப்பட்டு கிடக்கின்றன. மேலும் மின்கம்பங்கள் மற்றும் மரங்கள் வேருடன் சாய்ந்து கிடக் கின்றன. இதனால் உயிரிழப்பு இன்னும் அதிகரிக்கும் என கூறப் படுகிறது.

**மம்தா பானர்ஜி விரைந்தார்**

இதற்கிடையே மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி, போல் பூர் மற்றும் முர்ஷிதாபாத் மாவட்டங் களில் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டி ருந்தார்.

டார்ஜிலிங்கில் ஏற்பட்ட நிலச் சரிவு குறித்த தகவல் அறிந்ததும் உடனே அவர் தனது பயணத்தை இரத்து செய்து விட்டு டார்ஜிலிங் விரைந்தார். முன்னதாக, கூச்பெகர் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற் கொண்டிருந்த மாநில தலைமை செயலாளர் பாசுதேப் பானர்ஜியை, சிலிகுரி சென்று மீட்பு பணிகளை கவனிக்குமாறும் அவர் உத்தர விட்டார்.

மேற்கு வங்காளத்தில் பெய்து வரும் பலத்த மழையால், தீஸ்தா மற்றும் ஜல்தாகா ஆறுகளில் அபாய அளவை தாண்டி வெள்ளம் செல்கிறது. எனவே ஜல்பாய்குரி மாவட்டத்தில் பலத்த உஷார் நிலை பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

**பிரதமர் இரங்கல்**

நிலச்சரிவில் சிக்கி உயிரிழந் தவர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரி வித்து உள்ளார்.

இது குறித்து டுவிட்டர் இணை யதளத்தில் அவர் கூறுகையில், 'டார்ஜிலிங் மாவட்டத்தில் நிலச்சரி வில் சிக்கி பலர் உயிரிழந்திருப்பது குறித்து ஆழ்ந்த வருத்தமடைந் தேன். அவர்களின் குடும்பத்தின ருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரி வித்துக்கொள்கிறேன்' என்று கூறி யுள்ளார்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த வர்களின் குடும்பத்தினருக்கு பிரத மரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து தலா 2 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படுவதாக கூறியுள்ள பிரதமர், சம்பவ இடத் துக்கு சென்று நிலைமைகளை ஆய்வு செய்யுமாறு உள்துறை இணை அமைச்சர்கிரண் ரெஜிஜு வுக்கும் அறிவுறுத்தியுள்ளார். (இ-7)

# சல்மான்கான் மனு மீதான விசாரணை தள்ளிவைப்பு

மும்பை பாந்திரா பகுதியில் கடந்த 2002ஆம் ஆண்டு செப்டெம் பரில் இந்தி நடிகர் சல்மான்கானின் கார் மோதி விபத்துக்குள்ளானதில், ஒருவர் பலியானார். 4 பேர் படு காயம் அடைந்தனர்.

இந்த சம்பவத்தில் சல்மான் கான் குடிபோதையில் இருந்தது கண்டறியப்பட்டது. அவர் மீதான வழக்கை ஏறத்தாழ 13 ஆண்டு களாக விசாரித்து வந்த மும்பை நீதிமன்றம், அவருக்கு 5 ஆண்டு கள் கடும்காவல் தண்டனை விதித்து கடந்த மே மாதம் தீர்ப் பளித்தது.

இதை எதிர்த்து மும்பை உயர் நீதிமன்றத்தில் சல்மான்கான் தரப்பில் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதை விசாரணைக்கு ஏற்று கொண்ட நீதிபதிகள், சல்மான் கான் மீதான தண்டனையை நிறுத்தி வைத்தனர். இந்தநிலை யில், சல்மான்கானின் பிணை மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் நீதிபதி ஏ.ஆர்.ஜோஷி முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கை பொறுத்தவரை யில், ஆவணங்களும், சாட்சியங் களும் புத்தகமாக தொகுக்கப்பட்டு, அவற்றின் பிரதிகள் இரு தரப்பின ருக்கும் வழங்கப்பட்டு விட்டது. ஆகையால், அவற்றை ஆய்வு செய்ய தங்களுக்கு 3 வாரம் அவகாசம் அளிக்க வேண்டும் என்று சல்மான்கான் தரப்பு சட்டத் தரணி கோரினார்.

ஆனால், 3 வாரம் அவகாசம் அளிக்க மறுத்த நீதிபதி, வருகிற 13ஆம் திகதி வரை அவருக்கு அவகாசம் அளித்து உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் விசார ணையின் போது சல்மான்கான் நீதிமன்றில் ஆஜராகவில்லை. அவ ருடைய சகோதரி ஆல்வீரா நீதி மன்றுக்கு வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் மீள் வருகை எமக்குச்சவால் இல்லை

## ஐ.தே.கவின் பிரதிப் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)



**முன்னாள் ஜனாதிபதி மகந்த ராஜபக்ஷவை தேர்தல் போட்டிக் களத்திற்கு வரவேற்கின்றோம். அவரது மீள்வருகை எமக்கு சவால் அல்ல. நாம் போட்டிக்கு தயாராகவே உள்ளோம். இம்முறை தேர்தலில் ராஜபக்ஷவினரின் அரசியலுக்கு முடிவு கட்டும் முகமாக, வரலாற்றில் தடம்பதிக்கும் வகையில் 22 இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் மகந்த தலைமையிலான அணியைத்தோற்கடிப்போம்என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி பொதுச செயலாளரும், அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.**

மக்களினால் நிராகரிக்கப்பட்ட தலைவர் மீளவும் அரசியலில் பிரவேசிப்பதனால் எமக்கு எந்த பிரச்சினையும் இல்லை. இம்முறை தேர்தலில் பெரும்பான்மை வெற்றியை பெற்று நாமே ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடப்போவதாக உத்தியோக பூர்வமாக நேற்று முன்தினம் அறிவித்திருநத்தார். இந்த அறிவிப்பு தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார். எனவே மகிந்தவை தேர்தல் போட்டி களத்திற்கு நாம் வரவேற்கின்றோம். பாராளுமன்ற தேர்தலில் அவர் தாராளமாக போட்டியிடட்டும். இதில் எமக்கு எந்த பிரச்சினையும் இல்லை.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 18 இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றிப்பெற்றிருந்தார். அதேபோன்று கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, சுமார் நான்கு இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் தோல்வி கண்டிருந்தார். எனவே 18 இலட்சம் வாக்குகளினால் வெற்றிக் கொண்டிருந்த மகிந்த ராஜபக்ஷ, நான்கு இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் தோல்வியும் கண்டார். எனினும் இம்முறை பாராளுமன்ற தேர்தலின் போது மேற்குறித்த இருதொகையையும் சேர்த்து, 22 இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் வரலாற்று ரீதியான தோல்வியை மகிந்த ராஜபக்ஷவிற்கு நாம் பெற்றுக் கொடுப்போம்.

இந்நிலையில் மக்கள் தோல்வி அடையச்செய்த, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வருகை எமக்கு ஒருபோதும் சவாலாக அமையாது. இந்த பாராளுமன்ற தேர்தலில் மகிந்தவின் வருகையினால் நாம் அச்சம் அடைய மாட்டோம்.

சுமார் பத்து வருடமாக நாட்டை ஆட்சி செய்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் செய்ய முடியாததை பாராளுமன்றத்தின் சிறுப்பான்மை அரசாங்கம் என்ற வகையில் பல சாதனைகளை நாம் படைத்துளளோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய ஆட்சியில் மக்களுக்கு பல்வேறு சலுகைகளை பெற்றுக் கொடுத்தோம். அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க முடியாது என்று அலட்டிக் கொண்டிருந்த முன்னைய அரசின் செயற்பாட்டிற்கு பதிலளிக்கும் வகையில், இடைக்கால வரவு செலவு திட்டத்தின் ஊடாக அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தோம்.

மேலும் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையிலுள்ள சர்வாதிகார போக்குடன் கூடிய அதிகாரங்களை நீக்கினோம. எனினும் தேர்தல் மறுசீரமைப்பினை எம்மால் செயற்படுத்த முடியாமல் போனது. அத்தோடு மேலும் பல முக்கியமான சட்டமூலங்களை எம்மால் கொண்டு வருவதற்கு மகிந்த ஆதரவு அணியினர் பெரும் தடையாக இருந்தனர்.

மக்களுக்கு பல்வேறு சலுகைகளை பெற்றுக்கொடுக்க போராடிய போதிலும் அதற்கு எதிர்க்கட்சிகள் இடமளிக்கவில்லை. எனவே நாட்டின் நலனை கருத்திற் கொள்ளாது தனது சுய நலனுக்காக மீளவும் ஆட்சிப்பீடமேற மகிந்த ராஜபக்ஷ முனைகின்றார். மேலும் திருடர்கள் தம் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டிலிருந்து மீளுவதற்காக மகிந்தவை துரும்பு சீட்டாக பயன்படுத்தி வருகின்றனர். எனவே மகிந்தவை தோற்கடித்து, இலங்கையை பொருளாதார ரீதியாக வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு வருவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# செல்ஃபி



கபிலன், பருத்தித்துறை.



ரதீஸ்குமார், தெல்லிப்பழை.



சஜீப், மல்லாவி.



கம்ராஜ் ரவிச்சந்திரன்



கஜீபன், யாழ்ப்பாணம்.

உங்கள் செல்ஃபிகளை
photosofvalampurii@gmail.com
என்னும் முகவரிக்கு உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.
சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு

உங்கள் செல்பிக்கள் ஏதும் பொருள் கூறுவதாயோ அல்லது வித்தியாசமான பின்புலத்திலோ இருக்குமாறு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவற்ற சினேகிதனிடம் சேர்வதை விட புத்திசாலியான விரோதியை அடைவதே மேல். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நாட்டின் அமைதிச் சூழ்நிலை தென்பகுதி மக்களின் கைகளில்

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ள நிலையில், எதிர்வரும் பொதுத் தேர்தல் கடுமையான பலப் பரீட்சையாக இருக்கும் என்பது நிறுதிட்டமான உண்மை.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் போட்டியிடுவதற்கு மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுமதி வழங்க முடியாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதிப்படத் தெரிவித்து விட்டார்.

இந்நிலையில் மகிந்த ராஜபக்ஷ மற்றொரு அரசியல் கட்சியில் போட்டியிடுவார் என்று கூறலாம்.

இத்தகையதொரு சூழ்நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இரண்டாகப் பிளவுபடக்கூடிய வாய்ப்பு உண்டு என்று கூறுவோரும் உளர்.

எதுவாயினும் நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தன்னைப் பிரதமர் வேட்பாளராக மையப்படுத்தி போட்டியிடுவார் என்பதும் உண்மை.

இத்தகையதொரு சூழ்நிலையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடக்கூடிய வாய்ப்பு உண்டு.

எதுவாயினும் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றியீட்டியதன் காரணமாக இலங்கை முழுவதிலும் சமாதானம், அமைதி, இன ஒற்றுமை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் மீண்டும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுத் தேர்தலில் போட்டியிடுகிறார் என்ற செய்தி சமாதானத்தை விரும்பும் மக்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

துன்பம் மீண்டும் தொடரப் போகிறதா? என்ற ஏக்கத்தின் மத்தியில், இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அமைதிநிலையை-இனஒற்றுமைக்கான சூழ்நிலையை சிதையாமல் பாதுகாக்கும் மிகப்பெரிய பொறுப்பு தென்னிலங்கை மக்களிடமே உண்டு.

இரண்டாம் உலகப்போரில் பிரித்தானியாவுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்த வின்சன் சேர்ச்சில் அடுத்த தேர்தலில் தோற்றுப் போனார்.

யுத்தப் பிரியரான வின்சன் சேர்ச்சிலை மீண்டும் பிரதமராக்கினால் பிரிட்டன் தொடர்ந்தும் யுத்தம் செய்யும் நாடாகவே இருக்கும்.

எனவே இனி அமைதியை ஏற்படுத்தக்கூடிய ஒருவரை பிரதமராகத் தெரிவு செய்வதே புத்திசாலித்தனம் என்று பிரிட்டிஷ் மக்கள் நினைத்து அதன்படி செயற்பட்டனர். பிரிட்டிஷ் மக்கள் நினைத்தது போல இலங்கையின் தென்பகுதி மக்களும் நினைக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் போர் நடத்தி வன்னிப் பெருநிலப்பரப்பில் மிகப் பெரியதொரு மனித வதையை செய்த எவரும் ஆட்சியிலிருப்பது மீண்டும் இந்த நாட்டில் இனவாதத்தை; இனந்தெரியாத படுகொலைகளை; ஆட்கடத்தல்களை ஏற்படுத்தும் என்ற உண்மையை உணர்ந்து அதற்கேற்றவாறு தங்கள் வாக்குகளை தென்பகுதி மக்கள் பயன்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்நாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும் என விரும்புகிறார். அவரின் விருப்பம் நிறைவேற வேண்டுமாயின், அந்த விருப்பத்தைக் கொண்டவர்களே பிரதமராக, அமைச்சர்களாக, பாராளுமன்ற உறுப்பினர்களாக இடம்பெற வேண்டும். அப்போது தான் இலக்கை அடைய முடியும்.

இதைவிடுத்து யுத்தம் நடத்திய மமதையில் குளுப்பத்தி இருப்பவர்கள் மீண்டும் அரசியலுக்கு வருவதற்கு பொதுமக்கள் சந்தர்ப்பம் கொடுப்பார்களாயின் இலங்கையில் அமைதி என்ற பேச்சுக்கு இடமேயிராது என்பதால்,

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தென்பகுதி மக்கள் மிகவும் நிதானமாகச் செயற்பட வேண்டும்.

## 14500 மைல் வேகத்தில் பறந்த மர்மப் பொருள்

### வேற்றுக்கிரகவாசிகள் வந்தார்களா?

(புளோரிடா)

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் வானத்தில் பறந்த மர்ம பொருள் ஒன்றை படம் பிடித்துள்ளது. இந்த பொருள் வானத்தில் ஒளியை உமிழ்ந்தபடி 14.500 மைல் வேகத்தில் பாய்ந்து சென்றதாக நாசா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை நாசாவின் 5 கமராக்கள் படம்பிடித்துள்ளன.

மேலும். இது விண்கல்லாக இருக்கலாம் என்று முதலில் கருதப்பட்டது. விண்கல்லாக இருந்தால் புவியீர்ப்பு விசை காரணமாக அது பூமியை நோக்கி வரும். ஆனால். இது புவியீர்ப்பு விசைக்கு எதிராக பறந்து சென்றது.

விண்கல் என்றால் 20.000 மைல் வேகத்தில் பூமியை நோக்கி வந்திருக்க வேண்டும். எனவே. இது வேறு எதோ மர்ம பொருள் என்று கருகின்றனர்.

இதனை நேரில் கண்ட நூற்றுக் கணக்காணோர் முதலில் தீப்பிடித்த விமானம் என நினைத்தனர். ஒரு வேளை வேற்று கிரகவாசிகள் தங்கள் வாகனத்தில் வந்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

அவ்வப்போது அமெரிக்காவின் பல பகுதிகளில் வேற்றுக் கிரகவாசிகளின் விண்கலம் சென்றதை கண்டதாக பலர் கூறியிருக்கின்றனர். ஆனால். இது பற்றி எந்த கருத்தையும் நாசா வெளியிடவில்லை. (இ-7)

## கட்டுரைத்தொகுதி வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மு.அநாதரட்சகனின் சமூகவெளி தரிசனங்களும் பதிவுகளும் கட்டுரைத் தொகுதி வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30,மணிக்கு யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் சாகித்தியரத்னா தெணியான் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வெளியீட்டுரையை சட்டத்தரணி சோ.தேவராசா நிகழ்த்துவார். (இ-3)

## டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பம்

மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறிக்கான விரிவுரைகள் நாளை 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முகாமைத்துவ மண்டபத்தில் ஆரம்பமாகும் என அதன் இணைப்பாளர் பேராசிரியர் க.தேவராஜா அறிவித்துள்ளார். இதில் தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாணவர்களையும் பங்குகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ)

## பொதுக்கூட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவிலுள்ள சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளதால் பேருந்து உரிமையாளர் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் ஜே.பிலிப் றேமன் அறிவித்துள்ளார். (இ-3-15)

## பேருந்து சேவைகளுக்கான நேர அட்டவணை தயாரித்தல்

வடமாகாண போக்குவரத்து அமைச்சின் ஏற்பாட்டில் வடபிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளர்களும் தனியார் போக்குவரத்துச் சபை முகாமையாளர்களும் இணைந்து பேருந்து சேவைகளுக்கான நேர அட்டவணையைத் தயாரிக்கவுள்ளனர்.

இது தொடர்பான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை 3ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலக மகா நாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என வடமாகாண போக்குவரத்து அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய 5 மாவட்டங்களின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-15)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### அறிவாளியாக இருங்கள்

★ போதுமென்ற மனப்பான்மை உள்ளவனாக இரு. மக்களில் நீயே நன்றியுள்ளவன்.

★ மனத்தை அடக்கியாண்டு மறுமைக்கு பயன்படும் பணிகளைச் செய்பவனே அறிவாளி.

★ மனம் போன போக்கில் நடந்து கொண்டு இறைவன் அருளை எதிர்பார்ப்பவன் முட்டாள்.

★ ஒரு காரியத்தை நீர் செய்ய விரும்பினால், அதன் முடிவை எண்ணிப்பாரும். உம் சிந்தனையில் அதன் முடிவு நல்லதாக இருந்தால் அதைச் செய்வீர்.

★ சுகபோகம் தேடும் நோக்கத்துடன் மார்க்கத்தை பயன்படுத்தாதீர்கள். அது மார்க்கத்திற்கு களங்கம் ஏற்படுத்தும்.

★ திருக்குர்ஆனை சுமப்பவர்களுக்கும், அறிவுத்துறை பயிற்சியாளர்களுக்கும் எதிராக உமது நாவை பயன்படுத்தாதீர்கள். ஏனென்றால் நரகத்தில் நாய்கள் உம்மைத் தாக்கக் கூடும்.

★ பழித்துரைத்தல். ஒழுக்கம் கெட்ட முரட்டுத்தனமான பேச்சுக்கள் ஆகிய இரண்டும் நயவஞ்சகத்தின் இரு கிளைகளாகும்.

## மூன்று நூல்கள் வெளியீட்டு விழா


(யாழ்ப்பாணம்)

லண்டன் வழக்கறிஞர் செல்வத்தம்பி சிறீக்கந்தராசா எழுதிய இனிக்காதா இலக்க ணம், ஆங்கிலம் பிறந்த கதையும் வளர்ந்த கதையும் மற்றும் ஆங்கிலம் மூலம் தமிழ் ஆகிய மூன்று நூல்கள் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் சி.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும் இந்நூல் வெளியீட்டு விழாவில் பேராயர் கலாநிதி சு.ஜெபநேசன் வெளியீட்டுரையை நிகழ்த்துவார்.

இனிக்காதா இலக்கணம் நூலின் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை விரிவுரையாளர் ஈஸ்வரநாதபிள்ளைகுமரனும் ஆங்கிலம் பிறந்த கதையும் வளர்ந்த கதையும் நூலின் ஆய்வு ரையை பலாலி ஆசிரிய கலாசாலை ஓய்வுநிலை அதிபர் கவிஞர் சோ. பத்மநாதனும் ஆங்கிலம்மூலம் தமிழ் நூலின் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக மொழி பெயர்ப்புக் கற்கைகள் இணைப்பாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (இ-3)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து



### குற்றச்சாட்டை சமாளித்தல்

யாராவது உங்கள் மீது குற்றம் சுமத்தினால் சாதாரணமாக நீங்கள் என்ன செய்வீர்கள்? பதிலுக்கு அவர்கள் மீது குற்றம் சுமத்துவீர்கள் அல்லது உங்களுக்குள்ளேயே ஒரு எதிர்ப்பை ஏற்படுத்திக்கொள்வீர்கள்.

யாரோ ஒருவர் உங்கள்மீது குற்றம் சாட்டுகிறார் என்றால் உங்கள் மனநிலை எப்படி இருக்கும்? உங்கள் மனம் புண்படும். வருத்தமாக இருக்கும். மனதில் ஒரு சுமை. இதெல்லாம் ஏனென்றால் நீங்கள் அதைத் தடுத்துக் கொண்டிருப்பீர்கள்? நீங்கள் தடுப்பது மேலும் மேலும் வரும்.

குற்றச்சாட்டை எதிர்த்துப்போராடுவதால் உங்கள் மனம் புண்படுகிறது.

யாராவது உங்களைக் குற்றம் சாட்டும்போது அவர்கள் உங்களிடமிருந்து சில கெட்ட கர்மாக்களை எடுத்து விடுகிறார்கள். இதை நீங்கள் புரிந்து கொண்டால் மகிழ்வீர்கள்.

ஒருவர் உங்களைக் குற்றஞ்சாட்டும்போது எதிர்ப்பை வழுங்கினால் வெளிப்படையாக எதிர்ப்பதைக்காட்டிலும் அல்லது உங்களுக்குள்ளேயே எதிர்த்தாலும் உங்களது கெட்ட கர்மாக்களை அவர்கள் எடுக்க முடியாதபடி செய்து விடுகிறீர்கள்.

வெளிப்படையாக நீங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதே நல்லது. ஆனால் உங்களுக்குள்ளேயே எதிர்ப்பது வேண்டாம். எதிர்ப்பை வெளிப்படையாகத் தெரிவிப்பதன்மூலம் இலேசாகிவிடுகிறீர்கள். நல்லது. என்னைக் குற்றஞ்சாட்டவும் என்னிடமிருந்து சில கெட்ட கர்மங்களை எடுக்கவும் ஒருவர் இருக்கிறார் என்று மகிழ்வீர்கள்.

அறியாமையினால் ஒருவன் "என்னைக் குற்றம் சாட்டாதீர்கள்" எனச் சொல்கிறான். ஏனென்றால் அது அவனைப் புண்படுத்துகிறது. ஞானியும் "என்னைக் குற்றம் சாட்டாதே" என்று சொல்கிறார். ஏனென்று உங்களுக்குத் தெரியுமா? அது குற்றம் சொல்பவர்களையேதான் புண்படுத்தும் ஆகவே நீங்களும் ஒருவரைப் பார்த்துக் கோபத்தினால் அல்லது பரிவினால் உங்களைக் குற்றம்சாட்டவேண்டாம் என்று சொல்லலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புங்குடுதீவு நசரேத் ச.ச.நிலைய

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி தம்பாட்டி அணி சம்பியன்







புங்குடுதீவு நசரேத் சனசமூக நிலையமும் நசரேத் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி தீவகத்தில் உள்ள 24 அணிகளுக்கிடையில் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்று இறுதிப்போட்டிக்கு புங்குடுதீவு சண்ஸ்ரார் அணியும் தம்பாட்டி காந்திஜி அணியும் தெரிவாகி இரு அணிகளுக்குமிடையிலே போட்டி மிகவும் சுறுசுறுப்பாகவும் விறுவிறுப்பாகவும் புங்குடுதீவு நசரேத் மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் தம்பாட்டி அணி வெற்றி பெற்று சம்பியனானது. (க)

## வல்வெட்டித்துறை நெற்கொழு அணி இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது

வடமராட்சி கரவெட்டி ஞானம்ஸ விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் அணிக்கு 8 ஓவர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் ஞானம்ஸ் விளையாட்டுக்கழக





மைதானத்தில் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் பருத்தித்துறை ரொக்கெட் அணியை வெற்றிபெற்று வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகு அணி இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப் பெடுத்தாடிய கழுகு அணி 7.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 46 ஓட்டங்களை பெற்றது. இதில் செந்தூரன் 18, பவன்10 ஓட்டங்களை பெற்றனர் ரொட்கெட் அணி சார்பாக பிரதீப் 3, கஜேந்தி 2 வக்கெடுக்களை விழ்த்தினர். பதிலுக்கு ஆடிய ரொக்கெட் அணி 6 ஓவரகளில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 23 ஓட்டங்களை பெற்றது. இதில் பிரதீபன் 9, கஜன் 6 ஓட்டங்களைபெற்றனர்.

கழுகு அணியின் பந்து வீச்சின் சார்பில் செந்தூரன் 4, பவன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இறுதி யில்24 ஓட்டங்களினால் நெற் கொழு கழுகு வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது. (க)

## சோளங்கன் கிரிக்கெட் இறுதிப்போட்டி ஞானம்ஸ் - மைக்கல் இறுதிப்போட்டியில்

வடமராட்சி கரணவாய் சோளங்கன் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவந்த அணிக்கு ஐந்து ஓவர் ஆறுபேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட







டத்தில் 30 பேருக்கு மேற்பட்ட கழகங்கள் பங்கு பற்றின.

இதன் அரையிறுதிப்போட்டிகள் அண்மையில் கரணவாய் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

முதலாவது போட்டியில் கொக்குவில் ஸ்ரீகாமாட்சி அணியை வெற்றி பெற்று கரவெட்டி ஞானம்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இரண்டாவது போட்டியில் இணுவில் கலைஒளி அணியை வெற்றி பெற்று மாலுசந்தி மைக்கல் அணி இறுதிப்போட்டிக்கு தெரிவாகியுள்ளது. (க)


# விளையாட்டு உபகரணம் கையளிப்பு

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் HOPE செயற்றிட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள இளைஞர் கழகங்களுக்கு வழங்கப்பட்ட விளையாட்டு உபகரணங்களில் இருந்து ஒரு தொகுதி உபகரணங்கள் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு வழங்கப்பட்டது.

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ்.ரஜீவன், வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன் ஆகியோர் இதனைக் கையளிக்க பாடசாலை அதிபர் கு.விமலன் பொறுப்பாசிரியர், மாணவர்கள் இணைந்து பெறுக்கொண்டனர்.

அண்மையில் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து இவை கையளிக்கப்பட்டன. (க-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாவட்ட ரீதியான உதைபந்து

# டையமன்ஸ் - சென்.சேவியர் இன்று மோதல்





மாதகல் புனித தோமையார் தேவாலயத்தின் பெருவிழாவையும் புனித தோமையார் இளைஞர் கழகத்தின் 11 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டும் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்துகின்ற உதைபந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டிக்கு யாழ்.மாவட்டத்தின் இரு பலம் பொருந்திய அணிகளான வதிரி டையமன்ஸ் அணியை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் அணி இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கழக மைதானத்தில் மோதவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்திரனாக முழுங்காவில் பங்குத்தந்தை ஆனந்தகுமாரும், கௌரவ விருந்தினராக சுண்டுக்குழி திருமுழுக்கு யோவான் ஆலய பங்குத் தந்தை கிறிஸ்தோப்பரும் கலந்து கொள்ளவுள்ளனர். (கு)

# இம்புளுவன்ஸா வைரஸ் தொற்று 113 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்

## வைத்தியசாலை பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

இம்புளுவன்ஸா வைரஸ் தொற்றுக்கு இலக்கான 113 பேர் இதுவரையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் பசுபதிராஜா பவானி தெரிவித்தார்.

குறித்த வைரஸ் தொற்று யாழ்ப்பாணத்தினை பெருமளவில் தாக்காவிட்டாலும் கர்ப்பிணி பெண்கள் மற்றும் 2 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் இது தொடர்பில் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்புளுவன்ஸா வைரஸ் தொற்றுக்கு இலக்கானவர்கள் பெரும்பாலும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றார்கள்.

குறிப்பாக வெளிமாவட்டத்தில் இருந்தும் குறித்த வைரஸ் தொற்று காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகைதருகின்றனர்.

இதன்படி கடந்த மே மாதம் 16 குழந்தைகள், 11 கர்ப்பிணித்தாய்மார், 21 இளம் வயதினரும் இந்நோய் தொற்று காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று கடந்த யூன் மாதம் 19 குழந்தைகளும், 15 கர்ப்பிணகளும், 31சாதாரண வயதுடையவர்களும் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்றுவரை இத்தொற்றுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களுடைய தொகை 113 ஆவதாக காணப்படுகிறது.

இருப்பினும் தற்போது 9 குழந்தைகளும், 8 கர்ப்பிணிகளும், 4 சாதாரணவயதினை உடையவர்களும் மட்டுமே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இந்நோய் தொற்றுக்கு இலக்காகி வைத்தியசாலைக்குவருபவர்களுடைய தொகை குறைவடைந்துள்ளது. அதிகமானவர்கள் கிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர். சிகிச்சை பெற்ற அனைவருக்கும் நோய் தடுப்புமருந்துகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி நோய் தொற்றுக்கு இலக்கானவர்களின் இரத்தமாதிரிகளும் பாரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

காய்ச்சல, தடிமன் போன்ற நோய தாக்கத்தினை உடைய நீர்பீடணம் குறைந்த அல்லது நீண்டகால நோய் வாய்ப்பட்டவர்கள், கர்ப்பிணித்தாய்மார் மற்றும் 2 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் உடனடியாகஉரிய வைத்தியசாலையினை நாடுமாறும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (எ-4)

## அமைச்சுப்...

ராஜாங்க அமைச்சரகளுக்கும் அதிகாரம் உண்டு.

இதன்படி, பிரதி அமைச்சர் மற்றும் அமைச்சரவை அமைச்சர் பதவிகள் அதிகாரமிழந்து விட்டதாக வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அண்மையில் தேர்தல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை அமைச்சு, பிரதி அமைச்சு மற்றும் ராஜாங்க அமைச்சு பதவிகளுக்கு அதிகாரம் உண்டு என அண்மையில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## மகிந்தவுக்கு இடமில்லை...

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி யில் போட்டியிட மகிந்த ராஜபக்ஷவுக்கு வாய்ப்பு அளிக்க ஏற்கெ ன வே ஜனாதிபதி மறுப்புத் தெரிவித்திருந்தார். இந்நிலையில் அக்கட்சி பிரதான அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட மகிந்தவுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என பங்காளிக் கட்சிகள் சில வலியுறுத்தின.

இந்நிலையில் நேற்று வியாழக்கிழமை மாலை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடந்த கூட்டத்தில் மகிந்த ராஜபக்ஷவை வேட்பாளராகக் களமிறக்கும் யோசனைய முன்வைத்தனர்.

ஆனால் இந்த யோசனையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முழுமையாக நிராகரித்து விட்டார். எது எப்படியானாலும் வேறு ஒரு கட்சி மூலமாவது மகிந்த ராஜபக்ஷ இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவார் என்றும் இன்று காலைக்குள் இது தொடர்பில் இறுதி முடிவை அறிவிப்பார் என்றும் தெரிய வருகின்றது.

முன்னதாக பிரதமர் வேட் பாளர் பதவி வழங்கப்படாது எனினும் வேட் பாளராக போட்டியிட முடியும் என ஜனாதிபதி இணங்கியிருந்தார்.

எனினும், எழுந்த எதிர்ப்பு காரணமாக வேட்பாளராக போட்டியிடவே அனுமதியளிக்கப்பட மாட்டாது என அறிவித்துள்ளார்.

இதன்படி, மகிந்த தனியான கட்சியொன்றில் போட்டியிடுவார் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவுறும் நிலை காணப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (எ-11)


பிரயோக ஆங்கிலம்
PRACTICAL ENGLISH
ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
வகுப்பிடம் : யாழ்நகர், திருநெலவேலி
விபரங்களுக்கு : 077 3212711
(இ)


# அநு.சிறையில் அனந்தி சசிதரன்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் நேற்றுக் காலை அநுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்றுள்ளார்.

அநுராதபுரம் சிறைசாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை சந்தித்து புலம்பெயர் தமிழர் ஒருவரின் நிதியுதவியில் கொள்வனவு செய்யப்பட்ட ஆடைகள் சிலவற்றையும் அவர்களிடம் கையளித்துள்ளார்.

இதேவேளை தமது வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தங்கள் குடும்பங்களுக்கு உரிய உதவிகளை செய்துகொடுக்கும்படியும் அரசியல் கைதிகள் அனந்தியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-11)

## எந்தச்...

பொருள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கும் நாடளாவிய ரீதியிலான வேலைத்திட்டம் அடுத்த சில வாரங்களில் அமுலுக்கு கொண்டு வரப்படும் எனவும் ஜனாதிபதி. மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## மு.காவினர் ஐ.தே.கவுடன்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்தே தேர்தலில் போட்டியிட திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி அலுவலகத்தில் கட்சியின் தலைமையையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்த பின்னர் நிருபர்கள் சிலருக்கு கருத்து தெரிவித்துள்ள அவர்,

தனது கட்சி ஐக்கிய தேசிய கட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கட்சி முதலில் தனியாக போட்டியிட தீர்மானித்திருந்தது. எனினும் பின்னர் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதே கட்சிக்கு சாதகமான விடயம் என கட்சி தீர்மானித்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)


கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம்
நடத்தும்
பௌர்ணமி விழா
இடம்: ஜெயச்சந்திரன் கலையரங்கு
காலம்: இன்று 03.07.2015 (வெள்ளிக்கிழமை)
நேரம்: மாலை 7.00 மணி
தலைவர்
திரு.R.கருணாகரன்
பிரதம விருந்தினர்
திரு.தம்பிஐயா பஞ்சநாதன்
(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர், மத்தியஸ்தர் சபை உறுப்பினர், சமாதான நீதவான்)
சிறப்பு சொற்பொழிவு
திரு.மா.கிருஷ்ணகாந்தன்
(ஓய்வுபெற்ற சிரேஷ்ட ஆசிரியர்)
"தீதும் நன்றும் பிறர்தர வாரா"
இ



விற்பனைக்கு
எம்மிடம் கோயில் தேவைக்கேற்ப பித்தளை சில்வர் பொருட்கள், வட்டு விசேஷங்களுக்கான பரிசுப்பொருட்கள், பாத்திரங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.
சிறிசக்தி மாடம்
கச்சாய் வீதி,
கொடிகாமம்.
021 491 1830


# 14 ஆவது கிளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

மாற்றுத் திறனாளிகளுக்கு கருணை உதவிகளை வழங்கும் சிவன் வலது குறைந்தோர் நிலையம் தனது 14 ஆவது கிளையை பொலநறுவையில் ஆரம்பிக்கவுள்ளது.

நாடு தழுவிய ரீதியில் இன, மொழி, மத, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் இயங்கும் இந்நிறுவனத்தினை கணேஷ்வரன் வேலாயுதம் தனது சொந்த செலவில் நடத்தி வருகின்றார்.

இந்நிறுவனம் மூலம் இலவசமாக வலது குறைந்தவர்கள் பராமரிக்கப்படுவதுடன் மருத்துவ வசதிகளும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மகிந்தவை...

பக்ஷ அறிவித்த நிலையில், நேற்று முன்தினம் புதன்கிழமை கட்சியின் புதிய அமைப்பாளர்களுக்கு நியமனங் களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தன துரையில் குறிப்பிடுகையில், தனித்துப் போட்டியிடும் தமது நிலைப்பாட்டை மாற்றியமைப்பதற்கான ஒரு சூழநிலை இதுவாகத்தான் இருக்கும்.

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணி அமைப்பது குறித்து பேச்சு நடத்த ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமர விக்கிரமவிடம் இருந்து அழைப்பு வந்துள்ளது. அடுத்த இரண்டு நாட்களுக்குள் அங்கு சென்று பேச்சு நடத்துவேன்.

எவ்வாறாயினும் எமது நிலைப்பாடு உறுதியானது. எமது முடிவை அவர்களுக்குத் தெரியப்படுத்துவேன்.

எம்மால் குறைந்தது ஒரு மில்லியன் வாக்குகளை பெற முடியும் என்று நாம் நம்புகிறோம். 20 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## விசேட தேவையுடைய மாணவர்களுக்கு நாளை நேர்முகத் தேர்வு

### யாழ்.வலயத்தில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

2015ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தரம் மற்றும் 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றுக்குத் தோற்றுகின்ற விசேட தேவையுடைய மாணவர்களுக்கு சலுகை வழங்கப்படுவதற்கான நேர்முகப் பரீட்சை நாளை 4 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிகக்கு யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் நடைபெறும்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த, மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு நடைபெறும்.

இந்நேர்முகப் பரீட்சையின் போது, விசேட தேவையை உறுதிப்படுத்தும் மருத்துவச் சான்றிதழ்களும் அதனுடன் தொடர்புடைய ஏனைய சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சலுகைக்கு விண்ணப்பிக்காத விசேட தேவையுடைய மாணவர்களும் இந்நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற முடியும்.

எனினும் அவர்கள் விசேட தேவையை உறுதிப்படுத்தும்சான்றிதழ்களை சமர்ப்பிப்பது கட்டாய மானதாகும் என்றும்அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## தனிக் கூட்...

போட்டியிடுவது உசிதமானது.

உள்ளே இருந்து கொண்டு குழி வெட்டியதன் காரணமாகவே மகிந்த ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்தார்.

இதேவேளை, முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்க கூட ஓர் தடவை வண்டிச் சில்லு சின்னத்தில் போட்டியிட்டிருக்கின்றார் என பசில் தெரிவித்துள்ளார்.

மேலும், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி ஒன்றை அமைக்க விரும்புவோரே இன்று சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## வீணைச் சின்னத்...

சித் தலைவர்கள் பலரை தான் சந்திக்கவுள்ளதாகவும், அதன் பிறகே கட்சியின் முடிவு வெளியாகும் எனவும் தெரிவித்தார்.

கொழும்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரையும், முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் சந்திரிகா குமாரதுங்க ஆகியோரை தான் சந்திக்கவுள்ளதாகவும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இருந்தபோதிலும் கடந்தகால அனுபவங்கள் மற்றும் தமது ஆதரவாளர்களின கோரிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை தமது கட்சியின் சின்னத்திலேயே போட்டியிட வேண்டும் என ஈ.பி.டி.பியின் பொதுச்சபைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது எனவும் கூறினார்.

அதேவேளை பல கட்சித் தலைவர்கள் கடந்தகால உறவுகளின் அடிப்படையில் தன்னுடன் கலந்துரையாட கொழும்பு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர் என்றும் அந்தப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் இறுதி நிலைப்பாடு அறிவிக்கப்படும் எனவும் ஈ.பி.டி.பி கட்சியின் செயலர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (எ-4)

## அரச வாகனத்து...

அரசாங்கத்தில் இருக்கின்ற அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் பாதுகாப்பு சரிபாதியாக குறைக்கப்பட்டுள்ளது என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது. (எ-11)

## மகிந்தவுக்கு எதி...

ராஜபக்ஷ மீண்டும் இனவாத பிரசாரங்களை ஆரம்பித்துள்ளதாக தொழிற சங்க கூட்டணியின் தலைவர் சமன் ரத்ன பிரிய தெரிவித்தார். (எ-11)

## கொலைக் குற்றவாளிகள்...

அரச தரப்பு சாட்சிகளை நெறிப்படுத்தினார்.

அரச தரப்பு சாட்சிகள் அளித்த சாட்சியங்களின் அடிப்படையில் இறந்தவருடைய மனைவி நாகபூபதியும் இறந்தவருடைமய மகன் கேதீஸ்வரனும் குறிக்கப்பட்ட கொலை 5 நிமிடத்தில் நடந்து முடிந்ததென நீதிமன்றத்தில் தாங்கள் அளித்த சாட்சியத்தின்போது தெரிவித்திருந்தனர்.

இந்த வழக்கில் அளிக்கப்பட்ட, மருத்துவ சாட்சியத்தில் மொட்டையான ஓர் ஆயுதத்தினால் இறந்தவருடைய வயிற்றுப் பகுதியில் பலமாக அடிக்கப்பட்டதனால் குடலில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாக மரணம் சம்பவித்துள்ளது என்றும், இறந்தவருடைய காலில் ஒரு கிழிவு காயம் காணப்பட்டாதகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணையின்போது எதிரிகள் தரப்பில் சாட்சியமளிக்கப்படவில்லை. எதிரிகள் இருவரும் குற்றவாளி கூண்டில் நின்று வாக்குமூலம் ஒன்றை அளித்தனர்.

நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட சாட்சியங்கள், எதிரிகளின் வாக்குமூலங்கள் என்பவற்றை கூர்ந்து அவதானித்த நீதிபதி இளஞ்செழியன், இந்திய உச்ச நீதிமன்ற வழக்கொன்றைச் சுட்டிக்காட்டியதுடன், இலங்கையின் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க, கொகந்தர கொலை வழக்கில் அளித்த தீர்ப்பை மேற்கோள் காட்டி, எதிரிகள் இருவரும் கொலை செய்ய வேண்டும் என்ற பொது எண்ணத்துடன் கொல்லப்பட்டவரைத் தாக்கிக் கொன்றுள்ளார்கள் என்பது நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளது என தெரிவித்து தனது தீர்ப்பை வழங்கியுள்ளார்.

இந்த வழக்கு விசாரணையின் போது, வழக்குத் தொடுனர் தனது தரப்பு சாட்சியங்களை முன்வைத்து எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபித்தபோது, எதிரிகள் குற்றவாளிகளுக்கான கூண்டில் இருந்து கூண்டு கூற்றை மட்டுமே அளித்துள்ளனர் என தெரிவித்துள்ள நீதிபதி இளஞ்செழியன், இலங் கையின் உச்ச நீதிமன்றம், கிருஷாந்தி குமாரசாமி கொலை வழக்கு, ரீட்டா ஜோன் கொலை வழக்கு ஆகிய வழக்குகளின் தீர்ப்புக் களை ஒப்பு நோக்கி, எதிரி கள் மீது சாட்டப்படுகின்ற குற்றச்சாட்டுக்களை நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அரச தரப்பைச் சேர்ந்தது என்பதை மன்று ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்து, இருந்த போதிலும், அரச தரப்பின் சாட்சியங்களை எதிரிகள் மறுத் துரைக்கவோ அல்லது அதற்கு எதிரான சாட்சியங்களை அளிக்கவோ விளக்கமோ அளிக்காததை, மேற்குறிப்பிட்ட வழக்குகளின் தீர்ப்புக்களுடன் ஆய்வு செய்து, இரண்டு எதிரிகளும் குற்றவாளிகளாகக் காணப்பட்டிருப்பதாகத்தெரிவித்து, அவர்களுக்கு மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளார்.

இந்த வழக்கில் அளிக்கப்பட்டுள்ள தீர்ப் பின் பிரகாரம், நாட்டின் ஜனாதிபதியினால் தெரிவு செய்யப்படும்.

இடத்தில், தெரிவு செய் யப்படும் நேரத்தில் இவர்கள் இருவருக்கும் கழுத்தில் தூக்கு மாட்டி, தூக்குத் தண்டனை நிறைவேற்ற வேண்டும் என்றும் நீதிபதி தமது தீர்ப்பில் ஆணையிட்டுள்ளார்.

கடந்த 2006 ஆம்ஆண்டு ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி மந்துவில் கிழக்குகொடிகாமப் பகுதியில் இருவருக்கு இடையில் ஏற்பட் தகராறு காரணமாக இளையவன்குஞ்சையா என்பவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

இச் சம்பவம் தொடர்பில் ஆனந்தம் ஏஸ்லிம் (வயது 41) என்பவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இச் சம்பவம் தொடர்பான வழகக்கு கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தினால் யாழ். மேல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்பட்டது.

குறித் வழங்கினை தொடர்ச்சியாக தற்போது வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக உள்ள அ.பிரேமசங்கர் விசாரணை செய்த காரணத்தினால் இவ் வழக்கிற்கான தீர்பினை வழங்குவதற்கு விசேட நீதிபதியாக பிரதமநீதியரசரால் நியமிக்கப்பட்டிருந்தார்.

இதன்படி நேற்று குறித்த வழங்கு தீர்ப்பிற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. விசா ரணையின் போது மன்றில் ஆஜர் செய்யப்பட்டவர் குற்றவாளியாகக் கண்டு அவருக்கு மரண தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்திருந்தார். (எ-4)


கருத்தரங்கு பொருளியல்

சிரேஸ்ட ஆசான்
பொருளியல் உதயன்

★ பதிவினை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.
★ வெளிமாணவர்களும் பங்குபற்றலாம்.
★ அனைத்து மாணவர்களுக்கும் கையேடுகள் வழங்கப்படும்.
★ நகரின் மத்தியில் இங்கு மட்டுமே ஆசிரியரின் கருத்தரங்கு நடைபெறும்.

ECONOMICS HALL
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
தொடர்பு :- 0776624387
(C-1009)



CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062
(C-1446)



வட இலங்கை சுதேச வைத்திய சபை
விசேட பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

காலம் : 10.07.2015 வெள்ளி மதியம் 12.00 மணி
இடம் : லங்காசித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி மண்டபம்
தலைமை : Dr.சு.ஸ்ரீ.விக்னேஸ்வரா அவர்கள்
(C-1466)

புதியநிர்வாகம் தெரியப்படுவதோடு முக்கியமான முடிவுகளும் எடுக்க வேண்டியிருப்பதால் சகல DAM வைத்தியர்கள் பழைய மாணவர்கள் உட்பட வைத்தியர்கள் நலன்விரும்பிகள் பங்குபற்றுமாறு வேண்டுகிறோம்.
- நன்றி

வட இலங்கை சுதேச வைத்திய சபை



IMMEDIATE VACANCY FOR –
MEDICAL OFFICER -
Out Patient Department (OPD)



Ruhbins Hospital (Pvt) Ltd is seeking for OPD doctors.
Requirements:
- A MBBS degree from a recognized university with Sri Lanka medical council registration.
- Retired doctors also can apply.
- Should be able to work under shifts.
- Salary and other benefits are negotiable.

Attractive remuneration packages commensurate with the qualification and experience are on offer to the selected candidates. Interested candidates are requested to forward their CV with contact details of two non-related referees within 07 working days by email. The position being applied for must be clearly mentioned on the subject line of the e-mail. Please call 0773760590 for further clarifications.

Email – admin@ruhbinshospitals.com
Address – Ruhbins Hospital (Pvt) Ltd,
160, Point Pedro Road, Nelliady.
Phone 0212261500
Mobile 0773760590
(C-1461)



வேலைவாய்ப்புக்கள்

Golden group (Advertising)
எமது நிறுவனத்தில் உருவாக இருக்கும் புதிய கிளைகளுக்கான
- மேற்பார்வையாளர்
- விநியோகஸ்தர்
- உதவி முகாமையாளர்
- முகாமையாளர்

போன்ற பதவியாளர்கள் தேவைப்படுகின்றனர்.
O/L இல்லாதவர்களுக்கும் விசேட பதவி வாய்ப்புக்கள் உள்ளன.
O/L, A/L உள்ளவர்கள் உடனே தொடர்பு கொள்ளவும்.
கிளிநொச்சி.முல்லைத்தீவு,வவுனியா.மன்னார்.யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது No. 8.6ம் குறுக்கு தெரு. யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு :- 0779987699 0776219536
(C-1465)



G.A.Q B.A Part -I,II (யாழ்)
B.A பேராதனை (முதலாம் ஆண்டு)

தமிழ்- T.ஜீவானந்தன்
இ/நாகரிகம்- K.சத்தியதாசன்
மெய்யியல்- N.ராமதாஸ்
அரசறிவியல்- T.திருமுருகன்
புவியியல் - S.கிருஸ்ணா
நாட.அரங்கு - S.சிவரூபன்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
04.07.2015 சனி.9.00A.M
மேலதிக தொடர்புகள் - 0772170065

போட்டிப் பரீட்சைக்கான விசேட வகுப்புகள்

சட்டக்கல்லூரி, கலாச்சார அலுவலர் சாரதி பதவி
பிரிவு-1 சனி,ஞாயிறு 9.00-12.00
ஆரம்பம் - 04.07.2015 9 AM
(C-1461)
ஐடியல் கல்லூரி - மானிப்பாய்
கீறின் ஆஸ்பத்திரி பின் வீதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.